இந்திய இலக்கியச் சிற்பிகள்

# பாரதிதாசன்

முருகு சுந்தரம்



பாரதிதாசன்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம். நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

(படம் உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# பாரதிதாசன்

முருகு சுந்தரம்

சாகித்திய அகாதெமி

*Bharathidhasan:* Original monograph by Murugusundaram, Sahitya Akademi, New Delhi, 2007, Rs.25.

© சாகித்திய அகாதெமி
முதல் பதிப்பு: **2007**

ISBN 81-260-2363-5

**சாகித்திய அகாதெமி**

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக்
கட்டடம், டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

குணா பில்டிங்ஸ், 443, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங், நான்காவது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

விலை: ரூ. 25.

அச்சு: சிக்மா கிராபிக்ஸ், சென்னை

| | |
|---|---|
| 1. கல்வியும் ஆசிரியப் பணியும் | 7 |
| 2. பாரதியும் தாசனும் | 19 |
| 3. தேசியக் கவி | 29 |
| 4. புரட்சிக் கவி | 43 |
| 5. தமிழ் மறவர் | 52 |
| 6. இயற்கைக் கவிஞர் | 63 |
| 7. மனித நேயர் | 79 |
| 8. பெண்ணுரிமை பேணியவர் | 85 |
| 9. திரைப்பட நாடக எழுத்தாளர் | 92 |
| 10. இதழாசிரியர் | 99 |
| 11. சில சிறப்புச் செய்திகள் | 106 |
| இணைப்பு | 112 |

# 1
# கல்வியும் ஆசிரியப் பணியும்

எட்டுப் பதினொன்று நாற்பத் தாறிட்ட எழிலுறுநாள்
விட்டுப் பிரிந்ததென் ஆசிரியப் பணி மேலும் எனைக்
கட்டுப் படுத்துவ தொன்றில்லை திங்கள் கடைசிதொறும்
தட்டாது வந்திடும் ஐம்பான் வெண் பொற்காசு சம்பளமே.

பா.குயில் 10.7.67

*சிகரம் போல் செம்மாந்த தோற்றம். முழங்காலைத் தொடும் நீண்ட குப்பாயம். யாருக்கும் குனிந்து பழக்கப் படாத தலை. பயிற்சி பெற்ற மல்லனைப் போன்ற உடம்பு. பணைத் தோள்கள். குறிக் கொண்டு நோக்கும் கூர்த்த பார்வை. வாயில் உள்ள கவிதைக் கனியை உண்ணக் கவிழ்ந்து படுத்திருக்கும் வௌவால் போன்ற பருத்த மீசை. திருவாரூர்த்தேர் மெதுவாகக் குலுங்கி வருவது போன்ற நடை. அன்போடு அதிரப் பேசும் குரல். கூர் முனைகள் கழுத்தின் இருபக்கமும் மார்பில் தொங்கும் காச்மீரச் சால்வை. இதுவே பாவேந்தர் பாரதிதாசன் தோற்றம்.*

புதுவை நகரில் 'பள்ளிக் கூடத்தார்' என்று சிறப்புப் பெயர் பெற்ற சுப்பராய முதலியார் குடும்பம் புகழ்பெற்றது. அக்குடும்ப வாரிசான கனகசபைக்கு இரண்டு மனைவியர். இரண்டாம் மனைவியான இலக்குமி அம்மையாருக்குப் பிறந்தவர், சுப்புரத்தினம் என்ற பாரதிதாசன். இவர் கர ஆண்டு சித்திரைத் திங்கள் பதினேழாம் நாள் புதன் இரவு பத்தே முக்கால் மணிக்குப் பிறந்தார். இது கி.பி. 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் ஆகும்.

கனகசபை புதுவையில் மளிகை மண்டி வைத்து நடத்தி வந்தார். மணிலா, வெங்காயம், கோழிமுட்டை, புட்டியில் அடைத்த

மிளகுரசம், வெற்றிலை முதலியவற்றைக் கப்பலில் பிரான்சு முதலிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார். சுப்புரத்தினத்தின் அண்ணன் சுப்பராயர் சிறந்த சோதிட வல்லுநர். புதுவைச் செல்வர்களின் குடும்பச் சோதிடர். சுப்புரத்தினம் சிறுவராக இருக்கும்போதே வாணிபத்தில் இழப்பு ஏற்பட்டுக் குடும்பம் நலிவுற்றது.

கனகசபையார் குடும்பம் பழுத்த வீரசைவக் குடும்பம். அவருக்கு வள்ளலாரின் மீதும், அவரது சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் மீதும், ஈடுபாடு அதிகம். இச்சங்கத்தின் கொள்கை ஏடான, 'சன்மார்க்க விவேக விருத்தி' இதழ் நடத்தத் திங்கள்தோறும் நிதி உதவுவோர் பட்டியலில் இவரது பெயரும் இடம் பெற்றுள்ளது. கலை, இலக்கியம்,நாடகம் ஆகிய துறைகளில் ஆர்வம் மிக்கவர் கனகசபை. பெரும்புலவர் பு.அ. பெரியசாமி பிள்ளை இவருக்கு நண்பர்.

சுப்புரத்தினம் தம் இளமைக் காலக் கல்வியைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

''அந்தக் காலத்தில் தமிழ்ப்புலவர்களால் தனிமுறையில் நடத்தப்படும் பள்ளிக் கூடங்களுக்குப் பெயர் திண்ணைப் பள்ளிக் கூடம்.

தமிழுக்கும் தமிழ் நெறிகளுக்கும் புறம்பான பள்ளிக் கூடங்களை யெல்லாம் சர்க்கார் பள்ளிக் கூடம்என்பார்கள்.

எனக்கு விவரம் தெரிந்த ஆறு ஆண்டு முதல் பதினேழு ஆண்டு வரைக்கும் எனக்குத் திண்ணைப் பள்ளி தவிர உலகில் வேறு எந்தப் பள்ளியும் தெரியாது.

திண்ணைப் பள்ளிகளில் உரைநடை அரும்பத விளக்கத்தோடு பாடம் நடக்கும். செய்யுள்கள் மூலபாடம் மட்டும் நெட்டுருவாக்கப் படும். மற்றும் பொன்னிலக்கம் எண்சுவடி கருத்தாகச் சொல்லிக் கொடுப்பார் ஆசிரியர்.

பன்னிரெண்டு வயதில் திருக்குறள் 1330 செய்யுள்களும் மனப்பாடம் எனக்கு. குமரேச சதகம் முதலியவைகளும் மனப்பாடம். கணக்கில் என் பள்ளியில் சட்டாம் பிள்ளை நான்!''

புதுவை வட்டாரத்தில் புகழ்பெற்று விளங்கிய திருப்புளிசாமி அய்யாவின் திண்ணைப் பள்ளியில் பல ஆண்டுகள் பயின்ற

சுப்புரத்தினம் இலக்கண இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை பெற்ற தோடு, நாடகத்திலும் நல்ல பயிற்சி பெற்றார். மார்கழித் திங்கள், மாசிமகம் திருவிழாக்களில் இசையோடு பாடும் பாடற்குழுக்களிலும் இடம் பெற்றுச் சிறந்த இசைப் பயிற்சியும் பெற்றார்.

திண்ணைப் பள்ளிக் கூடக் கல்வியை முடித்து உயர்கல்வி பெறுவதற்காகக் கல்வே கல்லூரிக்குச் சென்றார். கலவை சுப்பராயச் செட்டியார் என்பவரால் உருவாக்கப்பட்டது கல்வே கல்லூரி நிறுவனம். ஆங்கிலம், பிரஞ்சு, தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் பயிற்சி அளித்தது இக் கல்வி நிறுவனம்.

தமிழ் ஆசிரிய அலுவலுக்குரிய பட்டப் படிப்பைப் (Brevet de Langue Indigene) பயிலுவதற்காகக் கல்வே கல்லூரியில் நுழைந்தார் சுப்புரத்தினம். வகுப்பு மாணவர்களுள் சுப்புரத்தினம் சிறியவர்; படிப்பில் பெரியவர். அதனால் அரசாங்க உதவித் தொகையும் இவருக்குக் கிடைத்தது. தமிழ்ப் புலவர் தேர்வில் முப்பது பேருக்கு மேல் வெற்றி பெற்றனர். ஆனால் முதன்மையாக வெற்றி பெற்றவர் சுப்புரத்தினம்.

புதுவைக் கல்வி இயக்குநரின் செயலாளராக இருந்த திரு. கையார் என்பவர் கனகசபையின் நெருங்கிய நண்பர். அவர் சுப்பு ரத்தினத்தைக் கூப்பிட்டு, "சுப்பு! தமிழாசிரியர் வேலைக்கு ஒரே ஓர் இடம் தான் காலியிருக்கிறது, அதுவும் நிரவியில்தான். நியாயமாக அந்த இடம் உனக்குத்தான் கிடைக்கவேண்டும். காரணம் நீதான் முதன்மையாகத் தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறாய். அதுவுமல்லாமல் நீ அரசாங்க உதவித் தொகை பெற்றுப் படித்தவன். சட்டப்படி அரசாங்க உதவித் தொகை பெற்றுப் படித்தவனுக்குத்தான் முதற் சலுகை. உன்னிடம் உள்ள ஒரே குறை நீ உருவத்தில் மிகச் சிறியவன்; பொடியன். நீ நேர்முகத்தேர்வுக்கு வரும்போது இரண்டு மூன்று சட்டையணிந்து, அவைகளுக்கும் மேல் ஒரு கோட்டும் அணிந்து வரவேண்டும். உன்னை உயரமாகக்காட்டிக் கொள்ளக் குதியுயர்ந்த காலணி அணிந்து வா! கல்வி இயக்குநரிடம் தைரியமாகப் பேசு! நான் அருகில் தான் இருப்பேன்!" என்று அறிவுரை கூறினார். கையார் சொன்னபடியே எல்லாம் நடந்தது. நேர்முகத் தேர்வு முடிந்து அன்று மாலையே, அலுவலில் சேர்வதற்குரிய ஆணையைக் கையார் கையோடு வாங்கி வந்து வீட்டில் கொடுத்தார்.

நிரவியில் ஆசிரியர் பணி ஏற்றுக் கொண்டபோது சுப்பு ரத்தினத்துக்குப் பதினெட்டு வயது முடிந்து சில திங்கள்கள் ஆகியிருந்தன. நிரவி பிரெஞ்சு ஆளுகைக்கு உட்பட்ட ஒரு சிற்றூர். உருவத்தில் சிறியவனாக இருந்த சுப்புரத்தினத்தை அவ்வூர் மக்கள் ஓர் ஆசிரியனாகவே பொருட்படுத்தமாட்டார்கள். பள்ளி முடிந்து செல்லும்போது "இதோ போறானே பொடிப்பய, இவந்தா நம்ப ஊர்ப்பள்ளி வாத்தியாராம்!" என்று இவர் காதில் விழும்படியாகவே பேசிக் கொண்டு செல்லுவார்களாம்.

நிரவி அப்போது நகரத்து நாகரிகம் பரவாத சிற்றூர். புதுவையி லிருந்து சுப்புரத்தினத்தைப் பார்க்க நண்பர்கள் யாராவது முழுக்கால் சட்டை அணிந்துவந்தால் ஊர்மக்கள் கூட்டம் கூடிக்கொண்டு வேடிக்கை பார்ப்பார்களாம்.

சுப்புரத்தினத்துக்குத் தமது தமிழ்ப் புலமையில் சிறுவனாக இருக்கும்போதே நம்பிக்கையும் உறுதியும் உண்டு. அவருக்குக் கல்வே கல்லூரியில் தமிழ் கற்பித்த பங்காரு பத்தர் சிறந்த தமிழாசிரியர். சுப்புரத்தினத்தின் தந்தையாரின் நண்பரான பு.அ. பெரியசாமிப் புலவர் தமிழ்க்கடல். அவருக்கு ஒப்பாக யாரையாவது சொல்ல வேண்டுமானால் தமிழகத்தில் அரசஞ் சண்முகனாரைச் சொல்லலாம். இத்தகைய பெரியோர்களிடம் தமிழ்கற்ற சுப்புரத்தினம் எப்போதும் எந்தப் புலவரிடமும் அஞ்சியதில்லை. பெரும் புலவர்களின் பகையைச் சில நேரங்களில் இவரே விரும்பித் தேடிக் கொள்வதும் உண்டு.

விசுவலிங்கம் பிள்ளை என்பவர் நிரவியில் ஒரு முக்கியப் புள்ளி. இவருடைய ஆசிரியர் இராமசாமிப் புலவர் என்பவர். இப்புலவருக்கு வயது எழுபது இருக்கும். ஒரு நாள் மாலை சுப்புரத்தினம் பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது குருவும் சீடரும் குறட்டுப்பலகையில் அமர்ந்து இலக்கியச் சர்ச்சையில் ஈடுபட்டிருந்தனர். இன்னும் சிலரும் உடனிருந்தனர். விசுவலிங்கம் பிள்ளை சுப்புரத்தினத்தைப் புலவருக்குக் காட்டி, 'இந்தப் பையன்தான் இங்கே தமிழ் வாத்தியார்' என்று சொன்னார். புலவர் சுப்புரத்தினத்தைக் கூப்பிட்டார். அவர் கூப்பிட்ட தோரணையே, சுப்புரத்தினத்துக்கு சுர்ரென்று சினம் வரும்படிச் செய்தது. இருந்தாலும் அவருடைய முதுமைத் தோற்றத்துக்கு மதிப்புக் கொடுத்து அடக்கமாகக் குறட்டின் மீது அமர்ந்தார் சுப்புரத்தினம். புலவர்,

*இலைபடர்ந்த் பொய்கை யிடத்தழுதல் கண்டு*
*முலைசுரந்த அன்னையோ முன்னின்-நிலைவிளம்பக்*
*கொங்கை சுரந்தவருட் கோமாளோ சம்பந்தா*
*இங்குயர்ந்தாள் ஆர்சொல் எனக்கு?*

என்ற பாடலை எடுத்துச் சொல்லி,

''ஞானசம்பந்தருக்கு அன்னையர்களாக இப்பாடலில் இருவர் குறிப்பிடப்படுகின்றனர். ஒருவர் உமா தேவியார்; மற்றொருவர் பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியார். இந்த இருவருள் எவர் சிறந்த அன்னை?'' என்று கேள்வி கேட்டார் புலவர்.

''மங்கையர்க்கரசிதான்'' என்று உறுதியாக விடையிறுத்தார் சுப்புரத்தினம்

''எப்படி? என்றார் புலவர்.

சுப்புரத்தினம் சிறிதும் தயக்கமின்றி விளக்கம் சொல்லத் தொடங்கினார்.

''பசியால் குழந்தை அழுமுன்பே பால் நினைந்து ஊட்டும் தாய் தலையன்புடையவள். குழந்தை அழுவதைக் காதால் கேட்டவுடன் முலைசுரந்து ஊட்டுபவள் இடையன்புடையவள். குழந்தை அழுவதைக் கண்ணால் கண்ட பிறகு பாலூட்டுபவள் கடையன்பினள். சம்பந்தக் குழந்தை பொய்கைக் கரையிலே பாலுக்காக ஏங்கியழுததைக் கண்ணால் கண்ட பிறகும் உமாதேவி பாலூட்ட வில்லை. இறைவன் உணர்த்திய பிறகே ஊட்டினாள். இவளை எவ்வாறு தாயென்று சொல்ல முடியும்?

''ஆனால் மங்கையர்க் கரசியின் நிலைவேறு'' சீகாழியில் சம்பந்தக் குழந்தை பாலுக்காக அழுதது' என்று இறந்த கால நிகழ்ச்சியை எதிரில் நின்றவர்கள் எடுத்துரைத்த கணமே பாண்டிமாதேவியின் மார்பகங்கள் விம்மிப் பரந்து பாலைப் பொழிந்தன. மேலும் இப்பாடலில் உமாதேவி 'முலைசுரந்த அன்னை' என்று சாதாரணமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறாள். ஆனால் மங்கையர்க் கரசியோ 'கொங்கை சுரந்த அருட் கோமகள்' என்று குறிப்பிடப் படுகிறாள். 'அருள்' என்னும் அடைமொழியே, அவள் சிறந்த அன்னை என்பதைக் காட்டும்' என்று விளக்கமாக விடையிறுத்தார் சுப்புரத்தினம்.

இவ்விளக்கத்தைப் பொருட்படுத்தாதவர் போல் புலவர் நடித்தாலும் இரவில் வீடுதேடி வந்து சுப்புரத்தினத்தைப் பாராட்டிய தோடு, மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். அதன் பிறகு வாத்தியார் சுப்புரத்தினத்தின் புகழ் நிரவியில் உயர்ந்தது.

சுப்புரத்தினத்துக்கு இளமையிலிருந்தே அரசியல் ஈடுபாடு அதிகம். அதனால் அவருக்கு எதிரிகளும் அதிகம். அதனால் அவரை நிலையாக ஓரிடத்தில் இருக்கவிடாமல் ஊர்ஊராக மாற்றிக் கொண்டே இருப்பர். கூனிச்சம்பட்டு என்ற சிற்றூரில் அவர் பட்ட தொல்லை அதிகம். சுப்புரத்தின வாத்தியாருக்கு எந்த விதமான உதவியும் எவரும் செய்யலாகாது என்று கட்டுப்பாடு ஒன்று ஊரில் போடப்பட்டிருந்ததாம். அவருக்கு உண்ண உணவும், இருக்க உறையுளும் கூடக் கொடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை. இவர் துணைவியார்க்குப் பிறந்த குழந்தையொன்று இரண்டு நாளில் இறந்து விட்டது. அதன் இறுதிச் சடங்கில் கூட யாரும் கலந்து கொள்ள வில்லை. பக்கத்து ஊர்க்காரர் துணையோடும், ஒத்துழைப்போடும், பிஞ்சுக் குழந்தையின் சடலத்தைத் தாமே எடுத்துக் கொண்டு போய் இடுகாட்டில் இட்டுவிட்டுத் திரும்பினார் சுப்புரத்தினம்.

இளம் மாணவர்கள் விரும்பும் வகையில் பாடம் சொல்லிக் கொடுப்பதில் சுப்புரத்தினம் வல்லவர். கரும்பலகையில் படம் வரைந்து மாணவர்க்குப் புரியும் வகையில் பாடம் நடத்துவார். கல்வியின் சிறப்பை மாணவர்கட்கு உணர்த்தவேண்டி, எளிய பாடல்கள் எழுதிக் காட்டி மாணவர்களைப் பாடச் சொல்வார்.

அப்பாடல்களில் ஒன்று:

*கல்வியின் மிக்கதாம்*
*செல்வமொன் றில்லையே*
*கண்மணி கேளடா*
*நீயென்றன் சொல்லையே.*

*கல்வி மிகுந்திடில்*
*கழிந்திடும்மடமை*
*கற்பது வேஉன்*
*முதற் கடமை*

*செல்வம் பிறர்க்குநாம்*
*தந்திடில் தீர்ந்திடும்*
*கல்வி தருந்தொறும்*
*மிகச் சேர்ந்திடும்*

*இளமையில்கல்லென*
*இசைக்கும் ஔவையார்*
*இன்பக் கருத்தைநீ*
*சிந்திப்பாய்செவ்வையாய்*

*கல்வியுள் ளவரே*
*கண்ணுள்ளார் என்னலாம்*
*கல்வியில் லாதவர்கண்*
*புண்ணென்றே பண்ணலாம்*

*இளமை கழிந்திடில்*
*ஏறுமோ கல்விதான்*
*இப்பொழு தேயுண்*
*இனித்தி டும்தேன்*

கவிஞர் பாடம் நடத்துவதோடு மாணவர்கள் மீது அன்பும் அக்கறையும் காட்டுவதில் ஈடு இணையற்றவர். புதுவை சுயர் கூப் வீதித் தொடக்கப் பள்ளியில் சுப்புரத்தினம் ஆசிரியர் பணியாற்றும் போது குறிப்பிடத் தக்க ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்பள்ளியில் ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கும் வழக்கம் உண்டு.

ஒரு நாள் பகல் உணவு பரிமாறப்பட்டபோது, மாணவர்களிடம் பரபரப்பு ஏற்பட்டது. சுப்புரத்தினம் மாணவர்களை அணுகிக் காரணம் வினவினார். மாணவர்கள் "முசியே! சாம்பாரு கசப்புங்க!" என்று சொன்னார்கள். (முசியே' என்ற பிரெஞ்சுச் சொல்லுக்கு 'ஐயா' என்பதுபொருள்) சுரைக்காய் சாம்பார். உடனே அதைச் சுவைத்த சுப்புரத்தினம் சுமையற்காரரைக் கடுமையாகக் கடிந்து கொண்டார். உடனே மாணவர்களை வரிசையாக நிறுத்திக் கல்வித்துறைத் தலைவரின் அலுவலகத்துக்கு இட்டுச் சென்று, இக்கொடுமையை எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியை விவரமாகக் கேட்ட கல்வியதிகாரி உடனே தம் உதவியாளரை அழைத்து வேண்டுவன செய்யும்படி ஆணையிட்டார். சுப்புரத்தினத்தின் கடமை உணர்வை மிகவும் பாராட்டி "மாணவர்களை அழைத்துச் செல்லுங்கள், பொது நோக்குடன் ஆசிரியப் பணி புரியும் உங்களைப் பாராட்டுகிறேன். இனி அடிக்கடி என்னைச்சந்திக்க வாருங்கள்!" என்று பரிவுடன் பேசி அனுப்பினார். அவர் பணியில் இருக்கும்வரை சுப்புரத்தினத்துக்கு ஆதரவாகவும் நடந்து கொண்டார்.

புதுவையில் பிரெஞ்சு சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் தமிழ் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் எப்போதும் போட்டியாகத்தான் இருக்கும்.

பிரெஞ்சு கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் புதுவை அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகள்! அவர்களுக்குச் சம்பளமும் அதிகம்; தமிழ் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் குறைவு. எனவே இவர்களுக்குள் எப்போதும் போட்டி பொறாமை அதிகம் இருக்கும்.

பிரெஞ்சு ஆசிரியர்கள் கட்சிக்கு வெங்கடகிருஷ்ண நாயுடு என்பவர் தலைவர். அவர் புதுச்சேரி தலைமைப் பள்ளியின் முதல்வர்; தமிழாசிரியர்கள் கட்சிக்குச் சுப்புரத்தினம் தலைவர். சமயம் வரும்போது ஒருவரையொருவர் காலை வாரிவிடுவது இவர்களுக்குள் வழக்கம்.

ழுய்ல் ஃபெரி (**Jules Fery**) என்பவர் 19ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாட்டில் வாழ்ந்த பெரிய சமுதாய சீர்திருத்தவாதி. கல்வித்துறை சமயவாதிகளின் கையில் இருந்ததை அவர் கண்டித்தார்.

''பாதிரிமார் கையில் கல்விக்கூடங்கள் இருப்பதால் ஏழை எளியவருக்குக் கல்வி எட்டவில்லை. கல்வியை எல்லாரும் பெறா விட்டால் ஏழை ஏழையாகவும், பணக்காரன் பணக்காரனாகவுமே இருக்க நேரிடும். கல்விக் கூடங்களைப் பாதிரிமாரிடமிருந்து பிடுங்கி அரசாங்கமே ஏற்று நடத்தினால் குடியரசின் முழுப் பயனை நாட்டு மக்கள் எல்லாரும் நுகர முடியும்'' என்று அவர் பிரசாரம் செய்தார். பிரெஞ்சுப் பாதிரிமார்கள் தமக்கிருந்த அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ழுய்ல் ஃபெரியை நாடு கடத்தி விட்டனர். ழுய்ல் ஃபெரி வெளிநாட்டில் இருந்து கொண்டே தம் பிரசாரத்தை ஓய்வின்றிச் செய்து வந்தார்.

பின்னர் நாட்டுத் தலைவராகும் வாய்ப்பு ஏற்பட்ட போது ழுய்ல் ஃபெரி கல்வியைச் சமய ஆதிக்கத்திலிருந்து மீட்டு அரசாங்கத்தின் பொறுப்பில் கொண்டு வந்தார். அன்று முதல் பிரெஞ்சு நாடு ழுய்ல் ஃபெரியைக் கல்விச் சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றுவது வழக்கம். ழுய்ல் ஃபெரியின் நூற்றாண்டு விழா வந்தது. அவ்விழா பிரெஞ்சு நாடு மட்டுமன்றிப் பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளிலும் கொண்டாடப்பட்டது.

புதுவையிலும் அவ்விழா எல்லாப்பள்ளிகளிலும் கல்வித்துறைத் தலைவர் (சீஃப்) முன்னிலையில் கொண்டாடப்பட்டது. அவ் விழாவின் போது ஆடல், பாடல், நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. ழுய்ல் ஃபெரியைப் பற்றிச் சுப்புரத்தினம் எழுதிய பாடல் ஒன்றை மாணவர்கள் பாடினர். அப்பாடலைப் பாடத்தொடங்குவதற்கு முன்பே 'இது மதத் துரோகமான பாட்டு, இதைப் பாடினால் கூடியிருப்போர் உள்ளம் புண்படும்' என்று கல்வித்துறைத் தலைவரிடம் கிருஷ்ணசாமி நாயுடுவின் ஆட்கள் கோள் மூட்டினர். ஆனால் தலைவர்

அவர்களுடைய பேச்சுக்குச் செவி சாய்க்காமல் தொடர்ந்து நடத்துமாறு கட்டளையிட்டார். மாணவர் கீழ்க்கண்ட வரிகளைப் பாடினர்.

*வறியோர்க் கெல்லாம் கல்வியின் வாடை*
*வரவிடவில்லை மதக்குருக்களின் மேடை*
*நறுக்கத் தொலைந்ததந்தப் பீடை*
*நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை*

இதைப்பாடியதும் நாயுடுவின் ஆட்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். உடனே கல்வித்துறைத்தலைவர் இப்பாடலை அப்படியே பிரெஞ்சில் மொழிபெயர்த்துத் தருமாறு கூறினார். மொழி பெயர்த்துக் கொடுக்கப்பட்டது. அதைப் படித்து விட்டுக் கல்விக் தலைவர் உள்ளம் மகிழ்ந்தார். 'இது தானய்யா நாம் இன்று எல்லாருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய செய்தி. சுப்புரத்தினம் பாடியது சரி!'' என்று சொன்னார். சுப்புரத்தினத்தையும் பாராட்டினார். அத்தலைவர் புதுவையில் இருக்கும் வரை, சுப்புரத்தினத்தின் செல்வாக்கு, கல்வித் துறையில் கொடிகட்டிப் பறந்தது.

இளமையிலிருந்தே சுப்புரத்தினத்துக்கு அரசியலில் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். கெப்ளே என்பவர் புதுவை ஆளுங்கட்சித் தலைவர். அவரை எதிர்த்து, குட்டியா சபாபதிப்பிள்ளை என்பவர் போட்டியிட்டார். அவர் பெரிய வழக்கறிஞர். திருபுவனையில் அப்போது சுப்புரத்தினம் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்ததால் அவ்வட்டாரத்தில் அவருக்குச் செல்வாக்கு அதிகம். பிள்ளை வெற்றி பெறக் கடுமையாக உழைத்தார் சுப்புரத்தினம். பிள்ளை வெற்றியும் பெற்றார். தேர்தல் முடிந்து ஒரு திங்கள் ஆனதும் கெப்ளேயின் ஆட்கள் பாரதிதாசன் மீது பொய் வழக்குப் போட்டு ஒரு மாதம் மூன்று நாள் சிறையிலே தள்ளிவிட்டார்கள். சிறையிலிருந்து வெளியில் வந்ததும் அவருக்குத் திருமணம் நடைபெற்றது. அப்போது அவருக்கு வயது 29. அவர் மனைவி பெயர் பழனியம்மாள்; புவனகிரி பெருமாத்தூர் பரதேசியார் என்பாரின் மகள்.

புதுச்சேரித் தேர்தல் காலங்களில் சுப்புரத்தினம் ஒரு சிங்கம். அவர் எழுதுகோலின் முழக்கத்தைக் கேட்டு அரசியல் நரிகள் ஊளையிட்டு

ஓட்டமெடுக்கும். தேர்தல் முடிந்தவுடன் மக்கள் பல நாட்கள் கவிஞரின் தேர்தல் இலக்கியத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருப் பார்கள்.'' என்று சர்வோதயத் தலைவரும் காந்தியவாதியுமான எஸ்.ஆர். சுப்பிரமணியம் தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மாசித்திங்களில் வரும் மகவிழா புதுவையில் மிக உற்சாகமாகக் கொண்டாடப்படும். அக்கம் பக்கத்திலுள்ள நூறு சாமிகள் கடலில் மகமுழுக்காடுவதற்குப் புதுவைக் கடற்கரைக்கு வரும். மயிலத்தி லிருந்து வரும் முருகப் பெருமானும், செஞ்சியிலிருந்து வரும் அரங்க நாத சாமியும் விழாவை அணிசெய்யும் முக்கியக் கடவுளர்கள்.

பாரதியைப் பார்ப்பதற்கு முன்பே கவிதை எழுதும் ஆற்றல் மிக்கவர் சுப்புரத்தினம். இவர் இளமையில் எழுதிய 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' வண்ண இசைப்பாடல்களால் அமைந்த சிற்றிலக்கியம். இசையிலும் அமைப்பிலும் சந்த நயத்திலும் திருப்புகழுக் கொப்பானவை அதில் உள்ள பாடல்கள்.

ஒருமுறை தேர்தல் நெருங்கும் நேரம், மகவிழா வந்தது. மயிலம் முருகன் புதுவையில் ஊர்வலம் வரும்போது, தெருவெல்லாம் பந்தல் போட்டு அலங்கரிப்பது வழக்கம். அவ்வாண்டு அலங்காரம் சுப்புரத்தினத்தின் தமிழ்வாளின் வீரவீச்சுக்கள் தாம்.

**அநியாய ஆட்சியை அழிக்கவா முருகா!**

***

*பட்டுத் துணியால் பாழாகும் புதுவையை*
*நாட்டுத் துணியால் நலம்பெறச் செய்யவா!*

***

*காசியும் போலிசும் கவர்னரும் கையிலென்*
*றோதித் தேமாற்ற உன்னுவர் அழிக்கவா*
*மாம்பராய் வந்தபின் மக்களை வெருட்டும்*
*சோம்பற் குழுவினைத் தொலைக்க வேலாவா*

***

*தேர்தலின் பெயரால் திருடிப் பிழைக்கும்*
*பேர்களை ஒழிக்கப் பெருமான் வருக!*
*தலைவராவதற்குச் சனங்களின் தயவையே*

*எதிர்பார்த் திருப்போர் எழிலுறச் செய்யவா!*
*மாநிலம் புகழும் மகாத்மா வாழவா*
*பொதுவுக் குழைக்கும் புனிதர்கள் வாழவா!*

அந்த நாளில் புதுவை அரசியல் அமைப்பில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்று இரண்டு வகை வாக்குச் சீட்டுகள் உண்டு. பிரெஞ்சுக்காரர்களும், தங்களைப் பிரெஞ்சுக்காரர் என்று பதிவு செய்து கொண்ட கலப்பினத்தவரும் முதல் வகுப்பு வாக்காளர்கள். பிரெஞ்சு ஆட்சியின் கீழிருந்த இந்தியப் பகுதியில் பிறந்து 21 வயதுக்கு மேற்பட்ட இந்தியர்கள் இரண்டாம் வகுப்பு வாக்காளர்கள். இந்த அநீதியை எதிர்த்துக் குரல் கொடுத்தார் சுப்புரத்தினம்.

## பல்லவி

*கூவாயோ கருங்குயிலே*
*யாரும் ஒன்றென்று (கூவாயோ)*

## அனுபல்லவி

*ஏவலர் இந்தியர்*
*இரண்டாம் தொகுதியென்றார்*
*அக்குறை நீங்கிற்றென்றே*
*இனிதாய் நன்றே (கூவாயோ)*

## தொகையறா

*ஒரு குடைக்கீழ் நின்ற*
*வருள் சிலருக்கு நிழல்*
*சிலருக்கு வெயிலோ?*
*குவிந்த பொருளோ*
*விஷமோ சமமாக*
*அடையாத தெவ்வகையிலோ? (கூவாயோ)*

*மேலோர் என்றோர் தொகுதி*
*மீதிப் பெயர்க்கோர் தொகுதி*
*மேன்மைக் குடியரசில்*
*இதுவோகதி? (கூவாயோ)*

மகவிழாவினபோது நடைபெற்ற தேர்தலில் சுப்பரத்தினத்தின் பாடல்கள் எதிர்க்கட்சியின் ஆதரவை மக்கள் மனத்திலிருந்து அழித்த

தோடல்லாமல், எதிர்க்கவும் வலிமை தந்தன. அந்தத் தேர்தலில் இருபது ஆண்டுகள் ஆட்சியிலிருந்த கட்சி படுதோல்வியடைந்து ஆட்சிப் பீடத்திலிருந்து இறக்கப்பட்டது.

அரசியல் ஈடுபாடு இருந்தாலும், ஆசிரியப் பணியையும், தமிழ்ப் பணியையும் பாரதிதாசன் மிக்க ஈடுபாட்டுடன் செய்து வந்தார். அவரிடம் பயின்ற மாணவர்கள் பலர் சிறந்த கவிஞர்களாகவும், ஆசிரியர்களாகவும் விளங்கினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் புதுவைச் சிவம், வாணிதாசன், பாவலர் சித்தன், பா. முத்து ஆகியோர்.

# 2

# பாரதியும் தாசனும்

பைந்தமிழ்த் தேர்ப்பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!

1962ஆம் ஆண்டு, நான் சென்னையில் கல்லூரி மாணவனாக இருந்தேன். அப்போது பாரதிதாசனை அடிக்கடி சந்திக்கும்பேறும், அவரிடம் கவிதை பயிலும் வாய்ப்பும் எனக்கு ஏற்பட்டன. ஒரு நாள் அவரிடம், பாரதியார் பற்றிக் கூறுங்கள் என்று நான் கேட்டபோது பாரதியார் சந்திப்பைப் பற்றிக் கீழ்க்கண்ட கருத்தைச் சொன்னார்.

‘பாரதியார் கி.பி. 1908இல் புதுச்சேரி வந்தார். அவர் புதுச்சேரி வந்து ஓரிரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் அவருக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. பாரதியாரோடு பழக்கம் ஏற்பட்ட நேரத்தில் நான் இருபது வயதுக்காளை. நான் அரசியற் கழகம், புலவர் கழகம் சண்டைக்கழகம் (மற்களம்) ஆகிய எல்லாவிடத்திலும் இருப்பேன். என் தோற்றமே பார்ப்பதற்கு முரட்டுத்தனமாகத்தான் தெரியும்.

‘கையில் தங்கக் காப்பும், கழுத்தில் கறுப்புக் கயிறும், மேனி தெரியும் மல் ஜிப்பாவுமாக எப்போதும் ‘வஸ்தாது’ போல் திரிந்து கொண்டிருப்பேன். என் நடையுடை பாவனைகளில் ஒரு பண்பட்ட நிலை அப்போது ஏற்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். மற்களத்தில் முறையாகப் பயிற்சி செய்யத் தொடங்கியிருந்ததால், உடற்கட்டும் நன்றாக இருந்தது.

‘பாரதியாரின் தோற்றமும், வெளிப்படையான போக்கும் என்னை அவர்பால் இழுக்கத் தொடங்கின. அவர் தொடர்பு என் பழக்க வழக்கங்களிலும், சிந்தனையிலும் என்னையறியாமலே சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அதைக் காலப்போக்கில் நானும் உணரத் தொடங்கினேன். சுப்புரத்தினமாக இருந்த நான் ‘பாரதி தாசனாக, மாறத் தொடங்கினேன்.’

1963ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பொள்ளாச்சி நகரில் பெரிய அளவில் பாரதி விழா நடந்து கொண்டிருந்தது. கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம், கவிஞர் சிற்பி, பாரதி அன்பர்கள் பலர் சேர்ந்து சிறப்பாகக் கொண்டாடிய விழா அது. அவ்விழாவில் திரு. எஸ். இராம கிருஷ்ணன், சிலம்பொலி செல்லப்பன், ருசியத் தமிழ் மாணவி இசபெல்லா ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பாரதிதாசனும் அவ்விழாவில் கலந்து கொள்ள அழைக்கப் பட்டிருந்தார்.

அவ்விழாவில் பேசிய பேச்சாளர் ஒருவர் பாரதியை 'அவன்' என்று ஒருமையில் குறிப்பிட்டுப் பேசினார். மேடையில் அமர்ந்திருந்த பாரதிதாசனுக்குச் சுள்ளென்று சினம் பொங்கி விட்டது. 'பாரதியார்' என்று மரியாதையாகக் குறிப்பிடுமாறு மேடையிலிருந்து முழங்கினார் பாரதிதாசன்.

பார்த்தவர்களை மலைக்க வைக்கும்படியான தோற்றம் பாரதிதாசன் தோற்றம். அவர் குனிந்திருந்ததை யாரும் பார்த்திருக்க முடியாது. நின்றாலும், உட்கார்ந்திருந்தாலும் அவருடைய நெஞ்சும் தலையும் நிமிர்ந்தே இருக்கும். ஆனால் பாரதியாரைப் பற்றிப் பேசும்போது மட்டும் அவர் தோற்றத்தில் ஓர் ஒடுக்கமும், பேச்சில் ஓர் அடக்கமும் தோன்றியதை நான் கவனித்திருக்கிறேன். பாரதியைப் பெயர் சொல்லிக் குறிப்பிடுவதை விட 'அய்யர்' என்று கூறுவதில் பாரதிதாசனுக்கு அலாதி விருப்பம்.

பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பு ஒரு சுவையான நிகழ்ச்சி. பாரதிதாசன் இளமையில் வாழ்ந்த வீடு காமாட்சியம்மன் கோயில் தெருவில் இருந்தது. அந்தக் காமாட்சியம்மன் கோயில் தெருவும், மாதா கோயில் தெருவும் சந்திக்கும் முனையிலே வேணுநாயக்கரின் சிலம்பப் பயிற்சிக் கூடம் இருந்தது. பாரதியார் வரலாற்றில் குறிப்பிடப்படும் அம்மாகண்ணு அம்மாவின் மூத்தமகன் தான் வேணுநாயக்கர். சிலம்பக் கூடத்துக்குக் 'கரடிக் கூடம்' என்ற பெயரும் உண்டு. இக்கூடத்திலேயே பாரதிதாசன் பயிற்சி பெற்றார்.

அடுத்த தெருவில் குடியிருந்த பாரதியார் சில நாட்களில் பாரதிதாசன் குடியிருந்த காமாட்சியம்மன் கோயில் தெரு வழியாகச் செல்வதுண்டு. அவருடைய ஆடையும்,தோற்றமும், நடையும் மற்றவரிடமிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டுவனவாக இருந்தன.

தமிழ் நாட்டிலிருந்து வந்த ஒரு 'சுதேசி' என்ற அளவிலேயே பாரதிதாசன் அவரை அறிந்திருந்தார். அவரைப் பார்க்கும்போ தெல்லாம் 'இவர் ரவிவர்மா படத்தில் காணும் பரமசிவம் போல் இருக்கிறார்' என்று பாரதிதாசன் நினைப்பதுண்டு.

மற்கள ஆசிரியர் வேணுநாயக்கருக்குத் திருமணம். திருமண நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்த பிறகு விருந்து நடைபெற்றது. வேணு நாயக்கரின் நண்பர்கள் முப்பது பேர் கூடத்தில் உட்கார்ந்து பேசிச் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தனர். பின்னர் இசைநிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது வேணுநாயக்கர் பாரதிதாசனைப் பார்த்து, சுப்பு ஏதேனும் பாடு என்று கேட்டுக் கொண்டார்.

'வீரசுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர் வேறொன்று கொள் வாரோ?' என்ற பாடலையும் 'தொன்று நிகழ்ந்த தனைத்தும்' என்ற பாடலையும் இசையோடு கணீரென்று பாடினார் பாரதிதாசன். அவர் பாடிக்கொண்டிருந்தபோது, அங்கமர்ந்திருந்த பலரும், பின்பக்கத்தில் அமர்ந்திருந்த ஒருவரையே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தனர். பாட்டை நிறுத்தியதும் பாரதிதாசனும் திரும்பிப்பார்த்தார். பின்பக்கத்தில் ரவிவர்மாவின் பரமசிவம் அமர்ந்திருந்தார்.

அப்போது வேணுநாயக்கர், "அவுங்க யாருன்னு தெரியுமா? அவுங்கதானே அந்தப் பாட்டெல்லாம் போட்டது. சுப்ரமண்ய பாரதின்னு சொல்றாங்கல்ல" என்று பாரதிதாசனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

உடனே பாரதியார் "பொருளுணர்ந்து நன்றாகப் பாடினீர்கள். தமிழ் வாசிச்சிருக்கீங்களா?" என்று கேட்டார்.

'கொஞ்சம்' என்று அடக்கமாக விடையிறுத்தார் சுப்புரத்தினம்.

பாரதியார் வேணுநாயக்கரைப் பார்த்து, "வேணு! ஏன் இவரை நம்ம வீட்டுக்கு அழைத்து வரல?" என்று கேட்டார். இந்நிகழ்ச்சியி லிருந்து பாரதி-பாரதிதாசன் நட்பு தொடர்ந்தது.

பாரதியாருக்குப் புதுவையில் வாய்த்திருந்த நண்பர்கள் வட்டம் பெரிது. அரவிந்தர், வ.வெ.சு.அய்யர், மண்டையம் ஸ்ரீனிவாசாச் சாரியார் ஆகிய தேச பக்தர்கள் ஒரு வகை, வ.ரா. முத்தியாலு பேட்டை கிருஷ்ணசாமி செட்டியார், செல்வர் பொன்னு முருகேசம் பிள்ளை குவளைக் கண்ணன், எழுத்தர் சுந்தரேச ஐயர் என்ற நண்பர் கூட்டம் மற்றொரு வகை. முருகேசம் பிள்ளை பாரதியை ஆதரித்த

நெருங்கிய நண்பர்; முத்தியாலு பேட்டை கிருஷ்ணசாமி செட்டியார் பாரதியாரால் வெல்லச்சு செட்டியார் என்று விருப்பத்தோடு அழைக்கப்பட்டவர். இவரும் எழுத்தர் சுந்தரேச ஐயரும் பாரதியாருக்கு வேண்டும்போதெல்லாம் தட்டாமல் பொருளுதவி செய்தவர்கள். குவளைக் கண்ணன் உடல் உழைப்புக்குத் தயங்காத பாரதி தொண்டர். இந்தப் பெரிய வட்டத்தோடு பாரதிதாசனும் சேர்ந்து கொண்டார்.

ஆங்கில அரசாங்கத்தின் ஒற்றர்களால் பாரதிக்கு அடிக்கடி தொல்லை ஏற்படுவதுண்டு. புதுவை எல்லையோரம் பாரதி வந்தால் அவரை எப்படியாவது கைது செய்து தமிழகத்துக்குள் கொண்டு செல்லவேண்டுமென்று அவர்கள் முயன்றனர். ஒற்றர்களின் வருகையைக் கண்காணித்துப் பாரதியை எச்சரிப்பதும் பாதுகாப்பதும் பாரதிதாசன் முக்கியப் பணி. வெளியூரிலிருந்து புதுவை வந்து மறைந்து வாழ்ந்த தேசபக்தர்களுக்கு வெளிநாட்டுக் கைக்துப்பாக்கி வாங்கிக் கொடுப்பது, பாரதி இட்ட பணிகளை யாருக்கும் தெரியாமல் செய்து முடிப்பது, பாரதிதாசன் முக்கியப் பணிகள். பள்ளி விடுமுறை நாட்களில் பெரும்பாலும் பாரதியோடு அவர் வீட்டுமாடியில்தான் இருப்பார். வேணு நாயக்கரும், சிவா, நாயக்கரும் இவருடைய இணைபிரியாக் கூட்டாளிகள். சிவா நாயக்கர் பாரதிபாடல்களை மிக இனிமையாகப் பாடுவார். எனவே எல்லோரும் அவரைக் 'குயில் சிவா' என்று அழைப்பதுண்டு.

ஒருநாள் பாரதியாரின் வீட்டில் நண்பர்கள் கூட்டத்தோடு பாரதிதாசனும் இருந்தார். பாரதி அமர்ந்து வழக்கமாக எழுதும் சிறிய கணக்குப்பிள்ளை மேசை எதிரில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார் பாரதிதாசன். அதைக் கவனித்த குயில் 'சிவா, சுப்புரத்தினமும் அய்யர் மாதிரியே உட்கார்ந்து என்னமோ எழுதறாரப்பா!'' என்று கிண்டலாகச சொன்னார்.

இதைச் செவிமடுத்த பாரதியார், ''சுப்புரத்தினம் கவி எழுதக் கூடியவன்'' என்று கூறினார். உடனே அங்கிருந்த நண்பர்கள் ''அப்படியானால் ஒரு கவிதை எழுதச் சொல்லுங்கள் பார்க்கலாம்!'' என்றனர். உடனே 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' என்று பதினாறு வரிப்பாடலை எழுதி முடித்துப் பாடிக் காட்டினார் பாரதிதாசன்.

எங்கெங்குக் காணினும் சக்தியடா, - தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா! - அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் - அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா! - ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும் - வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ? - எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் - அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!

***

காளை ஒருவன் கவிச்சுவையைக் - கரை
காண நினைத்த முழுநினைப்பில் - அன்னை
தோளசைத்தங்கு நடம்புரிவாள் - அவன்
தொல்லறிவாளர் திறம்பெறுவான் - ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே - இந்த
வையமுழுவதும் துண்டு செய்வேன் - என
நீள இடையின்றி நீ நினைத்தால் - அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே!

பாடலைக் கேட்டு எல்லாரும் வியப்பில் துள்ளினர். பாடலின் பொருளும் பண்ணும் தம்முடைய கவிதைப் பாணியிலே அமைந்திருந்ததைக் கேட்டு மகிழ்ந்த பாரதியார், அப்பாடலைத் தம் கையாலேயே பெயர்த்து எழுதி, ''ஸ்ரீசுப்ரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது'' என்று ஒரு குறிப்பெழுதிச் சுதேசமித்திரன் நாளிதழுக்கு அனுப்பி வைத்தார்.

பாரதியின் வாழ்க்கையில் புதுவையில் வாழ்ந்த பத்தாண்டுகளும் பொற்காலம் என்று சொல்லாம். அரவிந்தர், வவே.சு அய்யர் ஆகியோரோடு இலக்கிய, ஆன்மீக உரையாடல்களில் நீண்ட நேரத்தைச் செலவிடுவார். செல்வர் பொன்னு முருகேசம் பிள்ளை வீட்டில் உலகியல் பேசி மகிழ்வார். வேணுநாயக்கர்கொட்டடியில் சிலம்பம், வாள் வீச்சு பார்த்து மகிழ்வார். மாலையில் நண்பர்களோடு கடற்கரையில் பொழுதைக் கழிப்பார். சில நாட்களில் வெல்லச்சு செட்டியாரின் குயில் தோப்பில் மெய்மறந்து கற்பனையில் வீற்றிருப்பார். அவருடைய அரிய படைப்புகளான குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு ஆகியவை புதுவையில் இருக்கும்போதுதான் எழுதப்பட்டன.

பாரதியார் சாதிக் கொடுமையை வன்மையாகக் கண்டிப்பார். கனகலிங்கம் என்ற அரிசன இளைஞருக்குத் தாமே புரோகிதராக இருந்து உபநயனம் செய்வித்தார். எல்லாரும் காணும்படி பாரதிதாசனோடு இசுலாமியர் கடையில் தேநீர் அருந்துவார். 'பாரதி உள்ளம்' என்ற தம்முடைய பாடலில், பாரதியார் உயர் பண்புகளைப் பாரதிதாசன் படம் பிடித்துக் காட்டுகிறார். சாதி ஒழிப்பதும், தமிழ்வளர்ப்பதுமே அவரது தலையாய கொள்கைகள் என்கிறார்.

*சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல*
*தமிழ் வளர்த்தல் மற்றொன்று*
*பாதியை நாடு மறந்தால்-மற்றப்*
*பாதி துலங்குவ தில்லை*

*சாதி களைந்திட்ட ஏரி -நல்ல*
*தண்டமிழ் நீரினை ஏற்கும்*
*சாதிப் பிணிப்பற்ற தோளே-நல்ல*
*தண்டமிழ் வாளினைத் தூக்கும்!*

*என்றுரைப் பார்என்னிடத்தில்-அந்த*
*இன்ப உரைகள் என்காதில்*
*இன்றும் மறைந்திட வில்லை-நான்*
*இன்றும் இருப்பத னாலே!*

பாரதிக்குப் பணத்தட்டுப்பாடு எப்போதும் உண்டு. ஓர் உயர்ந்த கவிஞனை வறுமை ஒன்றும் செய்து விடுவதில்லை. என்றாலும் சில நேரங்களில் உள்ளம் தளர்ந்து "பராசக்தி! என்னை ஏன் மேன்மேலும் சோதிக்கிறாய்? இன்னும் என்னைச் சோதித்தால் நான் நாத்திகன் ஆகிவிடுவேன்!" என்று பராசக்திக்கே எச்சரிக்கை விடுவதுண்டு.

பாரதியார் ஒரு சமயம், அதிகமான மனவருத்தத்தால் புதுவையை விட்டுவிட்டு, ஆங்கிலேயரின் இந்தியப் பகுதிக்குச் சென்று விடுவது என்ற முடிவோடு, புகைவண்டி நிலையத்துக்குச் சென்று விட்டாராம். யாராலும் அவரைத் தடுக்க முடியாது. செல்லம்மாளும் பாரதியை எதிர்த்துப் பேச முடியாது. பாரதியார் கோபங்கொண்டு எங்கோ போய்விட்டார் என்ற சேதி நண்பர்களிடையே பரவியது.

பாரதிதாசன் நேரே புதுச்சேரி புகை வண்டி நிலையம் சென்று அங்குப் பாரதியார் இருப்பதைக் கண்டார். பாரதியார், கண்களில் தீப்பொறி பறக்க, நிலையத்தில் யாருடனும் பேசாமல் உலவிக் கொண்டிருந்தார். சுப்புரத்தினத்தைப் பார்த்ததும் பாரதியாரின் முகம் ஓரளவு மலர்ச்சி அடைந்தது.

பாரதியாரை எப்படியோ சமானதாம் செய்து தள்ளுவண்டியில் ஏற்றி உட்கார வைத்துக் கொண்டு திரும்பினார். இத்தள்ளுவண்டி அந்நாளில் புதுவையில் பிரபலம்; மனிதன் தள்ளும் மூன்று சக்கர வண்டி. தருமராசா கோயில் வீதியிலிருந்த தன் வீட்டுக்கு வர மறுத்தார் பாரதி. எனவே சுப்புரத்தினம் வீட்டை நோக்கி வண்டி சென்றது.

அப்போது பாரதியாரின் வீட்டு வேலைக்காரி அம்மாக் கண்ணு வண்டியை வழிமறித்து, கையில் கொண்டு வந்த சுண்டல் முதலிய தின்பண்டங்களைப் பாரதியின் கையில் கொடுத்தாள். அம்மாக் கண்ணுவின் உபசாரம் அன்று பூராவும் பட்டினி கிடந்த பாரதிக்குப் பெரு மகிழ்ச்சியாக இருந்தது. சுண்டலை வாயில் போட்ட பாரதிதாசன் 'தேவாமிருதம்' என்றார். உடனே பாரதியாருக்குத் தேவலோக நினைப்பு வந்துவிட்டது. வண்டிக்காரனைப் பார்த்து 'ஓட்டடா ரதத்தை!' என்றாராம் பாரதி.

கவிதை எழுதத் தவங்கிடக்க மாட்டார் பாரதியார். கவிதை உள்ளத்திலிருந்து அருவியாகக் கொட்ட வேண்டும். கவிதை எழுதி முடிக்க வேண்டுமே என்பதற்காகப் பொருத்தமில்லாத சொற்களைப் பொறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருக்க மாட்டார். சொத்தைச் சொற்களை நத்தும் வழக்கம் அவரிடமில்லை. கவிதை நின்று விட்டால் எடுத்து வைத்து விடுவார். பின்னர் அது எப்போது பீறிட்டுச் சுரக்கிறதோ அப்போது மீண்டும் தொடருவார். இது அடுத்த நாளாக இருக்கலாம். அடுத்த திங்களாகக் கூட இருக்கலாம். ஆங்கிலக் கவிஞனான வோர்ட்ஸ் வொர்த் "Wandering Voice' என்ற சொற்றொடருக்குப் பன்னிரெண்டு ஆண்டுகள் காத்திருந்தாக வரலாறுண்டு.

பாரதியார் எழுதிய புதிய ஆத்திசூடி 'யௌவனம் காத்தல் செய்' என்பதோடு நின்று விட்டது. அதை எடுத்து வைத்துவிட்டு எதிரில் இருந்த பாரதிதாசனிடம் "சுப்பு! மனிதர்கள் வீடு பிடிக்கவில்லை. இயற்கை வீட்டில் உலாவச் செல்லலாம்" என்றார்.

"வாழைக்குளம் தாண்டித் தென்னந்தோப்பும் நீர் ஊற்றும் உண்டு; நிலமும் தூய்மையாக இருக்கும்" என்றார் பாரதிதாசன். இருவரும் புறப்பட்டனர். தெருமுனையை அடைந்தபோது பினாகபாணியின் குழந்தையின் சாவுப்பயணம் எதிரில் வந்தது. பினாக பாணி நண்பர். எதிரில் கண்டு கும்பிடும் போட்டுவிட்டார். எனவே பாப்பம்மாள் சுடுகாட்டுப் பயணம் கட்டாயமாகிவிட்டது.

பாரதியாருக்கு ஓர் இளநீர் வாங்கிக் கொடுத்துவிட்டுப் பாரதிதாசன் துண்டைவிரித்துப் போட்டு ஒரு சிதைந்த மல்லிகைச் செடியின் அருகில் படுத்தார்.

மல்லிகையின் சிற்றரும்பும் பூவும் சிரித்துக் கொண்டிருந்த அழகில் பாரதிதாசன் ஈடுபட்டிருந்தபோது அம்மலர்களை எவனோ ஒருவன் பாப்பம்மாள் கோயில் சிலையின்மீது போடப் பறித்துக் கொண்டு சென்றுவிட்டான். இதைக் கவனித்த பாரதியார், "சுப்புரத்தினம் உனக்கு இளநீர்க் காயில்லை; அதுவுமல்லாமல் நீ பார்த்துச் சுவைத்த மல்லிகைச் செடியின் அரும்புகளையும் பூக்களையும் பறித்துக் கொண்டு போய்விட்டான் அதோ அந்தக் கல்லின்மேல் போட" என்றார். உயிர் ததும்பும் அழகைவிடப் பாப்பம்மா கோயில் சாமி சிறந்ததில்லை என்பது பாரதியார் எண்ணம்.

'யௌவனம் காத்தல் செய்' என்ற அளவில் நின்ற ஆத்தி சூடி தொடர்ந்தது, 'ரசத்திலே தேர்ச்சி கொள்' 'ராஜசம் பயில்' 'ரீதி தவறேல்' 'ருசிபல வென்றுணர்' 'வெளவுதல் நீக்கு' என்று புதிய ஆத்தி சூடியை முடித்தார்.

பாரதிதாசன் ஆனந்த விகடனில் எழுதிய 'பட்டினித் திருநாள்' என்ற கட்டுரை மிகவும் சுவையானது. பாரதியும் செல்லம்மாவும் வறுமையை எவ்வளவு மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்கள் என்பதை நகைச்சுவை குன்றாமல் கூறுகிறது அக்கட்டுரை.

பாரதிதாசன், சுப்புரத்தினமாக இருந்த இளமைக் காலத்தில் பக்திப் பாடல்களும், சிறுசிறு தனிப்பாடல்களும், வண்ணம், இலாவணி போன்ற பாடல்களும் எழுதியுள்ளார். என்றாலும் கவிதைத் துறையில் எளிமையும் பக்குவமும் ஏற்பட்டது பாரதியின் தொடர்பிற்குப் பிறகுதான். பாரதி, சுப்புரத்தினத்தை ஒரு இலட்சியக் கவிஞராக உருவாக்கிவிட்டார்.

இளமைக் காலக் கவிதைகள் சற்றுக் கடினமான யாப்பில் அமைந்தவாறு பாரதிதாசன் எழுதியுள்ளார். இடைக் காலப் பிரபந்தங்களின் நடை அவற்றில் பின்பற்றப்பட்டுள்ளது. கருத்துச் சிறப்பைவிடக் கவிதைக் கட்டுமானச் சிறப்புக்கே முதலிடம் வழங்கப்பட்டுள்ளது.

பாரதியாரின் வீட்டில் இருந்தபோது, அவர் எழுதும் கணக்கப் பிள்ளை மேசையினுள் வைக்கப்பட்டிருந்த கையெழுத்துப் படியொன்றைப் பார்க்கும் வாய்ப்பு பாரதிதாசனுக்கு எதிர்பாராமல் ஏற்பட்டது. அதைப் படித்துப் பார்த்தார். அது பாஞ்சாலி சபதத்தின் கையெழுத்துப்படி. அதன் நடை படிக்கப் படிக்கப் பாரதிதாசனைப் பெரு வியப்பில் ஆழ்த்தியது.

எளியநடை; எளிய சந்தங்கள்; படித்தவுடன் படிப்பவர் நெஞ்சில் உட்காரும்படி தெளிவான கருத்துக்கள்; தெவிட்டாத கற்பனைச் சுவை. இதற்கு முன் பாரதிதாசன் இது போன்ற பாடலைப் பார்த்ததில்லை. அவர் படித்ததெல்லாம் சிலேடை, யமகம், திரிபு என்ற உதடு ஒட்டாத, பல்லுடைக்கும் பாடல்கள். பாஞ்சாலி சபதப் பாடல்கள் இளநீர் போல் இதமாக இதயத்தில் இறங்கின. பாரதிதாசனுக்கு ஒரு புதிய விழிப்பு; விசாலமான காற்றோட்டமான விடுதியில் நுழைவது போன்ற வியப்பு; சுகம்! பாரதிதாசன் உள்ளத்தில் அவரையும் அறியாதபடி ஒரு கவிதை இரசவாதம் நிகழ்வதை உணர்ந்தார். இதனைப்

*''பாடலில் பழமுறை பழநடை யென்னும்*
*காடு முழுவதும் கண்டபின் கடைசியாய்ச்*
*சுப்பிரமணிய பாரதி தோன்றியென்*
*பாடற்குப் புதுமுறை புதுநடை காட்டினார்''*

என்று குறிப்பிட்டுள்ளார்.

பாரதியார் எழுதிய எளிய இனிய கவிதைகளுக்குப் புதுவைப் புலவரிடையே பெரும் எதிர்ப்பு இருந்தது. பாரதிதாசனின் ஆசிரியரான பங்காருபத்தர் பாரதி பாடல்களைக் கடுமையாக விமர்சிக்கும் இயல்புடையவர். ''சுட்டுக்கு முன் வல்லெழுத்து வந்தால் ஒற்று மிகும் என்ற எளிய இலக்கணம் கூடப் புரியாமல் 'அங்கு போனான்' என்று எழுதுகிறானே பாரதி, இவனையெல்லாம் கவிஞனென்று எவ்வாறு ஒத்துக்கொள்வது?'' என்று கேட்பாராம்

பங்காருபத்தர். இதைப் பற்றிப் பாரதியிடம் கூறினால் ''ஏன் சுப்பு! அங்குப் போனான் என்று ஒற்று போட்டு எழுதினால் கேட்பதற்கு நன்றாகவா இருக்கிறது?'' என்று கூறி மழுப்பிடுவாராம்.

''கேட்பதற்கு நன்றாக இருக்கிறதோ இல்லையோ, இலக்கணப் பிழையோடு எழுதுவது தவறுதானே?'' என்று பாரதிதாசன் கூறுவாராம். பாரதி அதற்குச் சிரித்துக் கொள்வதோடு சரி. வேறொன்றும் கூறமாட்டாராம்.

1918ஆம் ஆண்டு பாரதியார் புதுச்சேரியிலிருந்து புறப்பட்டு விட்டார். கடலூர் எல்லையில் கால் வைத்ததுமே தமிழகக் காவல் துறையினர் பாரதியைக் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டனர். அதன்பின் கடையத்திலும் சென்னையிலும் மூன்று ஆண்டுகள் வாழ்ந்து உயிர் நீத்தார் பாரதியார்.

1946ஆம் ஆண்டு பாரதி விழாக் கவியரங்கம் திருச்சி வானொலி நிலையத்தாரால் நடத்தப்பட்டது. அக்கவியரங்கிற்குப் பாரதிதாசன் தலைமை ஏற்றார். பசுமலை சோம சுந்தர பாரதியும் அக்கவியரங்கில் பங்கு பெற்றார். அப்போது பாரதிதாசன் பாடிய தலைமைக் கவிதை ஒப்புயர்வற்றது. அதில் பாரதியைப் பாராட்டிப் பாரதிதாசன் பாடியதுபோல், இதுவரை வேறு யாரும் பாடியதில்லை.

*பைந்தமிழ்த் தேர்ப்பாகன், அவனொரு*
*செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!*
*குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்*
*கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு.*
*நீடு துயில்நீக்கப் பாடிவந்த நிலா*
*காடு கமழும் கற்பூரச் சொற்கோ!*

*கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்*
*திறம்பாட வந்த மறவன், புதிய*
*அறம்பாட வந்த அறிஞன், நாட்டிற்*
*படரும் சாதிப் படைக்கு மருந்து*
*மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்*
*அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்*
*என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்*
*தமிழால் பாரதி தகுதி பெற்றதும்*
*தமிழ்பா ரதியால் தகுதி பெற்றதும்.*

# 3

# தேசியக் கவி

கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்
கழறுகிறேன் அதைக் கேளே-நீவிர்
கதரணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத்
தூளே தூளே தூளே!

**பா**ரதிதாசன் என்ற பெயரைக் கேட்டவுடன் அவர் ஒரு கருப்புச் சட்டைக்காரர், நாத்திகர், பெரியாரின் கொள்கைவாதி என்ற எண்ணம் தான் எல்லாருடைய உள்ளத்திலும் தோன்றும். இளமையில் அவர் ஒரு முருக பக்தர் என்பதோ, அவர் குடும்பம் சைவ சமயத்தின்பால் பற்றுக் கொண்டது என்பதோ, அவர் ஒரு தீவிர தேசியவாதியாகவும் காந்தியவாதியாகவும் திகழ்ந்தார் என்பதோ தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாது.

பாரதியாரின் தொடர்பு பாரதிதாசனை வெகுவாகப் பாதித்தது. பாரதியின் தேசியக் கருத்துக்களும், சாதிமறுப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை, மூட நம்பிக்கை ஒழிப்பு ஆகிய தீவிரமான கொள்கைகளும் இவரைப் பெரிதும் ஆட்கொண்டன. பாரதி விட்டுச் சென்ற பணிகளைப் பாரதிதாசன் தொடர்ந்து செய்தார் என்பதுதான் உண்மை. இச்செய்திகள் யாவும் இவர் எழுதியுள்ள நூல்கள் மூலமாகவும், இவரைப் பற்றிப் பிறர் எழுதியுள்ள நூல்கள் மூலமாகவும், புதுவையிலிருந்து வெளியான தேச சேவகன், ஸ்ரீசுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம், போன்ற ஏடுகள் மூலமாகவும் அறியக் கிடக்கின்றன.

இளமையில், மாடசாமி போன்ற தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த பாரதிதாசன், காந்தியவாதியாக மாறி 1920 ஆம் ஆண்டு சத்தியாக்கிரக இயக்கத்திலும் பங்கு கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. பாரதத்தை 'தெய்வீகத் திருநாடு' என்றும், 'நாலுவேதத்தின் தாய்', 'ஆறு சமயத்தின் தாய்' என்றும் போற்றுகின்றார்.

*காலப் பெருங்கடலில் - நாளும்*
*கரைந்த தோற்றமெலாம்*
*பாலப் பருவமுதல் - எங்கள்*
*பாரதத் தாய் அறிவாள்*
*நாலு திசை முழுதும் - கொள்கை*
*நாற்பதி னாயிரத்தார்*
*ஆலின் கிளையவைகள் - என்னில்*
*ஆக்கும் மரம் இவள்தான்*

என இந்திய இனத்தின் கிளைகளைத் தாங்கும் அடிமரமாக உருவகப் படுத்தியுள்ளார் பாரதத்தாயை.

*உச்சி மலையடி உன்னழகு - தன்னில்*
*ஓடுஞ் சிறுத்தை மனத்தெளிவு - கட்டுங்*
*கச்சை யறுத்து வருங்குதிரை - தன்*
*கருத்தினில் வந்து கலப்பவளே - அடி.*

*தாவிடுவாய் உள்ளத் தாமரை மேல்வந்து*
*தாக்குது பாருன்றன் காதற்கனல் - எங்கள்*
*ஆவியுடல் பொருள் அத்தனையும் - உன்றன்*
*ஆசை நெருப்பில் துரும்புகளாம் - அடி*

என்று பாடிச் சுதந்திரக் காதலியோடு தோய்வதில் பேரார்வம் காட்டுகிறார்.

*சுதந்திரம் பெற்றவர் எவ்வெவ ரேனும்*
*அன்னவர் தேவர்க ளாவார் - அஃது*
*அற்றவர் யாவரும் வாடும் புழுக்கள்*

என்று சுதந்திரம் பெற்ற மக்களின் பெருமையையும், சுதந்திரம் அற்றவர் இழிநிலைமையையும் விளக்குகிறார்.

*பங்கப் படவிவை பிறரிட மடிமைபொ*
*ருந்திக் கெடுவதை விடுதலை செய ஒரு*
*சிங்கத் தினைநிகர் மனவலி அருளுக இதுதேதி!...*

*அங்கத் தனைபுய வலிபெற விசயனை*
*முந்தச் செயுமருள் எனதுள மிசையுற வரவேணும்...*

விடுதலைப் போருக்குச் சிங்கம் போன்ற மனவலிமையும் அருச்சுனன் போன்ற போர் ஆற்றலும் தனக்குத் தரவேண்டுமென இப்பாடலில் பராசக்தியை வேண்டுகிறார்.

ஆத்திகராக அன்று விளங்கிய, இளைய பாரதிதாசனுக்குக் காந்தியடிகளின் பிறப்பு ஓர் அவதாரமாகப்பட்டது. இறைவன் அனுப்பிய பரிசுத்த ஆவி இயேசுவாக அவதரித்தது போல், இறைவனின் அருட்பேரொளியே காந்தியாக அவதரித்தது என்பதைக்

*குறுகிய செயலில் வையம்*
*குதித்தது கரைக்கு மீள*
*இறையவன் அருளின் காந்தி*
*எழுந்தது புவியில் நெஞ்சே!*

என்று பாடுகிறார்.

''சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவோம்'' என்று, முழுக்கமிட்டவர் திலகர். 'கீதா ரகசியம்' எழுதிய திலகர் 'கிளம்புங்கள் போருக்கு' என்று முழக்கமிட்டதை

*ஓதுகின்ற யோகத்தால் பயன்கண்டாலும்*
*ஒருவர்க்கே பயனன்றிப் பிறருக் கில்லை!*
*மோதுகின்ற அறியாமை மிகுந்த நாட்டார்*
*யோகமெனும் மொழியினிலோர் மோகம் கொள்வார்*
*ஆதலினால் நீ இறத்தல் இல்லை தேகம்*
*அழிவதொன்றே என்னுமொரு சொல்லை மட்டும்*
*கீதையிலே இருந்தெடுத்துத் திலகன் காட்டிக்*
*'கிளம்புங்கள் பணிக்' கென்று முழக்கம் செய்தான்.*

என்று திலகர் பெருமான் கட்டளையைப் பாரதிதாசன் பாரதத் திருநாட்டுக்குணர்த்துகிறார்.

*பாங்கன் ஒருவன் கிடைத்தான் அரவிந்தர்க்கே*
*பாரதி ஓர் தமிழ்க் கவிஞன் நாட்டின் அன்பன்*
*தூங்கியது நாடந்தாள்; இரண்டு பேரும்*
*சொல்லாலே உணர்வுதந்தார்; ஏடும் தந்தார்*
*வங்காளச் சிங்கமவன் எண்ணம் செய்வான்*
*வரிப்புலிப் பாரதியதனைத் தமிழாய்ச் செய்வான்*

என்று அரவிந்தர், பாரதி ஆகியோரின் அரும்பணிகளைப் பாராட்டிப் பாடுகிறார் பாரதிதாசன்.

*வெள்ளையன் கப்ப லாலே*
*விரிந்தஇந் நாட்டின் செல்வம்*
*கொள்ளைகொண் டோடல் கண்டு*
*கொதிப்புற்ற சிதம்ப ரன்பேர்*
*பிள்ளைதான் பேருக் கத்தால்*
*பிழைக்கவந் தடிமை கொண்ட*
*நொள்ளையர் மாயச் செய்தான்*
*நோன்மைசேர் கப்பல் விட்டான்.*

என்று தேசபக்தர் வ.உ.சி யின் தொண்டைப் பாராட்டுகிறார் பாரதிதாசன்.

பாரதியின் நண்பரும் தீவிர தேசபக்தருமான மாடசாமியை ஒற்றர் பிடியிலிருந்து காப்பாற்றத் தாம் மேற்கொண்ட ஆபத்தான முயற்சியை

*நாடுதொழும் ஊழியரை*
*நான் காக்க ஓர்வீட்டு*
*மாடியினின்றே குதித்து*
*மான்போலும் ஓடினேன்.*

என்று குடும்பவிளக்கில் ஒரு முதியோர் கூற்றாகக் கூறுகிறார். மேலும் மாடசாமியைக் கப்பலில் ஏற்றிச் சைகோனுக்கு அனுப்ப நடுக்கடலில், தாம் பட்ட துன்பத்தையும் பாடுகிறார். பாரதியார் இட்ட பணியை முடிக்கச் சென்னைக்குச் சென்று ஒரு செட்டியார் கடையில்

அமர்ந்திருந்தபோது அங்கு நேர்ந்த தாக்குதலையும், அதைத் தாம் சமாளித்த விதத்தையும் குடும்ப விளக்கில் குறிப்பாகச் சுட்டுகிறார்.

கல்கத்தாவில் 1920ஆம் ஆண்டு நடைபெற்ற சிறப்புக் காங்கிரஸ் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கம் உருப்பெற்றது. ஆங்கில அரசு வழங்கிய பட்டங்களையும், மரியாதைக்குரிய பதவிகளையும் துறப்பது, கல்விக் கூடங்களையும், நீதிமன்றங்களையும், சட்டமன்றங் களையும் புறக்கணிப்பது, அயல்நாட்டுத் துணிகளை அணியாமல் ஒதுக்குவது போன்ற திட்டங்களின் அடிப்படையில் ஒத்துழையாமை இயக்கம் செயற்பட்டது.

ஒத்துழையாமை இயக்கம் மக்களிடையே ஒரு விழிப் புணர்ச்சியைத் தோற்றுவித்தது. மக்கள் தமது ஆற்றல் எத்தகையது என்பதை முதன் முதலாக உணர்ந்தனர். ஒத்துழையாமை இயக்கத்தைப் பாராட்டிப் பாரதிதாசன், 'சுதந்திரன்' என்ற ஏட்டில் எழுச்சிமிக்க கவிதைகள் எழுதினார்.

அடிமை உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த பாரதத்தைத் தட்டி எழுப்பு வதற்கும், நாடு விடுதலை அடைவதற்கும் பதினெட்டுக் கூறுகள் கொண்ட நிர்மாணத் திட்டம் ஒன்றைக் காந்தியடிகள் மக்கள் முன் வைத்தார். அதன் கொள்கைகள் வகுப்பு ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கதர், கிராமக் கைத் தொழில் வளர்ச்சி, துப்புரவு, அடிப்படைக் கல்வி, முதியோர் கல்வி, பெண்ணுரிமை, உடல்நலம், தாய்மொழிக்கல்வி, பொருளியற் சமன்மை, தொழிலாளர் மாணவர் பழங்குடி நலன், தொழுநோய்த் தடுப்பு என்பன ஆகும்.

தேசிய இயக்கத்துக்கு துணை புரியும் நோக்கில் பாரதிதாசன் இயற்றி அச்சான நூல்கள் மூன்று. அவை-

*சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்*
*தொண்டர் படைப் பாட்டு*
*கதர் இராட்டினப் பாட்டு*

என்பன.

'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்' பாரதியின் அரையுருவப் படமும், கருத்து விளக்கப் படங்களும் கொண்டு, நாலணா விலையில் வெளியிடப்பட்டது. நல்ல வர்ண மெட்டுக்களில் தேசிய கீதங்கள்,

தேசிய விடுகவிகள், தேசியத் தாலாட்டுகள், தேசிய விளையாட்டுப் பாடல்கள், சிட்டுக்குருவிப் பாட்டு, நிலாப்பாட்டு, நாய்ப்பாட்டு, தேசியக் கப்பல், தேசியக் கல்யாணப் பாடல்கள் என்பவை அத்தொகுப்பில் அடங்கும்.

விடுகவி வடிவில் சிறுவர் படித்து மகிழும் வண்ணம் பாரதிதாசன் எழுதிய கவிதைகள் புதிர்த் தன்மையோடு அமைந்துள்ளன.

*கங்கைநதி தலையிலுண்டு சிவனார் அல்ல*
*காலடியில் குமரியுண்டு ராமன் அல்ல*
*சங்கையற்ற வயதுண்டு கிழவி யல்ல*
*சாத்திரத்தின் ஊற்றனையாள் கலைமா தல்ல*
*எங்குலத்தைப் பெற்றதுண்டு பிரமன் அல்ல*
*ஏற்றுண்ணும் எண்ணமில்லை இறுமாப் பல்ல*
*மங்கையென்று பாடிடுவார் புலவ ரெல்லாம்*
*மற்றிதனை இன்னதென எழுதுவீரே!*

இவ்விடுகவிக்கு விடை 'பாரதநாடு', அதன் பெருமைகள் இவ்வெண்சீர் விருத்தத்தில் வரிசைப் படுத்துப் படுகின்றன.

*அதிக உயரத்தில் ஆகாய வாணி*
*அவளூர்க்கும் நம்மூர்க்கும் வைத்ததோர் ஏணி*
*மதிப்புக் கடங்குமோ அவ்வேணி உயரம்*
*மனிதர்சிலர் ஏறப்பார்த் தடைந்தனர் துயரம்*
*குதித்துக் குதித்திறங் கிடுவர் சில பெண்கள்*
*குளிரில் இறங்குகையில் பாடிடுவர் பண்கள்*
*இதற்கு விடைசொல்லக் கூடுமா? என்னால்*
*ஏற்ற பரிசளிக்க லாகும் இது சொன்னால்*

இதன் விடை விண்ணை இடிக்கும் இமயமலை.

சுதந்திரமாக வானில் வட்டமிட்டுத் திரியும் சிட்டுக் குருவியைப் பார்த்து, இந்திய மக்களும் அதைப்போல் சுதந்திரமாய் வாழ வழி கேட்கிறார்.

*உன்னைக் கேட்பேன் ஒருசேதி*
*உரிமைப் பெண்ணின் நன்மகளே*
*தின்னத் தீனி தந்திடுவேன்*
*தெரிவிக்காமல் ஓடாதே*
*உன்னைப் போலே இன்பத்தில்*
*ஊறும் வகைதான் என்னேடி?*

கழுத்துப்பட்டை தாங்கி வடுப்பட்டுத் திரியும் சீமான் வீட்டு வெள்ளை நாயைப் பார்த்துத் தெருவில் சுதந்திரமாகத் திரியும் கறுப்புநாய் கேலி செய்வது போல ஒரு பாடல்:

*அடிமை யாய்நீ இருப்பதேன்?*
*கதிதான் கெடநீ நடப்பதா?*
*கட்டுப் பட்டுக் கிடப்பதா?*
*சதிராய் உன்னிடம் அண்டேனே*
*சதையில் ரத்தம் சுண்டேனே!*

மணமக்களுக்குத் தேசியக் கல்யாண வாழ்த்துப் பாடல்:

*வாழ்க தம்பதிகள் வாழ்கநற் சுற்றமே*
*வாழ்க நற்பாரத சோதரர் முற்றுமே!*
*வாழ்க நற்பாரத தேசமும் புவியும்*
*வாழ்க எவ்வுயிரும் நனி வாழ்க!*

ஆண்பிள்ளை தாலாட்டு:

*வேளைக்கு வேளை விறல் வளரும் பாரதனே!*
*அமுதம் உனக்குப் பாரதத்தாய் அன்பெல்லாம்*
*இன்பம் உனக்குப் பாரதப்போர் ஏற்பதிலே.*
*வெல்வம்என்று நீதான் விழிதுயில்வாய் பாரதனே.*

பெண் குழந்தை தாலாட்டு:

*மொய்த்திருக்கும் உன்சமூகம் முப்பத்து முக்கோடி*
*வங்கத்து வீரருன்றன் வாழ்க்கையிலே சம்பந்தி*
*தேசத் துருக்கரெலாம் தேவியுன்றன் அண்ணன்மார்*
*மீசைத் தெலுங்கர்களும் வில்லர்களும் மைத்துனர்கள்*
*அமிழ்தக் கவிகள் அம்புவிக்குச் சொல்லிவைத்த*
*தமிழ்நாட்டு வீரரெலாம் சண்பகமே, சொந்தத்தார்..*
*நாட்டுக்கு நூலிழைக்கும் நங்கையருன் அக்கையர்கள்*
*வீட்டில் துணிநெய்யும் வீரருன்றன் அம்மான்கள்*
*கன்னியா குமரிமுதல் கங்கை இமயம்வரைக்கும்*
*உன்னிரத்தம் சேர்ந்த உடம்புடையார் பாரதத்தார்....*

'தொண்டர் படைப்பாட்டு' என்னும் நூல் மூன்றணா விலையில் கருத்து விளக்கப் படங்களோடு 'தாய்நாடு, தொண்டரின் எழுச்சி, தொண்டரைக் கூட்டுதல், வீரன் தோள், வீரத் தமிழர், மிதவாதியை எழுப்பல்'' என்ற பலவகைப் பாடல்களைக் கொண்டது. இந்நூல் இப்போது கிடைப்பதில்லை. அதில் ஒரு பகுதி:

*சேர்வீர் தொண்டர்படைக் கெல்லோரும்-அரைநொடியில்*
*பாரீர் நமக்குவந்த கேடு-பொறுக்கவில்லை*
*வாரீர் இதனை அடியோடு-கல்ல எம்மோடு*
*இன்பம் பொலிந்த திருநாட்டை-நவமணிகள்*
*ஈன்றோர் குவித்துவைத்த வீட்டை-மறவர் குலம்*
*என்றும் மலிந்திருக்கும்-இணையுலகில்*
*இல்லாவிதம் கிடைத்த தேட்டைப் - பிறர் தளைந்த*
*வன்மை விலங்ககலப் பூட்டை-உடைத்துக் காட்டச்*
*(சேர்வீர்)*

*கண்ணன் வழிப்பிறந்த சாதி-நமக்கருந்த*
*கஞ்சியற்று வயிற்றிற் பாதி-பிணிவகைகள்*
*நண்ணி வருத்துவது மீதி-அடிமையென*
*நம்மைப்பிடித்திட்ட வியாதி-தொலைந்ததென்று*
*விண்ணும் அதிர்சங்கை யூதிப்-பராக்கென்றோதி*
*(சேர்வீர்)*

பாரதிதாசன் 'கதர் இராட்டினப் பாட்டு' என்ற நூலை வெளியிட்ட தோடு கதர்த் துணியையும் தோளில் சுமந்து தெருத் தெருவாக விற்றார் என்ற சேதி குறிப்பிடத் தக்கது. கதர்ப்பாட்டு உணர்ச்சி பூர்வமாக எழுதப் பட்டுள்ளது.

*அன்னியர் நூலைத் தொடோம் என்ற சேதி*
*அறைந்திடடா புவிமுற்றும்-எங்கள்*
*அறுபதுகோடி தடக்கைகள் ராட்டினம் சுற்றும் சுற்றும் சுற்றும்*

*இன்னல் செய்தார்க்கும் இடர்செய்திடாமல்*
*இராட்டினம் சுற்றென்று சொல்லும்-எங்கள்*
*ஏதமில் காந்தி யடிகள் அறச்செயல் வெல்லும் வெல்லும்*
*வெல்லும்*

*கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்*
*கழறுகிறேன் அதைக் கேளே-நீவிர்*
*கதரணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத் தூளே தூளே தூளே!*

காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களுள் குறிப்பிடத்தக்கது தேசியக் கல்வித் திட்டம். ''ஆங்கிலக்கல்வியால் படித்த மக்களுக்கும் பாமர மக்களுக்கும் இடையில் பெரிய இடைவெளி ஏற்பட்டுவிடும். பாமர மக்களின் உள்ளம் வளர வழியின்றிச் சிறைப்பட்டே இருக்கும். அதனால் சுயராஜ்ஜியத்தை நிர்ணயிப்பதில் பாமர மக்கள் எந்தப் பங்கும் வகிக்க முடியாது'' என்று மிகுமக்கள் நலனுக்கெதிரான ஆங்கில மோகத்தைக் காந்தியடிகள் சுட்டுகிறார். இக்கருத்தை வலியுறுத்த வந்த பாரதிதாசன்-

*செந்தமிழாற் கம்பன் சிறந்தானா நேற்றிங்கு*
*வந்தவரின் ஆங்கிலத்தால் இன்பம் வளர்த்தானா?*
*அருச்சுனன்போல் கண்ணன்போல் ஆக நினைத்தால்*
*மருளூட்டும் ஆங்கிலத்தை மாய்ப்பீர் உம் சிந்தையிலே*
*வந்தவர்பால் நீங்களெல்லாம் வாங்கியுண்ணக் கற்றீர்கள்*
*நொந்த உமது குலம் ஈடேற நோக்கீரோ?*

என்று பாடுகிறார்.

உணவு, உடை, மருத்துவம் ஆகியவற்றிலும் வெள்ளையரைப் பின்பற்றி வந்த இழிநிலையை, ஒத்துழையாமை இயக்கம் வன்மையாகக் கண்டித்தது. பாரதிதாசனும் இப்பண்பாட்டுச் சீரழிவை 'நீசநாகரிகம்' ஸ்வதர்மம் முதலிய பாடல்களில் கண்டிக்கிறார்.

*வெள்ளைத்துரை உடைபோ லுடுப்பீர்மயிர்*
*வெட்டிக் கொள்வோம் தமிழ் துப்பிச் செல்வோம் - எனத்*
*துள்ளுது மற்றொரு நாகரிகம் இதில்*
*சொக்குதல் பற்பலர் பாரதமே.*
*செந்தமி ழிற்பெயர் இட்டறியாக் கொடு*
*தேயிலை காப்பியை முப்பொழுதும் - உண்டு*
*வந்தனை செய்யென நாகரிக மொன்று*
*வல்லமை காட்டுது பாரதமே.*

*வெள்ளை வயித்தியம் தெய்விகமாம் - அதை*
*வேண்டி அழைப்பது செய்தவமாம்*
*உள்ள மகிழ்ந்து குதிக்குதிங்கே - புலை*
*ஊனர் விரும்பிய நாகரிகம்*

என்று கடுமையாகச் சாடுகிறார்.

"பணம் படைத்தவர்கள் பசுக்களைக் காப்பதில் சேவையுணர்ச்சியோடு ஈடுபட வேண்டும். சுயலாபமும் சுரண்டலும் இதில் கூடாது. பசு பாலனம் எளிதன்று. அந்நிய ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்றுவதைவிட இது கடினமானது" என்று பசுக்காப்புப் பற்றிக் காந்தி அடிகள் கூறியுள்ளார். அக்கொள்கையை அப்படியே ஏற்றுக்கொண்ட பாரதிதாசன், தமிழ் இலக்கண இலக்கியங்களிலிருந்து 'ஆநிரை' பற்றிக் கூறிய கருத்துக்களை ஒரு கட்டுரையிலும் பாடலிலும் விளக்கியுள்ளார்.

*மடியினில் பால்சுமந்தே*
*மாந்தருக் களித்திட வருகின்ற தாய்*

என்றும்,

*மோரோடு சுளைத் தயிரும் - மணம்*
*மொகுமொகு மொகுவென நெய்ப் பயனும்*
*தருகின்ற தாய்*

என்றும்,

*குவலயம் தனக்கொரு செவிலி*

என்றும்,

பசுவைப் பலபடப் பாராட்டுகிறார் பாவேந்தர். நாடெங்கும் பசுச்சாலைகள், புல்வெளிகள், பசுக்குளங்கள் அமைக்க வேண்டு மென்று மக்களைக் கேட்டுக் கொள்கிறார்.

மேல்நாட்டு மதுவுக்குப் புகழ்பெற்ற புதுச்சேரியில் வாழ்ந்த பாரதிதாசன், மதுவிலக்குப் பணியிலும் தம்மை இணைத்துக்கொண்டு பாடிய மூன்று பாடல்கள் இப்போது கிடைத்துள்ளன. குடியர்கள் குடிப்பழக்கத்திலிருந்து மீண்டு தெளிவு பெற்றுப் பாரத தேவியிடம் கூறுவதாக ஒரு பாடல்:

*அம்மா இனிக்குடிக்க மாட்டோம் அதன்தீமை*
*கைமேல் கனிபோலக் கண்டுவிட்டோம் ஏழைகள்*
*பொய்ம்மானைப் பின்பற்றி ராமன் புரிந்ததுபோல்*
*இம்மதுவின் மாயங்கண் டிடறித் தலைகவிழ்ந்தோம்*
*நஞ்சிருந்த பாண்டத்தை நக்கி வசமிழந்து*
*நெஞ்சில் உரமிழந்து நிதியிழந்தோம் எந்தாயே!*
*பஞ்சத்தைத் தேசத்தைப் பாபத்தைப் பெண்டாட்டி*
*நெஞ்சத்தை எண்ணி விஷப்புனலை நீக்கிவிட்டோம்*

என்று பாடி மதுவின் தீமைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். பிள்ளைப் பாட்டாக, மதுவிலக்கு விடுகவி ஒன்றும் பாடுகிறார் கவிஞர்.

*ஈக்கள் எறும்புகள் எலிகள் பூனைகள்*
*எருதுகள் குதிரைகள்*

*பூக்கள் மரங்கள் செடிகள் கொடிகள்*
*புளிகள் மிளகாய்கள்*

*ஊக்கங் கெடவைத்து உங்கள் பணத்தை*
*ஒழித்துப் பாரதத்தை*
*ஏக்கங் கொள்ள அறிவை மயக்குவது*
*இவற்றில் எது சொல்வாய்?*

இப்பாடலில் பன்மை விகுதியாகிய 'கள்' அடிதோறும் மீண்டும் மீண்டும் வருவதைக் காணலாம். இதில் குறிப்பிட்டவற்றுள் 'புளிகள்' என்பது விடை. புளித்த கள்ளைச் சாப்பிட்டால் மயக்கம் கொள்வது போல் மயங்கிப் பின் தெளிவடைந்து விடையைக் கண்டு பிடிக்கிறோம்.

''நாட்டின் செல்வத்தில் பெரும்பகுதி சிலரிடத்தில் மட்டுமே குவிந்திருக்கிறது. ஆனால் கோடிக்கணக்கான மக்கள் உண்ணவும் உடுக்கவும் வகையில்லாது அவதிப்படுகின்றனர். நாட்டில் பொருளாதார சமத்துவம் தேவை. மக்களிடையில் பொருளாதார ஏற்றத் தாழ்வு இருக்கின்ற வரையில் அகிம்சை முறையில் ஆட்சி நடத்துவது சாத்தியமில்லை'' என்றார் காந்தியடிகள். இக்கருத்தை மையமாக வைத்துப் பாரதிதாசன் பாடிய பாடல் குறிப்பிடத்தக்கது.

*போய்த்தொடு வோம்அந்த விண்ணை அமுதத்தைப்*
*பூமிக்கெல்லாம் தருவோம்*
*தாய்கொடுத் தாளிந்தச் சத்திய வேலென்று*
*தாரணி ஆண்டிடு வோம்*
*ஏழைகள் கையிருப் புள்ளவர் என்னும்*
*இரட்டையைக் கொன்றிடுவோம்*
*கூழுக்கொருவன் அழும்படி ஆண்டிடும்*
*கோலை முறித்திடுவோம்.*

''இந்நாட்டுச் சேரிகளில் அரிஜனங்கள் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள கொடுமைக்கு ஒப்பானது உலகில் வேறெங்கும் இல்லை. தீண்டாமை இந்து மதத்துக்கு ஏற்பட்ட சாபம்!'' என்று காந்தியடிகள் கூறியுள்ளார்.

*''இதந்தரும் சமநோக்கம் இல்லா நிலத்தில் நல்ல*
*சுதந்தரம் உண்டாகுமோ''*

என்று கேள்விக்கணை எழுப்புகிறார் பாரதிதாசன்.

*தீண்டாமை என்னுமொரு பேய்-இந்தத்*
*தேசத்தில் மாத்திரமே திரியக் கண்டோம்-எனில்*
*ஈண்டுப்பிற நாட்டில் இருப்போர்-செவிக்கு*
*ஏறியதும் இச்செயலைக் காறி உமிழ்வார்-*

என்று தீண்டாமையின் இழிவையும் சுட்டிக்காட்டுகிறார்.

'ஆலய உரிமை' என்னும் பாடலில் தாழ்த்தப்பட்டோருக்கு நுழைவுரிமை மறுக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்து

*தாழ்த்தப் பட்டார்க்குத் தனிக்கோயில் நன்றெனச்*
*சாற்றிடும் தேசமக்கள் - அவர்*
*வாழ்த்தி அழைக்கும் சுதந்தரம் தன்னை*
*மறித்திடும் நாச மக்கள்*
*முப்பது கோடியர் பாரதத்தார் இவர்*
*முற்றும் ஒரே சமூகம் - என*
*ஒப்புந் தலைவர்கள் கோவிலில் மட்டும்*
*ஒப்பாவிடில் என்ன சுகம்?*

என்று பாடுகிறார் பாரதிதாசன்.

பெண்ணுரிமை பற்றிப் பாரதிதாசன் பாடியுள்ள அளவு வேறு யாரும் பாடவில்லை. கைம்மை மணத்தை ஆதரித்துத் தமிழில் துணிச்சலாகக் கவிதை பாடியவர் பாரதிதாசன். 1923ஆம் ஆண்டில் 'வெற்றி நெருக்கம்' என்ற தலைப்பில் தேச சேவகன் இதழில் ஒரு கும்மிப்பாடல் பாடியுள்ளார்.

*வேட்கை இருக்குதடி இந்த நேரத்தில்*
*வெற்றி இருக்குதுபார் எதிரே*
*நாட்டில் விடுதலை என்பதோர் நற்பதம்*
*நம்மை நெருங்குது மாதர்களே!*

*மேட்டு நரிகட்கும் மேய்ந்திடும் கூகைக்கும்*
*மேனி நடுங்கிடப் போவதில்லை*
*பூட்டிய வண்டி யவிழ்ப்பதில்லை உயிர்*
*போகுமட்டும் விடப் போவதில்லை*

என்று பெண்டிர் எழுச்சிக்குக் கட்டியம் கூறியுள்ளார். பாரதிதாசன் இளமையில் நூற்றுக்கு நூறு காந்தியவாதி.

---

# 4
# புரட்சிக்கவி

இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!

**க**விஞன் காலம் பெற்றெடுத்த குழந்தை, ஷெல்லி பிரெஞ்சுப் புரட்சி பெற்றெடுத்த குழந்தை என்று மேலைநாட்டு இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஜார் மன்னனின் கொடுமையைத் தாங்காத ருசியம் லெனினை ஈன்றது.

*''தமிழகம், தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும்*
*தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில்*
*இலகு பாரதிப் புலவன் தோன்றினான்''*

என்று பாரதியின் பிறப்பின் இன்றியமையாமையைப் பாரதிதாசன் பாடியுள்ளார். பாரதி நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட தேசியக் கவி. பாரதி தனக்குப்பின் விட்டுச் சென்ற மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண்விடுதலை, தமிழ்வளர்ச்சி, பொருளாதாரச் சமன்மை ஆகியவற்றைப்பாட ஒரு கவிஞன் தேவைப்பட்டான். அப்பணியை நிறைவேற்றத் தோள் தட்டிக் கிளம்பியவர் பாரதிதாசன். 1937ஆம் ஆண்டு அவர் எழுதிய 'புரட்சிக்கவி' என்ற குறுங்காப்பியம் வெளியிடப்பட்டது. அக்காப்பியத் தலைவன் ஒரு கவிஞன். அவன் தன் பேச்சாற்றலால் முடியரசைக் கவிழ்த்துக் குடியரசாக்கினான். அக்காப்பியத்தைப் படித்த தமிழ் மக்கள், பாரதிதாசனையும் 'புரட்சிக்கவி' என்ற அடைமொழியோடு அழைக்கத் தலைப்பட்டனர்.

பாரதிதாசனைப் புரட்சிக் கவியாக மாற்றியவை மூன்று, பாரதியின் தொடர்பு, பிரெஞ்சுப் புதுச்சேரி, பெரியார் ஈ.வெ.ராவின் தன்மான இயக்கம். பாரதி சாதி பேதங்களுக்கு அப்பாற்பட்டவர். சுதந்தரம், சமத்துவம் சகோதரத்துவம் மூன்றும் பிரெஞ்சுப் புரட்சி உலகிற்கு

வழங்கிய உயர்ந்த கோட்பாடுகள். பெரியாரின் தலையாய கொள்கை மடமை எதிர்ப்பு. இக்கொள்கைகளின் தாக்கங்களால் பாதிக்கப்பட்ட பாரதிதாசன் புரட்சிக் கவியாக மாறினார் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

பொதுவாகப் புரட்சிக் கவிஞர்கள் அஞ்சாமையும் எதையும் எதிர்கொள்ளும் நெஞ்சமும் மிக்கவர்கள். இப்பண்புகள் பாரதிதாசனிடம் நிறைந்திருந்தன.

*இருளினை வறுமை நோயை*
*இடறுவேன்; என்னு டல்மேல்*
*உருள்கின்ற பகைக் குன்றை நான்*
*ஒருவனே உதிர்ப்பேன்; நீயோ*
*கருமான்செய் படையின் வீடு!*
*நானங்கோர் மறவன்! கன்னற்*
*பொருள்தரும் தமிழே! நீயோர்*
*பூக்காடு; நானோர் தும்பி!*

என்றும்

*எவர்பேரால் ஆனாலும் உயர்ந்த தென்னும்*
*எதன்பேரால் ஆனாலும் ஏய்த்து வாழ்தல்*
*தவறேதான்! அவ்வாறு வாழ்ப வர்க்குத்*
*தடியடிதான்! தமிழடிதான்!*

என்றும் துணிச்சலோடு பாடியிருக்கிறார்.

பொதுவாகக் கவிஞர்கள் அழகின் இருப்பிடமான வானையும், நிலவையும், கடலையும் கதிரையும் காதலையும் விரும்பிப் பாடும் இயல்பினர். ஆனால் பாரதிதாசனின் விருப்பம் வேறு விதமாக இருந்தது. பாரதிதாசன் ஒரு நாள் கவிதை எழுதுவதற்காக ஏட்டினை எடுத்தார். அப்போது வானம் தன்னை எழுதென்று சொன்னது. ஓடையும், தாமரைப்பூக்களும் காடும் கழனியும் கார்முகிலும் ஆடுமயில் நிகர் பெண்களும் எதிரில் வந்து தங்கள் அழகினைக் கவிதைகளில் வடிக்குமாறு வேண்டி நின்றனர்:

*சோலைக் குளிர்தரு தென்றல் வரும்பசுந்*
*தோகை மயில்வரும் அன்னம் வரும்*
*மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்*
*மாணிக்கப் பரிதி காட்சி தரும்*
*வேலைச் சுமந்திடும் வீரரின் தோள் உயர்*
*வெற்பென்று சொல்லி வரைக! எனும்.*

ஆனால் பாரதிதாசன் அவற்றின் வேண்டுகோளையும் மறுத்தார். அவர் நினைவில் துன்பத்தில் துயிலும் தமிழ்மக்களின்காட்சிமட்டுமே தோன்றியது. அவர்கள் துயரைப்பற்றிப் பாட முடிவு செய்தார்:

*இன்னலிலே, தமிழ் நாட்டினிலேயுள்ள*
*என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்,*
*அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கியென்*
*ஆவியில் வந்து கலந்ததுவே!*

என்று பாடுகிறார். பாரதிதாசனைப் புரட்சிக் கவிஞர் என்று சொல்ல வேறு என்ன சான்று வேண்டும்?

பாரதிதாசன் இயற்கையை வெறுப்பவர் அல்லர். வானையும், நிலவையும், விண்மீன்களையும் அவர் பாடியிருக்கிறார். அவற்றைப் பாடும்போது கூட அவர் சிந்தனை மக்களின் மீதுதான் படிந்திருந்தது. வானத்தில் விண்மீண்களைப் பார்த்தபோது அவைகொப்புளங்களாக அவர் கண்களுக்குத் தோன்றுகின்றன. வானத்தில் ஏன் கொப்புளங்கள் தோன்றின? பகலில் உழைக்கும் மக்கள் இவ்வுலகில் படும் துன்பங்களைப் பார்த்து உள்ளம் வெந்து போனதால், அந்தவானின் உடம்பெல்லாம் கொப்புளங்கள் தோன்றிவிட்டதாம். சமுதாயம் சார்ந்த கற்பனை நம் நெஞ்சை அள்ளுகிறது.

*மண்மீதில் உழைப்பா ரெல்லாம்*
*வறியராம்; உரிமை கேட்டால்*
*புண் மீதில் அம்பு பாய்ச்சும்*
*புலையர் செல்வராம்; இதைத்தன்*
*கண்மீதில் பகலிலெல்லாம்*
*கண்டுகண் டந்திக்குப் பின்*
*விண்மீனாய்க் கொப்பளித்த*
*விரிவானம் பாராய் தம்பி!*

முழு நிலவை வானத்தில் காணும் போதும் இதே போன்ற கற்பனை கவிஞர் நெஞ்சில் தோன்றுகிறது. ''நாள்தோறும் கூழுண்ணும் பாட்டாளி பசியோடு கூழைத்தேடும்போது எதிர் பாராமல் பானையார அரிசிச் சோறு இருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவானோ, அந்த மகிழ்ச்சியை முழு நிலவே உனைக் காணும் போது நானடைகிறேன்'' என்று பாடுகிறார் பாரதிதாசன். ஏழைக்கு வெண்சோறு கிடைப்பது எவ்வளவு அரிய செயல் என்பதைக் கவிஞர் இப்பாட்டின் மூலம் புலப்படுத்துகிறார்:

*உனைக்காணும் போதினிலே என்னுள் ளத்தில்*
*ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு*
*நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவ தில்லை*
*நித்திய தரித்திரராய் உழைத் துழைத்துத்*
*தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்*
*சிறிது கூழ் தேடுங்கால், பானை யாரக்*
*கனத்திருந்த வெண்சோறு காணுமின்பம்*
*கவின்நிலவே உனைக்காணும் இன்பந்தானோ!*

''விடுதலை' என்ற பாடலில் பாரதி கூறும் கருத்து குறிப்பிடத் தக்கது. நாட்டுக்கு விடுதலை கிடைத்தால் எல்லாவித நலன்களும் தாமாக வந்து சேரும் என்று நம்பினார் பாரதி.

*ஏழை யென்றும் அடிமை யென்றும்*
*எவனுமில்லை ஜாதியில்*
*இழிவுகொண்ட மனிதர் என்பர்*
*இந்தியாவில் இல்லையே*
*வாழிகல்வி செல்வம் எய்தி*
*மனமகிழ்ந்து கூடியே*
*மனிதர் யாரும் ஒருநிகர்*
*சமானமாக வாழ்வமே!*

என்று விடுதலைக்குப் பின் பெறக் கூடிய சிறப்புக்களை ஆடியும் பள்ளுப் பாடியும் குறிப்பிட்டார்.

ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிஞன் கண்ட கனவு 'பொற்காலம் (Golden Age) என்பது. ஷெல்லிதாசனான பாரதியார்

விடுதலைக்குப் பின் பெறக்கூடிய பொற்காலத்தை 'அமரநிலை' என்றும் 'கிருதயுகம்' என்றும் குறிப்பிட்டார். விடுதலை கிடைத்தது. ஆனால் பாரதி கண்ட 'அமர நிலை' நமக்கு இன்னும் கிடைக்கவில்லை.

பாரதிதாசன் நம்பிக்கையோ இதற்கு நேர்மாறானது. 'இதந்தரும் சமநோக்கம் இல்லா நிலத்தில் 'நல்ல சுதந்தரம்' உண்டாகுமோ?'' என்று கேள்வி எழுப்புகிறார்.

*இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி*
*இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!*
*மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே!*
*வாயடியும் கையடியும் மறைவ தெந்தாள்?*
*சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்*
*சொத்தெல்லாம் தமதென்று சொல்வார் தம்மை*
*வெருட்டுவது பகுத்தறிவே! இல்லை யாயின்*
*விடுதலையும் கெடுதலையும் ஒன்றே ஆகும்!*

என்று முழக்கமிடுகிறார் பாரதிதாசன். நாட்டு விடுதலைக்கு முன் சமுதாய விடுதலை தேவை என்பது பாரதிதாசன் கருத்து. சமுதாய விடுதலை ஏற்படாமல் நாம் பெறும் விடுதலை நமக்குக் 'கெடுதலை' தான் என்று திட்டவட்டமாகக் கூறுகிறார். எனவே அவரது பாடல்கள் சமுதாய விடுதலை பற்றிய சங்க நாதமாக முழங்குகின்றன.

*பேதம் வளர்க்கப் பெரும் பெரும் புராணங்கள்!*
*சாதிச் சண்டை வளர்க்கத் தக்க இதிகாசங்கள்!*
*கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்*
*கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்!*

என்று சுதந்திரத்துக்கு எதிரான சூழ்நிலையைச் சுட்டிக் காட்டினார். சிந்தனா சக்தி சிறிதுமில்லாத, தம்தோள் உழைப்பில் நம்பிக்கை யில்லாத, பகுத்தறிவற்ற, பாமரத் தன்மை நிரம்பிய மக்களின் எதிர்காலம் பற்றி எச்சரிக்கை செய்தார்.

பெரியார் ஈ.வெ.இராமசாமி ருசிய நாடு சென்று திரும்பிய பிறகு பொதுவுடைமைக் கொள்கை பற்றிப் பிரசாரம் செய்யத்

தொடங்கினார். உடனே அவரைப் பின்பற்றிய பாரதிதாசனுக்கும் அக்கொள்கையின் பால் பற்றும் ஈடுபாடும் ஏற்பட்டது. அக் கருத்துக்களைத் தமது பாடல் மூலம் பாரதிதாசன் பரப்பத் தொடங்கினார்.

*'எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான*
*இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்'*

என்று கூறித் தமிழ் மக்களின் கவனத்தைப் பொதுவுடைமை நாடுகளின் பக்கம் திருப்பினார்.

*நீரோடை நிலங்கிழிக்க, நெடும ரங்கள்*
*நிறைந்துபெருங் காடாக்கப் பெருவி லங்கு*
*நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக கல்லின்*
*நெடுங்குன்றில் பிலம்சேரப், பாம்புக் கூட்டம்*
*போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்*
*புதுக்கியவர் யார்? அழகு நகருண்டாக்கி!*

*சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு*
*தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி*
*நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்*
*நிறையுழைப்புத்தோள்களெல்லாம்எவரின்தோள்கள்?*
*கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்*
*கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?*
*பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்*
*போயெடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?*

என்று மக்கள் உள்ளத்தில் வரிசையாகக் கேள்விக் கணைகளை எழுப்புகிறார். அவ்வாறு தமது பச்சை ரத்தத்தைப் பரிமாறி இவ்வுலகை உருவாக்கிய பாட்டாளி மக்கள் எலியாகவும் முயலாகவும் வாழ ஏமாந்த காலத்தில் ஏற்றம் பெற்றவர்கள் புலிவேடம் போடும் கொடிய நிலையைப் பாட்டில் படம் பிடித்துக் காட்டுகிறார். உலகம் என்ற பழைய முதலாளியினைப் பகுத்தறிவு மன்றத்தில் நிற்க வைத்து,

*பொத்தல்இலைக் கலமானார் ஏழை மக்கள்*
*புனல் நிறைந்த தொட்டியைப் போல் ஆனார் செல்வர்*
*புதுக்கணக்குப் போட்டுவிடு, பொருளை எல்லாம்*
*பொதுவாக எல்லார்க்கும் குத்தகை செய்!*

என்று கட்டளை இடுகிறார்.

*ஓடப்பராயிருக்கும் ஏழை யப்பர்*
*உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொ டிக்குள்*
*ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி*
*ஒப்பப்பர் ஆய்விடுவார், உணரப்பா நீ!*

என்று எச்சரிக்கையும் விடுக்கிறார். தம்முடைய புரட்சிக் கருத்துக்களைத் தாலாட்டுப் பருவத்திலேயே துவங்குகிறார்.

*அள்ளும் வறுமை அகற்றாமல் அம்புவிக்குக்*
*கொள்ளைநோய் போல் மதத்தைக் கூட்டியமும்*
*வைதீகத்தைப்*
*போராடிப் போராடிப் பூக்காமல் காய்க்காமல்*
*வேரோடு பேர்க்க வந்த வீரா இளவீரா!*

என்று ஆண் குழந்தைகட்கும்,

*மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற*
*காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!*
*வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்*
*தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி*

என்று பெண் குழந்தைகட்கும் தாலாட்டுப் பாடுகிறார்.

*சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்*
*தாங்கிநடை பெற்றுவரும் சண்டை யுலகிதனை*
*ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம்; பின்னர்*
*ஒழித்திடுவோம்; புதியதோர் உலகு செய்வோம்*

என்று மக்களை அறைகூவி அழைக்கிறார். பொதுவுடைமை நாடுகளில் உண்டாக்கப்பட்ட 'பொதுவில்லம்' (Commune) போல நாட்டு மக்களிடை அமைக்கும் முயற்சியைத் தாம் எழுதியுள்ள 'காதலா? கடமையா? என்றநூலின் இறுதியில் வெளிப்படுத்துகிறார் பாரதிதாசன்.

மன்னராட்சியை ஒழித்து மக்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்த மகிணனிடம் அவன் தந்தை சில வினாக்களை எழுப்புகிறார். அதற்கு மகனும் ஏற்ற விடையிறுக்கிறான்.

*உனையொன்று கேட்பேன் உரையடா என்று*
*முதிய தந்தை மொழியலானர்.*
*ஏரி தோண்ட இல்லையே என்றார்*
*இல்லை என்ப திராதென் றான் மகன்*
*திருக்கிளர் நாட்டின் செல்வர் கட்கும்*
*இருக்கக் குடிசை இல்லை என்றார்*
*இல்லை என்றசொல் இராதினி என்றான்*
*கடல்நிகர் நாட்டின் கணக்கிலா மக்கள்*
*உடல்நல மில்லா தொழிந்தனர் என்றார்*
*இல்லை என்பதே இராதினி என்றான்*
*எப்படி அரசியல் என்றார் கிழவர்*
*ஒப்பிட எவர்க்கும் ஒருவீடு ஒருநிலம்*
*ஒரு தொழில் ஓர் ஏர்,உழவு மாடுகள்*
*விரைவிற் சென்றால் தருவார் என்றான்.*

'கடற் மேற்குமிழிகள்' என்ற காப்பியத்தில் முடியாட்சி ஒழிக்கப்பட்டுக் குடியாட்சி மலர்ந்தது. குடியாட்சியில் எல்லார்க்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமல்லவா? குடியாட்சித் தலைவனின் ஆணைப்படி முரசு அறையப்படுகிறது ஊரெல்லாம்.

*யானைமேல் வள்ளுவன்*
*இயம்புவான் முரசறைந்து;*
*''பூனைக்கண் போலும் பொரிக்கறிக் காக*
*ஆளுக் கிரண்டு கத்தரிக்காய் அடைக*
*செங்கை இரண்டளவு சீரகச் சம்பா*
*அடைக அங்கங்கு மக்கள் அனைவரும்*

*பொன்னிறப் பருப்பும் புத்துருக்கு நெய்யும்*
*ஒருகையளவு பெறுக ஒவ்வொருவரும்.*
*பாகற் புளிக்குழம்பும் பழமிள கின்சாறும்*
*ஆகத் தக்கன அடைக எவரும்!*
*ஆழாக்குத் தயிர், அடைக்காய் ஒவ்வொரு*
*வாழைஇலையிவை வழங்குவார் தெருத்தொறும்.*
*விருந்தே நாளை விடியலில்; அனைவரும்*
*அருந்துக குடியாட்சி அமைக்கும் நினைவிலே!''*

***

*இதுகேட்டுத் தெருத்தோறும் பொதுவில்லம்*
*எதுவெனக் கேட்டே ஏகினர்*
*அதுவதுபெற்றே அடைந்தனர் வீட்டையே.*

கவிஞனால் கனவு காணாமல் இருக்க முடியாது. பாரதிதாசன் கண்ட கனவுகளுக்கு அளவில்லை. அக்கனவுகளில் சில உடனே நடந்தேறும்; சில காலம் கனிந்தபின் நடந்தேறும்; சில நடந்தேறாமல் நின்றுவிடுவதும் உண்டு. என்றாலும் கவிஞன் கனவுகள் சுவையானவை!

# 5
# தமிழ் மறவர்

எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாள் ஆகும்

சங்ககாலந்தொட்டுத் தமிழ் பலராலும் பலவாறு புகழப்படுகிறது. எல்லையற்ற அடைமொழிகளைப் பெற்றது தமிழ். செந்தமிழ், தண்டமிழ்,•பைந்தமிழ், பசுந்தமிழ், இன்றமிழ், இளந்தமிழ், முத்தமிழ், மூத்ததமிழ், வண்டமிழ், வான்தமிழ், தேன்தமிழ், தீந்தமிழ், பண்தமிழ், பழந்தமிழ்,திருத்தமிழ், தெய்வத்தமிழ், தெள்ளுதமிழ் என்று பண்டை நாள் தொட்டுப் புலவர்கள் தமிழைப் பல்லாற்றானும் சிறப்பித்துக் கூறியுள்ளனர்; தமிழினைத் தம் உயிரினும் மேலாகப் போற்றிப் பாராட்டி வந்துள்ளனர்.

பெயர் தெரியாத ஒரு புலவர் 'தமிழ் விடுதூது' என்ற நூலை எழுதித் தமிழைப் புகழ்ந்து பாராட்டி அதைத் தன் காதலனுக்குத் தூதாக அனுப்பியுள்ளார். ஆனால் தமிழின் சிறப்பு, வளம், இன்றைய நிலை அதை முன்னேற்றும் வழிமுறைகள் இவற்றை ஆய்ந்து முதன்முதலாகக் கவிதை நூலாக எழுதிய பெருமை பாரதிதாசனையே சாரும். அதுதான் 'தமிழியக்கம்' எனற அரிய நூல்.

*ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்*
*முன்னேற்றம் ஒவ்வொன்றும்*
*உன்முன் னேற்றம்*
*கண்டறிவாய் எழுந்திரு நீ!*
*இளந்தமிழா கண்விழிப்பாய்!*
*இறந்தொ ழிந்த*

*பண்டைநலம் புதுப்புலமை*
*பழம்பெருமை அனைத்தையும் நீ*
*படைப்பாய்! இந்நாள்*
*தொண்டு செய்வாய்! தமிழுக்குத்*
*துறைதோறும் துறைதோறும்*
*துடித்தெ ழுந்தே!*

என்று இளந்தமிழர்களைத் தட்டி எழுப்புகிறார். ஆடவர்கள் மட்டும் தமிழுக்குத் தொண்டு செய்தால் போதாது. அணியிழை மகளிரும் தமிழ்த் தொண்டாற்ற வேண்டுமென்று அறைகூவல் விடுக்கிறார்.

*ஒருவானில் பன்னிலவாய்*
*உயர்தமிழப் பெண்களெலாம்*
*எழுக! உங்கள்*
*திருவான செந்தமிழின்*
*சிறுமையினைத் தீர்ப்பதென*
*எழுக! நீவிர்*
*பெருமானம் காப்பதற்கு*
*வாரீரேல் உங்கள்நுதற்*
*பிறையே நாணும்*
*மருமலர் வாய்த் தாமரையும்*
*கனியுதடும் நன்னெஞ்சும்*
*வாட்டம் எய்தும்*

என்று அன்புடன் எச்சரிக்கை விடுகிறார். கடைத்தெருவில் விளம்பரப் பலகைகளில் தமிழ் ஒதுக்கப்படும் நிலை கண்டு

*மணக்கவரும் தென்றலிலே*
*குளிரா இல்லை? தோப்பில்*
*நிழலா இல்லை*
*தணிப்பரிதாம் துன்பமிது!*
*தமிழகத்தின் தமிழ்த்தெருவில்*
*தமிழ்தான் இல்லை!*

என்று வருந்திக் கண்ணீர் விடுகிறார் பாரதிதாசன்

தமிழ் இயற்கையோடியைந்த மொழி என்பதைப் பாரதிதாசன் பறவைகள், விலங்குகள் மொழியோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

*காக்கை 'கா' என்றுதனைக்*
*காப்பாற்றச் சொல்லும்! ஒரு*
*கருமுகில்தான்*
*நோக்கியே கடமடா*
*என்றேதன் கடனுரைக்கும்*
*நுண்கண் கிள்ளை*
*வாய்க்கும்வகை 'அக்கா' என்*
*றழைத்ததனால் வஞ்சத்துப்*
*பூனை 'ஞாம் ஞாம்' (நாம்)*
*காக்கின்றோம் எனச் சொல்லக்*
*கழுதையதை 'ஏ' என்று*
*கடிந்து கூவும்.*

இறுதியாகத் தமிழியக்கத்தில் பாரதிதாசன் ஒரு வேண்டுகோள் விடுக்கிறார் தமிழ் மக்களை நோக்கி:

*தமிழுயர்ந்தால் தமிழ்நாடு*
*தானுயரும் அறிவுயரும்*
*அறமும் ஓங்கும்*
*இமயமலை போலுயர்ந்த*
*ஒருநாடும் தன்மொழியில்*
*தாழ்ந்தால் வீழும்*
*தமிழுக்குப் பொருள் கொடுங்கள்*
*தமிழறிஞர் கழகங்கள்*
*நிறுவி டுங்கள்*
*தமிழ்ப்பள்ளி கல்லூரி*
*தமிழ்ஏடு பலப்பலவும்*
*நிலைப்பச் செய்வீர்*

திருமுருக கிருபானந்த வாரியார் நாடறிந்த சைவர்! முருக பக்தர்; ஆத்திகப் பெருமகனார். பாரதிதாசன் தன்மான இயக்கத்தைச் சேர்ந்த நாத்திகர்; பெரியார் தொண்டர். இட்ட இரு துருவங்களும் ஒருமுறை வேலூரில் நேரில் சந்தித்துக் கொண்டன. அவ்வூர்த் தமிழார்வத்தார்

இந்த இரு துருவங்களையும் ஒரே மேடையில் ஏற்றிவிட்டனர். பாரதிதாசன் தலைமையில் கிருபானந்த வாரியார் பேசினார். அவர் பேசும்போது "நான் உங்களுக்கெல்லாம் தமிழை வாரித் தருகிறேன். பாரதிதாசன் என்போன்றார்க்குத் தமிழை வாரித் தருகிறார்" என்று சொல்லிப் பாரதிதாசன் பாடியிருக்கும்

*கனியிடை ஏறிய சுளையும்-முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்*
*பனிமலர் ஏறிய தேனும்-காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்*
*நனிபசு பொழியும் பாலும்-தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்*
*இனியன என்பேன் எனினும்-தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்!*

என்ற பாடலை இசையோடு பாடி அப்பாட்டில் உள்ள நயங்களையும் எடுத்துச் சிறப்பாக விளக்கினார்.

இந்நிகழ்ச்சியைப் பற்றிப் பாரதிதாசன் கூறியது:

"இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், கிருபானந்த வாரியாரே விரும்பிக் கேட்டு என் தலைமையில் வந்து பேசினார். தமிழ் அவருடைய வாயில் கொஞ்சி விளையாடியது. முடிவுரையில் அவருடைய தமிழ்ப் புலமையையும், பேச்சாற்றலையும் நன்கு பாராட்டிப் பேசினேன்."

குடும்பத்தில் இரவுப் பணிகள் முடிந்து கணவன் மனைவி இருவரும் களைப்பாக உறங்குவது பொதுவான வழக்கம். ஆனால் குடும்பவிளக்கின் தலைவி தங்கம் தன் கணவர் மணவழகரைப் பார்த்து

*அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்*
*அடுக்கடுக்காய் நமதுநலம் சேர்ப்பதல்லால்*
*இதுவரைக்கும் பொதுநலத்துக் கென்ன செய்தோம்?*
*என்பதை நாம் நினைத்துப்பார்ப் பதுவு மில்லை.*

என்று சொன்னாள். பொதுவாக இரவு நேரத்தில் கணவனும்

மனைவியும் குடும்பச் சிக்கல்கள் பற்றியோ, குழந்தைகளின் நலம்பற்றியோ, வரவு செலவு பற்றியோ, மாடுகன்று பற்றியோ பேசுவது வழக்கம். ஆனால் பாரதிதாசன் எழுதியுள்ள குடும்ப விளக்கின் தலைவி நாட்டுநலன் பற்றிப் பேசுவது வியப்புக் குரியதாக இருக்கிறது.

''நாம் தமிழரென்று சொல்லிக் கொள்கிறோம். தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்று விரும்புகின்றோம். ஆனால் தமிழர் நலம் பேண நமதுழைப்பையும் காசையும் செலவு செய்தோமா?'' என்று தங்கம் வினா எழுப்புகிறாள்.

அதற்கு அவள் கணவரான மணவழகர், ''நம் கடை வரும்படியில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு தமிழர் நலனுக்கென்றே ஒதுக்கப்படு கிறது. தமிழர் கழகத்தார் நம் கடைப்படியை மிதித்தவுடன் நம் கணக்கர் அத்தொகையை எண்ணி வைத்துவிடுவார். இதை நீ அறியாயோ?'' என்று மனைவியைக் கேட்டார்.

*''இழந்த பழம் புகழ்மீள வேண்டும் நாட்டில்*
*எல்லோரும் தமிழர்களாய் வாழவேண்டும்!*
*வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருகவேண்டும்''*

என்று வாழ்த்திவிட்டுக் குடும்பவிளக்கின் தலைவனும் தலைவியும் கண்ணுறங்கினர். 'நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்' என்ற பாரதிதாசன் கூற்று மெய்யாகிறது.

தமிழ் வளர்ப்பதை ஒவ்வொரு தமிழனும் தனது கடமையாகக் கொள்ள வேண்டும். புதிய சிந்தனைகளைத் தமிழுக்கு அறிமுகப் படுத்திச் செந்தமிழைச் செழுந்தமிழாய் ஆக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறார் பாரதிதாசன்.

*எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்*
*இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்*
*வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக*
*விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு*
*தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து*
*செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்*

*எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்*
*இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்*

என்று பாடுகிறார். தமிழும் தமிழரும் எல்லாவித நலன்களும் ஆற்றல்களும் பெற்று உலகமக்களால் பாராட்டப்பெறும் நாள் எந்தநாளோ? என்று ஏக்கத்தோடு பாடுகிறார்.

*என்னருந் தமிழ்நாட் டின்கண்*
*எல்லாரும் கல்வி கற்றுப்*
*பன்னரும் கலைஞா னத்தால்*
*பராக்கிர மத்தால் அன்பால்*
*உன்னத இமமலைபோல்*
*ஓங்கிடும் கீர்த்தி யெய்தி*
*இன்புற்றார் என்று மற்றோர்*
*இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?*

*தாயெழிற் றமிழை, என்றன்*
*தமிழரின் கவிதை தன்னை*
*ஆயிரம் மொழியிற் காண*
*இப்புவி அவாவிற் றென்ற*
*தோயுறும் மதுவின் ஆறு*
*தொடர்ந்தென்றன் செவியில் வந்து*
*பாயுநாள் எந்த நாளோ,*
*ஆரிதைப் பகர்வார் இங்கே?*

தமிழ் எழுத்தாளர்களுக்கு அறிவுரை கூறும் பாரதிதாசன்,

*கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருக்கெடுக்க வேண்டும்*
*கண்டதைமேற் கொண்டெழுதிக் கட்டுரையாக் குங்கால்*
*தெருத்தூற்றும்; ஊர் தூற்றும்; தம்முளமே தம்மேற்*
*சிரிப்பள்ளித் தூற்றும் நலம் செந்தமிழ்க்கும் என்னாம்?*

என்று எச்சரிக்கை விடுக்கிறார். பொதுமக்கள் நலம்நாடிப் புதுக் கருத்தை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். பொருளுக்காகப் புன்கருத்தைச் சொல்லக்கூடாது என்றும் எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் அறிவுரை வழங்குகிறார்.

தமிழைப் பாரதிதாசன் பல இடங்களில் வாழ்த்திப் பாடி இருக்கிறார். அவ்வாறு பாடும் போதெல்லாம் தமிழைத் 'தமிழனின் உயிர்' என்று கூறுவதில் அவருக்கு அளவற்ற இன்பம்.

*செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!*
*செயலினை மூச்சினை உனக்களித்தேனே!*
*நைந்தாயெனில் நைந்து போகுமென் வாழ்வு*
*நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே!*

என்ற வரிகளில் 'தமிழ் தாழ்ந்தால் தமிழனும் தாழ்வான்' என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். திருச்சி வானொலியில் பாரதியைப் பற்றிய கவியரங்கில் பாடும்போது

*தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்*
*இலகு பாரதிப் புலவன் தோன்றினான்*

என்று குறிப்பிடுகிறார். 'இன்பத் தமிழ்' என்ற தலைப்பில் பாடும்போது

*தமிழுக்கும் அமுதென்று பேர்-அந்தத்*
*தமிழ்இன்பத் தமிழெங்கள்உயிருக்கு நேர்*

என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு தமிழைத் தமிழரின் உயிர் என்று பல இடங்களில் குறிப்பிடுவதோடு, அது எவ்வாறு உயிராக விளங்குகிறது என்பதைக் கழைக்கூத்தாடி ஒருவன் கைவண்ணத்திலும் சுவைபடச் செய்து காட்டுகிறார்.

கழைக்கூத்தாடிகள் செப்பிடு வித்தைகள் செய்து காட்டுவதில் வல்லவர்கள். மாந்தரை மயக்கநிலைக்குக் கொண்டுவந்து அவர்களைப் பேச வைப்பதிலும் வல்லவர்கள். ஒரு கழைக்கூத்தாடி ஓர் எலும்புக் கூட்டைப் படுக்க வைத்திருக்கிறான். அக்கூத்தாடியின் அருகில் மேளம் அடிக்கும் ஒரு சிறுவன்; இருவரும் பேசிக்

கொண்டிருக்கிறார்கள். அவர்களைச் சூழ்ந்திருக்கும் மக்களிடம் பேசி வித்தை காட்டுகிறார்கள்.

*என்னடா தம்பி?*
*ஏண்டா அண்ணா!*
*இதோ பார் தம்பி எலும்புக்கூடு*
*சதையும் இல்லே சத்தும் இல்லே*
*ஆமாம் திடுதிடும் அதற்குப் பேரென்ன?*
*அதன்பேர் தமிழ்நாடு*
*சரி சரி திடுதிடும்!*

சுற்றிலும் உள்ள மக்கள் கூட்டம் எலும்புக் கூட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறது, என்ன செய்யப் போகிறான் என்ற வியப்போடு. கழைக்கூத்தாடி மீண்டும் பேசுகிறான், சிறுவனும் அவனைத் தொடர்கிறான்.

*இந்த எலும்பே எழுந்திருக்க வைக்கிறேன்;*
*செய்யி செய்யி பார்ப்போம் திடுதிடும்!*
*அமிஞ்ச எலும்பே ஆடவைக்கிறேன்;*
*செஞ்சி காட்டு திடுதிடும் திடுதிடும்!*
*ஓய்ஞ்ச நாட்டிலே உசுருண்டாக்கிறேன்*
*ஆக்கிக் காட்டடா அண்ணே திடு திடும்!*
*அடிமோளத்தை! திடுதிடும் திடும்!*
*இந்த எலும்பை இப்படி வைக்கிறேன்.*

கூட்டம் விழித்த கண் வாங்காமல் எலும்புக் கூட்டையே பார்த்துக் கொண்டிருக்கிறது. கூத்தாடியின் பேச்சு தொடர்கிறது

*எலும்பை வச்சா உசிரா வந்திடும்?*
*மருந்து செய்யணும் தெரிஞ்சுதா உனக்கு?*
*சரிசெய் திடுதிடும்!*
*இதோ பார் மாம்பழம் இதைநான் புழியறேன்*
*புழி புழி திடுதிடும்!*
*இது ரஸ்தாளி இதையும் புழியறேன்*
*புழி திடும் திடுதிடும்!*

*பலாச்சுளை புழியறேன்*
*திடு திடும்! புழி புழி!*

கூட்டம் இந்த வேடிக்கையைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது. கூத்தாடி தொடர்கிறாள்.

*தேனும் சேக்கறேன், பாலும் சேக்கறேன்*
*எளநீர் வழுக்கை இட்டுக் கொழைக்கிறேன்*
*இடித்த தினைமா இட்டுப் பிசையறேன்*
*பொடித்த பருப்பும் போட்டுக் கலக்கறேன்*
*எல்லாத்தையுமே இளஞ்சூடாக்கி,*
*பல்லாய் நிறையப் பக்குவப் படுத்தினேன்*

*ஆஹா ஆஹா அண்ணே அண்ணே!*
*இந்த மருந்துக் கென்னா பேரு?*

*உள்ளே தொட்டால் உசிரில் இனிக்கும்*
*தெள்ளுதமிழ் தம்பி தெள்ளுதமிழ், இதுதான்!*
*இந்த மருந்தே எலும்புக் கூட்டில்*
*தடவுறேன் தம்பி அடி மேளத்தை!*

கூட்டத்தில் இருந்த எல்லாரும் ஆவலோடு எலும்புக் கூட்டையே உற்றுப்பார்க்கின்றனர்.

*திடு திடும் திடு திடும் திடு திடும் திடு திடும்*
*சிரித்தது பாரடா செந்தமிழ்க்கூடு*

எலும்புக்கூடாயிருந்த தமிழ்நாடு தமிழ் என்னும் மருந்து அதன்மேல் தடவப் பெற்றவுடன் உயிர்பெற்றுவிடுகிறது.

இப்பாடல் பாரதிதாசன் செய்து காட்டிய தமிழ்வித்தை!

தமிழ் மக்கள் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தவர்கள். தமிழர்களின் அகத்துறை இலக்கணம் மிக உயர்வானது. அகத்தில் அமைந்துள்ள திணையும் துறையும் மிக நுட்பமானவை. இயற்கையும், இயற்கையோடியைந்த தமிழர் வாழ்க்கையும்

வியப்பிற்குரியவை. அறத்தைச் செய்து, பொருளைத் தேடி, இன்பத்தை நுகர்ந்து வாழ்வதே பேரின்பமாக அவர்கள் கருதினர். காதலைப் பொருத்தவரையில் களவியல், கற்பியல் என்று வாழ்ந்த வாழ்க்கை உன்னத இலக்கியங்களுக்கு வழிகோலியது.

சிற்றின்பம், பேரின்பம் பற்றி இலக்கியத்தில் பலரும் பல விதமாகக் கூறியுள்ளனர். பாரதிதாசனும் 'எதிர்பாராத முத்தம்' என்ற தம் சிறு காப்பியத்தில், தலைவி பூங்கோதை வாயிலாகப் பேரின்பத்தைப் பற்றி ஒரு கருத்தை வெளியிடுகிறார்.

காப்பியத் தலைவியான பூங்கோதை தன் காதலனான பொன்முடியைக் களவில் சந்தித்தபோது

*''அத்தான் என்ஆவி உங்கள்*
*அடைக்கலம்! நீர்மறந்தால்*
*செத்தேன், இஃதுண்மை! இந்தச்*
*செகத்தினில் உம்மை அல்லால்*
*சத்தான பொருளைக் காணேன்!*
*சாத்திரம் கூறுகின்ற*
*பத்தான திசை பரந்த*
*பரம்பொருள் உயர்வென் கின்றார்.*

*அப்பொருள் உயிர்க்கு லத்தின்*
*பேரின்பம் ஆவ தென்று*
*செப்புவார் பெரியார் யாரும்*
*தினந்தோறும் கேட்கின்றோமே!*
*அப்பெரியோர் களெல்லாம்*
*வெட்கமாய் இருக்கு தத்தான்*
*கைப்பிடித் தணைக்கும் முத்தம்*
*ஒன்றேனும் காணார் போலும்!*

என்று வெட்கத்தோடு கூறுகிறாள். பெண்ணின்பத்தைச் சுவைத்த யாரும் வேறு எதையும் பேரின்பமென்று கூறமாட்டார்கள் என்பது பூங்கோதை கருத்து.

இவ்வாறு பெண்ணின்பத்தைப் புகழ்ந்து பாராட்டிய பாரதி தாசனுக்கு அந்த இன்பமும் தெவிட்டிப் போய் விடுகிறது. எப்போது?

தமிழின்பத்தில் ஈடுபடும்போது! அதனால்தான்

*எங்கள் உடல் பொருள் ஆவியெல்லாம் - எங்கள்*
*இன்பத் தமிழ் மொழிக்கே தருவோம்*
*மங்கை ஒருத்தி தரும் சுகமும் - எங்கள்*
*மாத்தமிழுக் கீடில்லை என்றுரைப்போம்*

என்று தமிழின்பத்துக்குச் சிறப்புக் கொடுத்துப் பாடுகிறார்.

# 6
# இயற்கைக் கவிஞர்

அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி பச்சைப் பட்டே
குருவிகள் தங்கக் கட்டி!
குளிர்மலர் மணியின் குப்பை!

**கா**மில் சொலபில் என்பவர் செக்நாட்டுத் தமிழறிஞர். பிராகு பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தற்போது பிரெஞ்சு நாட்டில் உள்ளார். தமிழின் மீது கொண்ட அளவற்ற பற்றின் காரணமாகத் தம் குழந்தைகளுக்குக் கண்ணகி யென்றும் மாதவியென்றும் பெயர் வைத்தவர்.

இவர் 1962ஆம் ஆண்டுத் துவக்கத்தில் தமிழகம் வந்து தமிழ் அறிஞர்களையும், கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் நேரில் சந்தித்து உரையாடிவிட்டுச் சென்றார். பாரதிதாசன் குடியிருந்த 10, இராமன் தெரு, தியாகராயர் நகர் இல்லத்துக்கு வந்து அவரைப் பேட்டி கண்டு ஒலிப்பேழையில் பதிவு செய்து கொண்டு சென்றார்.

செக்நாடு சென்ற அவர் பாரதிதாசன் பாடல்களைச் செக் மொழியில் மொழிபெயர்த்து, அந்நாட்டு இலக்கியத் திங்களிதழான 'நோவி ஓரியண்ட்' (Novy/New Orient Monthly) டில் படத்தோடு வெளியிட்டிருந்தார். அவ்விதழை 19.03.1962இல் பாரதிதாசனுக்கும் அனுப்பி வைத்திருந்தார்.

காமில் சொலபில் பாரதிதாசனை நேரில் கண்டு உரையாடிய போது, 'அழகின் சிரிப்பு நூலைப்பற்றி ஒரு சுவையான கருத்தைக் கூறினார். ''இந்நூலின் பெயரே ஒரு கவிதை'' (The heading itself is a poetry) என்பதே அக்கருத்து. பாரதிதாசன் எழுதிய சிறந்த கவிதைப் படைப்புகளில் இதுவும் ஒன்று.

'அழகின் சிரிப்பு' என்ற பெயரே பல சிறந்த கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு சிறு செய்யுளாகும் என்பது மொழி ஞாயிறு தேவ நேயப் பாவாணர் கூற்று.

தமிழர்கள் இயற்கையில் ஆழமான ஈடுபாடு கொண்டவர்கள் என்பதற்குச் சங்க இலக்கியங்களே சிறந்த சான்று. இயற்கையழகு இடம்பெறாத சங்கப் பாடல்களே இல்லையென்று சொல்லலாம். மேலை நாடுகளில் இயற்கையைத் தனித்துறையாகப் பிரித்து, அதைப்பற்றியே பாடல் எழுதும் வழக்கம் உண்டு.

இப்பாடல்களை இயற்கைப் பாடல்கள் (Nature Poetry) என்றும், அவ்வாறு பாடும் கவிஞர்களை இயற்கைக் கவிஞர் (Nature Poets) என்றும் கூறும் வழக்கம் உண்டு. ஆங்கிலக் கவிஞர்களுள் வோர்ட்ஸ் வொர்த்தும் (Wordsworth) பிரெஞ்சுக் கவிகளுள் ஆல்பிரெட் தெ முய் சே (Alfrede de Musset) வும் சிறந்த இயற்கைக் கவிஞர்கள்.

தமிழ்நாட்டில் இயற்கையாகிய தனித்துறைக்கு முதன் முதலில் கவிதை நூல் எழுதியவர் பாரதிதாசனே. அந்த நூல்தான் அழகின் சிரிப்பு, அழகின் சிரிப்பைத் தொடர்ந்து 'எழிலோவியம்' என்ற இயற்கைப் பாடற் தொகுப்பு ஒன்றை வாணிதாசனும் அதைப் போலவே வேறு சில கவிஞர்களும் எழுதி வெளியிட்டிருக்கின்றனர்.

அழகின் சிரிப்பு பதினாறு தலைப்புகளிலான பாடல்கள் அடங்கிய ஒரு கற்பனைக் களஞ்சியம். வரிக்கு வரி சுவை குன்றாத வற்றாத தேனருவி. இயற்கையழகின் முக்கியக் கூறுகளையெல்லாம் இதில் ஒன்றுவிடாமல் தொகுத்துப் பாடியுள்ளார் பாரதிதாசன். இயற்கையைச் சுவைக்க அழகுணர்ச்சி வேண்டும். ஆனால் எல்லாருடைய கண்களுக்கும் அழகு நங்கை தட்டுப்படுவதில்லை; எதையும் ஈடுபாட்டோடு கூர்ந்து நோக்கும் கவிஞர் கண்களுக்கே தட்டுப்படுகிறாளாம். அழகாகிய அந்த நங்கை எங்கெங்கு வீற்றிருந்து இன்பமளிக்கிறாள் என்பதைப் பாரதிதாசன் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

*காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!*
*கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்*
*சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்*
*தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப் பட்டாள்!*
*மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற*
*மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்; ஆலஞ்*
*சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்*
*தனிலந்த அழகென்பாள் கவிதை தந்தாள்.*

இப்பட்டியல் தொடர்கிறது. கடைசியாக எல்லாருக்கும் அழகைச் சுவைக்க நல்ல அறிவுரையொன்று கூறுகிறார்.

*பசையுள்ள பொருளிலெலாம் பசையவள் காண்*
*பழமையினால் சாகாத இளையவள் காண்*
*நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்!*
*நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை.*

இயற்கையழகை விருப்பத்தோடு கூர்ந்து நோக்கும் பக்குவம் வந்துவிட்டால், சுவைப்பது எளிது; அழகைச் சுவைக்கும் போது நம் துன்பமும் பறந்துவிடும் என்பது கவிஞர் வாக்கு. கவிஞன் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திழுப்பவை காலையும் மாலையும் இரவும்தான். காலையில் கிழக்கில் பரிதி தோன்றும் காட்சியை

*எழுந்தது செங்க திர்தான்*
*கடல்மிசை! அடடா எங்கும்*
*விழுந்தது தங்கத் தூற்றல்!*
*வெளியெலாம் ஒளியின் வீச்சு!*
*முழங்கிய நீர்ப்ப ரப்பின்*
*முழுதும்பொன் னொளி பறக்கும்,*
*பழங்கால இயற்கை செய்யும்*
*புதுக்காட்சி பருகு தம்பி!-என்றும்*

மாலையில் குன்றின் பின் கதிரவன் மறையும் காட்சியை

*தங்கத்தை உருக்கி விட்ட*
*வானோடை தன்னி லேஓர்*
*செங்கதிர் மாணிக் கத்துச்*
*செழும்பழம் முழுகும் மாலை*
*செங்குத்தாய் உயர்ந்த குன்றின்*
*மரகதத் திருமே னிக்கு*
*மங்காத பவழம் போர்த்து*
*வைத்தது வையம் காண*

என்றும் இரவில் நிலவு தோன்றும் இனிய காட்சியை

*பொன்னுடை களைந்து, வேறே*
*புதிதான முத்துச் சேலை*
*தன்னிடை அணிந்தாள் அந்தத்*
*தடங்கடற் பெண்ணாள், தம்பி*
*என்னென்று கேள்; அதோபார்*
*எழில்நிலா ஒளிகொட் டிற்று*
*மன்னியே வாழி என்று*
*கடலினை வாழ்த்தாய் தம்பி!*

என்றும்

சிந்தனை வளத்தோடு செழித்த தமிழ்ச் சொற்களால் நயம்படப் பாடுகின்றார் பாரதிதாசன். புறப்பட்ட இளங்கதிரின் பொன்னொளிச் சிதறல்களை, ''விழுந்தது தங்கத் தூற்றல்' என்ற தொடராலும், மாலையில் குன்றின் பின் மறையும் கதிரவனைச் 'செங்கதிர் மாணிக்கத்துச் செழும்பழம்' என்ற தொடராலும், மாலை நீங்கி நிலவொளியில் மூழ்கும் கடலின் செயலைப் 'பொன்னுடை களைந்து வேறே புதிதான முத்துச் சேலை தன்னிடை அணிந்தாள் அந்தத் தடங்கடற் பெண்ணாள்' என்ற வரிகளாலும் கூறுவது நயமான கற்பனைகள். சதங்கை ஒலிப்பது போல் கொஞ்சு தமிழால் இப் பாடல்களைப் பாடி இருக்கிறார் பாரதிதாசன்.

*உவைத்தீயை ஊது கின்றாய்!*
*உலைத்தீயில் உருகும் கொல்லன்*
*மலைத்தோளில் உனது தோளும்*
*மார்பினில் உன்பூ மார்பும்*
*சலிக்காது தழுவத் தந்து*
*குளிர்ச்சியைத் தருவாய்! பெண்கள்*
*விலக்காத உடையை நீபோய்*
*விலக்கினும் விலக்கார் உன்னை*

என்று,

தென்றலின் குறும்பைத் தீஞ்சுவைக் கவிதையாக்கித் தருகிறார். அழகின் சிரிப்பில் இயற்கையழகைப் பாடினாலும் இடை யிடையே நகைச்சுவை விதைகளையும் தூவிச் செல்கிறார் பாரதிதாசன். கீழே

தொங்கும் விழுதையும் தனது வாலையும் பாம்பென்று எண்ணிக் குரங்கு போடும் குதியாட்டம் சுவைத்தற் கினியது:

*கிளையினில் பாம்பு தொங்க*
*விழுதென்று, குரங்கு தொட்டு*
*''விளக்கினைத் தொட்ட பிள்ளை*
*வெடுக்கெனக் குதிப்ப தைப்போல்*
*கிளைதொறும் குதித்துத் தாவிக்*
*கீழுள்ள விழுதை யெல்லாம்*
*ஒளிப்பாம் பாய் எண்ணி எண்ணி*
*உச்சி போய்த் தன்வால் பார்க்கும்''*

சில இடங்களில் இயற்கையழகை மனிதாபிமானத்தோடு சேர்த்துப் பிசைந்து கொடுக்கிறார். இயற்கை அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்தாலும் ஏழை மக்களை அவர் மறப்பதில்லை.

*முற்றிய குலைப்ப ழத்தை*
*முதுகினில் சுமந்து நின்று*
*'வற்றிய மக்காள் வாரீர்'*
*என்றது வாழைத் தோட்டம்*

என்று பாடும்போது, 'வற்றிய மக்களின் வறுமை' வந்து முன்னால் நிற்கிறது.

கிளியைப் பற்றிப் பாடும்போது, அதன் சிறப்பொன்றைச் சுட்டிக் காட்டுகிறார். கிளிக்கு ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு கிடையாது இருவரையும் தன் கொஞ்சு மொழியால் மகிழ்ச்சியூட்டுகிறது. ஏழைகள் விரும்பியூட்டும் நைந்த பழத்தையும் கூழையும் விரும்பிச் சாப்பிடுகிறது.

*கொஞ்சுவாய் அழகு தன்னைக்*
*கொழிப்பாய்நீ, அரசர் வீட்டு*
*வஞ்சியர் தமையும் மற்ற*
*வறியவர், தமையும், ஒக்க*

*நெஞ்சினில் மகிழ்ச்சி வெள்ளம்*
*நிரப்புவாய், அவர் அளிக்கும்*
*நைஞ்சநற் பழத்தை உண்பாய்*
*கூழேனும் நன்றே என்பாய்*

என்று இனிதாகப் பாடுகிறார்.

கவிஞன் இயற்கைக் காட்சியைக் காணும்போது, அக்காட்சிகள் அவன் உள்ளத்தில் ஓவியங்களாகப் பதிகின்றன. அவ்வாறு உள்ளத்தில் பதிந்த ஓவியக் காட்சிகளுக்கு உயிர்கொடுத்து நிலை பேறுடைய படிமங்களாக (Images) ஆக்கிப் படிப்பவர் நெஞ்சத்தில் நிறுத்துகிறான். கவிதையைப் படிக்கும் போதெல்லாம், இந்த அழகோவியங்கள் திரைப்படங்களாக நம் நெஞ்சத்தில் ஓடுகின்றன.

பாரதிதாசன் தமது கவிதையில் அடுக்கடுக்காக ஓவியம் தீட்டுவதில் வல்லவர். மயிலின் தோகையில் எத்தனை ஓவியங்கள்!

*உனது தோகை புனையாச் சித்திரம்*
*ஒளிசேர் நவமணிக் களஞ்சியம் அதுவாம்*
*ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்*
*ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்*
*மரகத உருக்கின் வண்ணத் தடாகம்*

கண்ணாடித் தரைபோல் காட்சியளிக்கும் குளத்து நீரில் மிதக்கும் பசிய தாமரை இலைத் தட்டில், தவழ்ந்து விளையாடும் தண்ணீர்த் துளிகளை இயற்கை தீட்டிய அழகோவியமாகவே வடித்துக் காட்டுகிறார், பாரதிதாசன்.

*கண்ணாடித் தரையின் மீது*
*கண்கவர் பச்சைத் தட்டில்*
*எண்ணாத ஒளிமுத் துக்கள்*
*இறைந்தது போல், குளத்துத்*
*தண்ணீரிலே படர்ந்த*
*தாமரை இலையும் மேலே*
*தெண்ணீரின் துளியும் கண்டேன்;*
*உவப்போடு வீடு சேர்ந்தேன்.*

புறாவுக்கு ஒழுக்கமான ஓர் உணவுப் பழக்கம் உண்டு. முண்டியடித்து முட்டிமோதும் பழக்கம் மாந்தருக்குத்தான் உண்டு. பாரதிதாசனைக் கவர்ந்த இவ்வொழுக்கம் அழகான ஓவியமாகிறது.

*இட்டதோர் தாம ரைப்பூ*
*இதழ்விரிந் திருத்தல் போலே*
*வட்டமாய்ப் புறாக்கள் கூடி*
*இரையுண்ணும்; அவற்றின் வாழ்வில்*
*வெட்டில்லை; குத்து மில்லை;*
*வேறுவே றிருந்த ருந்தும்*
*கட்டில்லை; கீழ்மேல் என்னும்*
*கண்மூடி வழக்க மில்லை.*

ஆங்கிலக் கவிஞன் கீட்சைப் போலப் பாரதிதாசனும் ஓர் வண்ணக் கவிஞர் (Poet of colour). அவருக்கு வண்ணங்களில் அளவற்ற ஈடுபாடும் உண்டு. இயற்கையில் படிந்துள்ள வண்ணவேறுபாடுகளை எப்படியெல்லாம் பதிவு செய்ய முடியுமோ அப்படியெல்லாம் பாட்டில் பதிவு செய்கிறார்.

குயிலைப் பொதுவாகக் கருங்குயில் என்போம். ஆனால் குயில் கறுப்பில்லை. அதன் கறுத்த மேனியில் இலேசாகத் தங்க முலாம் பூசியது போல இருக்கும். இந்த மாயம் பாரதிதாசனின் கூர்த்த கட்புலனுக்குத்தான் தட்டுப்பட்டது.

*செங்கதிர் சீர்க்கையால்*
*பொன்னள்ளிப் பூசிய*
*கங்குல் நிகர்த்த*
*கருங்குயிலே கூவாயோ?*

என்று பாடிய பாரதிதாசன், அந்தி வானத்தின் செங்கதிர்ப் பூச்சைக் குயிலின் நிறத்தோடு ஒப்பிட்டு எப்படி மகிழ்ந்திருக்கிறார் என்பது புலனாகும்.

வீட்டில் புறா வளர்க்கும் பழக்கம் பாரதிதாசனுக்கு உண்டு. புறாக்களின் வண்ணங்கள் அவருக்கு அத்துபடி. அவற்றின் வண்ணங்களை அடுத்தடுத்த படிமங்களில் அழகாகத் தீட்டுகிறார்:

*இருநிலா இணைந்து பாடி*
*இரையுண்ணும்; செவ்வி தழ்கள்*
*விரியாத தாமரை போல்*
*ஓரிணை! மெல்லியர்கள்*
*கருங்கொண்டை! கட்டி ஈயம்!*
*காயாம்பூக் கொத்து! மேலும்*
*ஒருபக்கம் இருவா ழைப்பூ!*
*உயிருள்ள அழகின் மேய்ச்சல்.*

நாடகம் என்பது உணர்ச்சி மோதல்களின் வெளிப்பாடு. மாந்தரிடத்தில் காணப்படும் காதல், வீரம், அவலம், தாயன்பு, பகைமை, சீற்றம், போர்க்குணம் ஆகிய இயல்பூக்கங்கள் (Instincts) பறவைகளுக்கும் உண்டு. இவ்வுணர்ச்சிகள் பொங்கி வழியும்போது நாடகக் காட்சிகளாக அமைகின்றன. அக்காட்சிகளில் நடிக்கும் பறவைகளின் மெய்ப்பாடுகளையும் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் பார்திதாசன்.

*தலைதாழ்த்திக் குடுகு டென்று*
*தனைச்சுற்றும் ஆண்பு றாவைக்*
*கொலைபாய்ச்சும் கண்ணால், பெண்ணோ*
*குறுக்கிற்சென்றே திரும்பித்*
*தலைநாட்டித் தரையைக் காட்டி,*
*இங்குவா என அழைக்கும்*
*மலைகாட்டி அழைத்தா லுந்தான்*
*மறுப்பாரோ மையல் உற்றார்.*

தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் நடைபெறும் அன்பு நாடகம் உள்ளத்தை நெகிழ்விக்கும் தன்மையது. புறாக் குடும்பத்தில் நடைபெறும் அது போன்ற ஒரு நாடகக் காட்சியைக் கவிஞர் சிறப்பாக நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார்.

*தாய்இரை தின்ற பின்பு*
*தன்குஞ்சைக் கூட்டிற் கண்டு*
*வாயினைத் திறக்கும்! குஞ்சு*
*தாய்வாய்க்குள் வைக்கும் மூக்கைத்*

*தாய்அருந்தி யதைக் கக்கித்*
*தன்குஞ்சின் குடல் நிரப்பும்;*
*ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்!*
*அன்புக்கோர் எடுத்துக் காட்டாம்*

குழந்தைக்குத் தாய் மட்டுமே நம் வீடுகளில் கொஞ்சிக் கொஞ்சி உணவூட்டுவதைப் பார்க்கிறோம். ஆனால் குஞ்சுகளுக்குத் தாயும், தந்தையும் மாறி மாறி உணவூட்டும் அன்புப் பரிமாற்றத்தைப் பறவைகளிடம் தானே காணமுடிகிறது.

புறா நீர் அருந்தித் தன் வேட்கையைத் தணித்துக் கொள்ளும் போது, அதனிடத்தில் தோன்றும் மெய்ப்பாடுகளைப் பாரதிதாசன் இனிய நாடகமாக்கிக் காட்டுகிறார்.

*அகன்றவாய்ச் சட்டி ஒன்றின்*
*விளிம்பினில் அடிபொ ருந்தப்*
*புகும்தலை; நீர்வாய் கொண்டு*
*நிமிர்ந்திடும்; பொன் இமைகள்*
*நகும்; மணி விழிநாற் பாங்கும்*
*நாட்டிடும்; கீழ் இறங்கி*
*மகிழ்ச்சியாய் உலவி வைய*
*மன்னர்க்கு நடைகற் பிக்கும்*

நாடகத்தில் காணப்படும் ‘கம்பீர ராஜநடை’ இங்கும் இடம் பெறுகிறது. ஆடற்கலைக்குப் பாவமும், அடைவும் முக்கியம். அந்நாட்டியப்பண்புகளை மயிற்புறாவிடம் கண்டு மகிழ்கிறார் பாரதிதாசன்.

*மயிற்புறா படம் விரிக்கும்;*
*மார்பினை முன் உயர்த்தும்*
*நயப்புறு கழுத்தை வாங்கி*
*நன்றாக நிமிர்ந்து, காலைப்*
*பயிற்றிடும்; ஆடல் நூலின்*
*படிதூக்கி அடைவு போடும்*
*மயிற்புறா வெண்சங்கு ஒக்கும்*
*வால்தந்த விசிறி ஒக்கும்*

மார்பகங்களை முன்னுயர்த்துவதும், கழுத்தை வெட்டுவதும் நாட்டிய மங்கையரிடம் நாம் அடிக்கடிப் பார்த்து மகிழும் சுவையான காட்சிகள். தந்த விசிறி மயிற்புறாவின் வாலுக்கு அழகான உவமை.

புறாக்களிடம் காணப்படும் இல்லற ஒழுக்கத்தைச் சுட்டிக் காட்டுவதன் மூலம், மக்களிடம் காணப்படும் குறைகளைச் சாடுகிறார்.

*ஒரு பெட்டை தன்ஆண் அன்றி*
*வேறொன்றுக் குடன்ப டாதாம்*
*ஒரு பெட்டை மத்தாப்பைப் போல்*
*ஒளிபுரிந்திட நின் றாலும்*
*திரும்பியும் பார்ப்ப தில்லை*
*வேறொரு சேவல்! தம்மில்*
*ஒருபுறா இறந்திட் டால்தான்*
*ஒன்றுமற் றொன்றை நாடும்.*

நம்மிடத்தில் நிலவும் பலதார மணத்தையும், சின்ன வீட்டுப் பழக்கத்தையும் நயமாகக் கண்டிக்கிறார் பாரதிதாசன்.

கலாப மயிலின் நீண்ட கழுத்தைப் பார்த்ததும், பாரதிதாசனுடைய கற்பனை சிறகடித்துப் பறக்கிறது. அம்மயிலை அருகில் அழைத்து "நீயும் பெண்களும் நிகர் என்று சொல்லுகிறார்கள். உண்மைதான்! என்றாலும் உன்னுடைய கழுத்துக்கு அவர்களுடைய கழுத்து ஒப்பாகுமா? இயற்கை அன்னை உனக்கு நீண்ட கழுத்தையும் பெண்களுக்குக் குட்டைக் கழுத்தையும் ஏன் கொடுத்தாள் தெரியுமா?" என்று ஒரு கேள்வியை எழுப்பிவிட்டு

*அயலான் வீட்டில் அறையில் நடப்பதை*
*எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே*
*இயற்கை அன்னையிப் பெண்களுக் கெல்லாம்*
*குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கோ*
*கறையொன் றில்லாக் கலாப மயிலே!*
*நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தாள்*

என்று கூறுகிறார்.

அடுத்தவர் நடப்பில் விரும்பி மூக்கை நீட்டும் பழக்கம், பெண்ணினத்தின் மீது படிந்துள்ள கறையாகக் கவிஞர் நினைத்தார் போலும். என்றாலும் பெண்கள் என்ன கூறுவார்களோ என்ற அச்சம் அவருக்கில்லாமல் இல்லை. எனவே மயிலை அருகில் அழைத்து ''நான் சொன்னதைப் பெண்களிடம் சொல்லிவிடாதே! அவர்கள் என்னை ஏசுவார்கள்'' என்று மெதுவாக அதன் காதில் ஓதுகிறார்.

''நல்லவேளை! கவிஞர் இதைக் கலாப மயிலான ஆண்மயிலிடம் தான் கூறினார். இதையே பெண் மயிலிடம் கூறியிருந்தால் அது கவிஞரைக் கொத்தியிருக்கும்'' என்று கவிஞர் சௌந்திரம் கைலாசம் நயம்படக் கூறுகிறார்.

கோழிச் சேவல் காதலர்க்கு எதிரி. அது நேரந்தெரியாமல் கூவி, அவர்களுக்குத் தொல்லை கொடுக்கும் இயல்பினது. சங்கப் புலவர் முதல் பலர், தமது பாடலில் கோழியைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றியிருக்கின்றனர். ஆனால் பாரதிதாசன் சட்டமன்றத்துக்கே சென்றுவிட்டார்.

*சட்டமன் றம்கோழி வளர்ப்பதைத் தடைசெய்யுமா?*
*தொட்டார் கைதொட்டுத் தொடருமுன்-பட்டப்*
*பகலாயிற் றென்று பறையடிக்கும் சற்றும்*
*அகலார் அகலும் படிக்கு!*

பாரதிதாசன் பாடிய பறவைப் பாடல்களில் வானம்பாடி குறிப்பிடத்தக்கது. பாரதிதாசன் பாடிய வானம்பாடிப் பாடலுக்கும், ஆங்கிலக் கவிஞன் வோர்ட்ஸ் வொர்த் பாடிய கக்கூ (Cuckoo) என்ற பாடலுக்கும் ஒரு பொதுத் தன்மை இருக்கக் காணலாம்.

சிறு குன்றுகள் சூழ்ந்த ஸ்காத்லாந்து ஏரிக்கரையில் படுத்த வண்ணம் இயற்கையழகை மாலை நேரத்தில் சுவைப்பது வோர்ட்ஸ் வொர்த்தின் விடுமுறைக் காலப் பொழுதுபோக்கு. அவ்வாறு படுத்திருக்கும்போது உள்ளத்தை உருக்கும் ஒரு தேனிசை வானவெளியில் வட்டமிடுவதைக் கேட்டான். ஆனால் அந்த இசை எங்கிருந்து வருகிறது என்று அவனுக்குத் தெரியவில்லை. அந்த இசையை எழுப்புவது யார் என்றும் அவன் கண்ணுக்குப் புலனாகவில்லை.

அந்த இசை ஒரு குன்றிலிருந்து மற்றொரு குன்றிற்கும், ஓர் இளமரக் காட்டிலிருந்து மற்றோர் இளமரக் காட்டிற்கும் சுற்றிச் சுற்றி வந்தது. அந்த இசைப் பயணத்தைப் பொருத்தமான சொற்றொடர் ஒன்றால் குறிப்பிடுகிறான் வோர்ட்ஸ் வொர்த். "Wandering Voice' என்பது அச்சொற்றொடர்.

வோர்ட்ஸ்வொர்த்துக்கு ஏற்பட்ட அதே மயக்கம் வானம்பாடியின் இன்னிசையைக் கேட்ட பாரதிதாசனுக்கும் ஏற்பட்டிருக்கிறது. அவரது பாடலைக் கேளுங்கள்!

*வானந்தான் பாடிற்றா? வானிலவு பாடிற்றா?*
*தேனை அருந்திச் சிறுதும்பி மேலேறி*
*நல்லிசை நல்கிற்றா? நடுங்கும் இடிக்குரலும்*
*மெல்லிசை பயின்று மிக இனிமை தந்ததுவோ?*
*வானூர்தி மேலிருந்து வல்ல தமிழிசைஞன்*
*தானூதும் வேய்ங்குழலா? யாழா தனியொருத்தி*
*வையத்து மக்கள் மகிழக் குரலெடுத்துப்*
*பெய்த அமுதா?*

என்று அடுக்கிக் கொண்டே போகிறார். வோர்ட்ஸ் வொர்த் காடுமேடெல்லாம் தேடித் திரிந்தும் கக்கூவைப் பார்க்க முடியவில்லை. ஆனால் வானம்பாடி கண்ணுக் கெட்டாத தூரத்தில் பாரதிதாசனுக்குக் காட்சி வழங்கியது.

*உன்றன் மணிச்சிறகும் சின்ன கருவிழியும்*
*என்றன் விழிகட்கே எட்டா உயரத்தில்*
*பாடிக் கொண்டே இருப்பாய்*

என்று பாடுகிறார்.

கவிஞன் கீட்சு நைட்டிங்கேலின் இனிய குரலுக்குப் போதை தரும் மதுவையும் கவிதையையும் ஒப்பிடுகிறான்; கொஞ்சங் கொஞ்சமாக உயிரைக் கொள்ளை கொள்ளும் 'ஹெம்லாக்' என்ற நஞ்சையும் ஒப்பிடுகின்றான். ஆனால் பாரதிதாசன்

*'ஏந்தும் வான் வெள்ளத்தில்*
*கலக்கும் இன்ப வெள்ளம்'*

என்று வானம் பாடியின் குரலைக் குறிப்பிடுகிறார்.

விண்ணையும் மண்ணையும் இன்ப வெள்ளத்தில் நனைக்கும் வானம்பாடியோடு பேசவேண்டும் என்ற ஆவல் கவிஞருக்கு ஏற்படுகிறது. பேசவும் செய்கிறார். வானம்பாடியிடம் பேசும் கடைசி இரண்டு வரிகள் இப்பாடலின் உயிர்நாடியாக அமைகின்றன.

*அசையா மகிழ்ச்சி*
*அடைகநீ உன்றன்,*
*இசை மழையால்*
*இன்புறுவோம் யாம்!*

என்று பாடலை முடிக்கிறார். கீட்சு, நைட்டிங்கேலின் பாடல் அமரத்தன்மை (immortality) வாய்ந்தது என்றும், மக்கள் வாழ்க்கை துன்பமும் சாவும் நிறைந்தது என்றும் பாடுகிறான். இங்குப் பாரதிதாசன் வானம்பாடியின் மகிழ்ச்சியை அசையா மகிழ்ச்சி என்று குறிப்பிட்டு அதன் நிலைபேற்றை நம் உள்ளத்தில் நினைவு படுத்துகிறார். இத்தொடர் மூலம் மனிதனின் மகிழ்ச்சி அசையும் மகிழ்ச்சி என்பதைச் சொல்லாமல் சொல்கிறார்.

வானம்பாடியின் பாடலைக் கேட்டபோது ஏற்படும் இன்பம் கலந்த வியப்பு, குயிலின் பாடலைக் கேட்டபோதும் பாரதிதாசனுக்கு ஏற்படுகிறது.

*ஆக்காத நல்லமுதா!*
*அடடாநான் என் சொல்வேன்*
*விட்டுவிட் டொளிக்கு மொரு*
*மின்வெட்டுப் போல்நறவின்*
*சொட்டுச் சொட் டொன்றாகச்*
*சுவையேறிற் றென் காதில்*

என்று பாடுகிறார். இவ்வளவு சுவையான குரலை வெளிப்படுத்தும்

அக்குயிலின் அலகையும் வாயையும் பாராட்ட வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

*கருநெய்தல் காட்டரும்பு*
*போலும் குவிந்த*
*இரண்டலகு தம்மில்*
*பிரிந்து குரலெடுக்க*
*வாயிற் செவ்வல்லி*
*மலர்கண்டு நான் வியந்தேன்*

என்று பாராட்டி மகிழ்வதோடு அதன் அலகுக்குச் சாமணத்தையும் உவமை கூறுகிறார்.

வறிஞனாக இருப்பவன் வள்ளலாக இருக்க முடியாது. ஆனால் குயில் அதற்கு விதிவிலக்கு என்று கருதுகிறார் கவிஞர். சொந்த வீடு கூட இல்லாத ஏழைக்குயிலிடம் குடிகொண்டிருக்கும் இந்த உயர்ந்த பண்ணை

*சேய்மையிலோர் சோலைக்குச்*
*செல்லும் குயிலினிடம்*
*தூய்மைமிகு பண்பொன்று*
*கேட்பீர்; சுவையைப்*
*படியளக்கும் வையத்தார்*
*உண்ணும் படியே*
*குடியிருப்பொன் றில்லாக் குயில்*

என்று பாடுகிறார்.

கவிஞன் உள்ளம் வியப்பிற்குரியது. அவன் எதை விரும்பு கிறான், எதை வெறுக்கிறான் என்று சொல்ல முடியாது. அவன் உள்ளத்தின் ஓட்டத்தைப் பின் தொடர்ந்து சென்றால்தான் உண்மை விளங்கும். காலைக் கதிரவனை, மாலை நிலாவை, தண் பொழிலைத், தாமரையை விரும்பும் பாரதிதாசனுக்கு ‘இருள்’ மிகவும் பிடித்திருக்கிறது. அழகின் சிரிப்பில் இருளைப் பற்றியும் பத்து விருத்தங்கள் எழுதியுள்ளார். இருளில் சுவைக்க என்ன இருக்கிறது

என்று பொதுவாக எண்ணுவதுண்டு. ஆனால் இருளின் அருமை காதலர்க்கும் ஓவியருக்குமே புரியும்.

பரப்பரப்பான இந்த உலகில் உழைத்துழைத்து அலுத்துப்போன மக்களைத் தன் அன்புக் கரங்களால் ஆரத் தழுவி அவர்களை அமைதியான துயிலில் ஆழ்த்துவது இருளாகிய தாய் அல்லவா? இவ்வரிய தொண்டை

*ஆடிஓ டிப்போர் இட்டும்*
*அருந்துதல் அருந்தி யும்பின்*
*வாடியே இருக்கும் வைய*
*மக்களை உயிர்க்கூட் டத்தை*
*ஓடியே அணைப்பாய்! உன்றன்*
*மணிநீலச் சிறக ளாவ*
*மூடுவாய் இருளே! அன்பின்*
*முழக்கமே உனக்கு நன்றி*

என்று கூறிப் பாராட்டுகின்றார். பகலும், இரவும், இருளின் ஆடைகளாம், அதைச் சுவைபடப் பாடுகிறார் பாரதிதாசன்.

*அடிக்கடி உடையில் மாற்றம்*
*பண்ணுவாய் இருளே, உன்றன்*
*பகலுடை தங்கச் சேலை!*
*வெண்பட்டில் இராச் சேலைமேல்*
*வேலைப்பா டென்ன சொல்வேன்!*

ஓவியருக்கு மட்டுமே உரிய ஓர் அரிய செய்தியை இப்பாடலில் விளக்குகிறார் பாரதிதாசன். ஓவியம் சிறக்க ஓவியர்கள் சில இடங்களில் இருளைப் பூசுவர்; இருட்கோடுகளை இழுப்பர். இதை அவர்கள் ஆங்கிலத்தில் 'Shade' என்று கூறுவர். அந்த இருட் கோடுகளே ஓவியங்களின் அடையாளங்களை எடுப்பாக அறிவிக்கும். எந்தெந்த இடத்தில் இருள் அழகாக வீற்றிருக்கும் என்பதைக் கவிஞர் சுட்டிக் காட்டுகிறார்.

*உயர்ந்துள்ள அழகு மூக்கின்*
*இருபுறம் உறைவாய்; மங்கை*
*கயல்விழிக் கடையில் உள்ளாய்;*
*காதினில் நடுப்பு றத்தும்*
*அயலிலும் சூழ்வாய்; பெண்ணின்*
*முகத்தினில் அடையா ளத்தை*
*இயக்குவாய் இருளே, உன்சீர்*
*ஓவியர் அறிந்தி ருப்பார்.*

தாமரைப்பூக்களின் ஒளியிதழ்கள் அடிப்புறத்தில் இருள் படுத்திருக்கிறதாம். இதைத் 'தப்புக் காட்டுதல்' என்கிறார் கவிஞர். இதழின் அடியில் உள்ள இருள், மேலுள்ள ஒளியை மிகைப்படுத்திக் காட்டுதற்காக அவ்வாறு அமைந்திருக்கிறதாம். இது இயற்கையின் சிறப்பு, இதை

*அடுக்கிதழ்த் தாம ரைப்பூ*
*இதழ்தோறும் அடிப்புறத்தில்*
*படுத்திருப் பாய்நீ! பூவின்*
*பசையிதழ் ஒவ்வொன் றுக்கும்*
*தப்புக்காட் டுகின்றாய்! இன்றேல்*
*தாமரை அழகு சாகும்!*
*அடுத்திடும் இருளே, எங்கும்*
*அனைத்துள்ளும் அழகு நீயே!*

என்று பாராட்டிப்பாடுகிறார்.

ஆங்கில இயற்கைப் புலவன் வோர்ட்ஸ் வொர்த்தைப் பற்றி ஒரு மேலைநாட்டுத் திறனாய்வாளன் பின் கண்டவாறு குறிப்பிடுகின்றான். "வோர்ட்ஸ் வொர்த்தின் கையிலிருந்த எழுது கோலைப் பிடுங்கி, இயற்கை என்னும் நங்கை தன்னைப் பற்றித்தானே எழுதினாள் (The nature snatched the pen from Wordsworth and wrote about herself) என்று குறிப்பிடுகிறான். பாரதிதாசனுக்கும் அக்கருத்துப் பொருந்தும்.

# 7
# மனித நேயர்

'மானிடம் என்றொரு வாளும் - அதை
வசத்தில் அடைந்திட்ட உன்இரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் - இதில்
வைத்திடும் நம்பிக்கை, வாழ்வைப் பெருக்கும்'.

**பா**ரதிதாசன் தொடாத பொருளில்லை; அவர் தொட்டுப் பொன்னாகாதது எதுவுமில்லை. அவர் வாழ்க்கை பலபடிகளையும், பக்குவங்களையும் கொண்டது. ஆத்திகர், நாத்திகர், தேசியவாதி, பகுத்தறிவுவாதி, சீர்திருத்தவாதி, மனிதநேயர் என்ற பல படிகளைக் கடந்து வந்தவர். ஒவ்வொரு நிலையிலும் அவருள்ளத்தில் முகிழ்த்து எழுந்த கருத்துக்களைத் தமது கவிதைகளில் நிரல்படத் தொகுத்து முத்துக்களாக வரிசைப்படுத்தியுள்ளார். வாழ்க்கையில் எந்த நிலையிலும் அவர் மனிதநேயத்துக்கு மாறாகப் பேசியதில்லை.

அவர் வீரத்தை பற்றிப் பாடினார். ஆனால் போரையும் போர்க் கொடுமைகளையும் வெறுத்தார். மனிதர்களின் மடமையையும் அறியாமையையும் கடுமையாகச் சாடினார். ஆனால் மனிதநேயம் அவர் நூல்களில் எங்கும் பேசப்படுகிறது. உலக ஒற்றுமை என்ற பாடலில் மாந்தன் உள்ளம் எப்படி விரிவடைய வேண்டும் என்பதைப் படிப்படியாக விளக்கிச் செல்கிறார்.

''தன் பெண்டு பிள்ளைகளை மட்டும் நேசிப்பவன் உள்ளம் கடுகுபோல் சிறியது; தன் ஊரை மட்டும் நேசிப்பவன் உள்ளம் துவரை போன்றது. தனது நாட்டை மட்டும் நேசிப்பவன் உள்ளம் தொன்னை போன்றது. ஆயுதங்களை ஒதுக்கித் தீவிரவாதத்தை வெறுத்துத் தன் நாட்டில் வாய்த் திறத்தாலும் கைத்திறத்தாலும் அமைதியை நிலைநாட்டுபவர் உள்ளம் மாம்பிஞ்சு போன்றது. ஆனால் 'தாயுள்ளம்' என்ற உயர்ந்த உள்ளம் ஒன்று உண்டு'' என்று கூறி அதைக் கீழ்க் கண்டவாறு விளக்குகிறார் கவிஞர்:

*தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்*
*தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்*
*தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே*
*சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே!*

''உலக மக்கள் எல்லாரும் இறைவன் படைப்பு ென்றால், அவர்களுள் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு தோன்றுவது எங்ஙனம்? ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளில் வேறுபாடு விளைவது எங்ஙனம்? ஒரு கொடியில் பலவிதப் பூக்கள் மலர்வது எப்படி?'' என்று பகுத்தறிவு வினாவை எழுப்புகிறார் பாரதிதாசன்.

*பொறப்புடை முல்லைக் கொத்தில்*
*புளியம்பூ பூத்ததென்றால்*
*சொற்படியார் நம்புவார் - சகியே*
*சொற்படி யார் நம்புவார்?*

மலத்தைத் தொட்டால் தொட்ட இடம் மட்டும் தீட்டு' என்று கையைக் கழுவிக் கொள்கிறோம். ஆனால் சேரியில் வாழ்பவனைத் தொட்டால் உடம்பெல்லாம் தீட்டாவது எங்ஙனம்? என்று கேட்கிறார் கவிஞர்.

*மலம்பட்ட இடம் தீட்டாம்*
*மக்கள் சிலரைத் தொட்டால்*
*தலைவரைக்கும் தீட்டாம்-சகியே*
*தலைவரைக்கும் தீட்டாம்*

ஒரு பண்ணை முதலாளி, தனது பண்ணையைப் பார்வையிடச் செல்கிறான். பண்ணை வயலில் ஓர் உழவன் உழுது கொண்டிருக் கிறான். கடுமையான வெயில் சுடுகிறது. வெயிற்கொடுமையைத் தாங்க முடியாமல் பண்ணை முதலாளி பக்கத்தில் இருந்த மரத்து நிழலில் சற்று நேரம் நின்று பார்த்தான். அப்போதும் வெப்பம் தகிக்கிறது. பக்கத்திலிருந்த வளமனைக்குச் சென்றான். குளிர்வசதி பொருத்தப்பட்டிருந்த மாடி அறையில் படுத்து ஓய்வு பெற்றான். பிறகு மாலையில் மீண்டும் பண்ணைக்குச் சென்றான். உழவன் தொடர்ந்து உழுது கொண்டிருந்தான். பண்ணை முதலாளிக்குப்

பெரிய வியப்பு! காலையிலிருந்து வெயிலில் நிலத்தை உழும் உழவன் எப்படிச் சாகாமல் இருக்கிறான் என்று வியந்தான். இப்பாடலின் தலைப்பு 'சாவாத உழவன்' என்பது.

*வெயிலில் உழவன் வியர்க்க உழுதிடும்*
*வயல் அயல் மரத்து நிழலும் சுட்டதால்*
*குளிர்பொருந்து கூடம் சென்றுபின், மாலைஅவ்*
*வயிலிடை வந்தேன் உழவன்*
*உயிரோ டின்னும் உழுகின்றானே!*

தனது துன்பத்தைப்போல், மற்றவர் துன்பத்தையும் கருதும் உயர் பண்பு வாய்த்துவிட்டால் உலகமக்களுக்குத் துன்பமில்லை என்பது வள்ளுவர்வாக்கு. இக்கருத்தை,

*துன்பம் பிறர்க்கு! நல் இன்பம் தமக்கெனும்*
*துட்ட மனோபாவம்*
*அன்பினை மாய்க்கும்; அறங்குலைக்கும்; புவி*
*ஆக்கந் தனைக் கெடுக்கும்.*

என்று பாடுகிறார். ஓர் வல்லரசு மற்ற நாட்டின் பெருமையை அழிக்க நினைக்கும் கொடிய எண்ணம்தான் 'உலகத்தின்மீது விழும் பேரிடி' என்று கூறவந்த கவிஞர்

*நல்லவர் நாட்டினை வல்லவர் தாழ்த்திடும்*
*நச்சு மனப்பான்மை*
*தொல்புவி மேல்விழும் பேரிடியாம்; அது*
*தூய்மைதனைப் போக்கும்*

என்று பாடுகிறார். சிறிய நாடான வியட்நாம் மீது இரக்கமின்றிப் போர்தொடுத்து அந்நாட்டைச் சுடுகாடாக்கிய அமெரிக்க நாட்டுக்குக் கீழ்க்கண்டவாறு எச்சரிக்கை விடுக்கிறார் கவிஞர்.

*அமெரிக்கக் காலடியில் வியத்நாம் மக்கள்*
*ஆயிரம் ஆண் டானாலும் பணிவதில்லை*
*திமிருற்ற ஏகாதி பத்தி யத்தைத்*

*திசைதோறும் எதிர்க்கின்றார்; அவர் நாட்டாரே!*
*ஊன்றி எழும் நிறவெறிப்போர் களைய வில்லை*
*உலகமக்கள் உறவென்னும் அன்பும் இல்லை*
*ஈன்றவரும் வெறுக்கும் வண்ணம் வியத்நாம் வீரம்*
*இடுப்பொடித்துப் போடும் உனை எச்சரிக்கை*

ஜப்பானில் இரோசிமா, நாகசாகியில் அணுக்குண்டுத் தாக்குதல் நடந்தபோது, அதன் கொடுமையை அறிந்து வருந்திய பாரதிதாசன்,

*நானிலம் அனைத்தும் உள்ள*
*நச்சுப்பாம் பனைத்தும் கூட்டி*
*வானில் ஓர் அணுக்குண் டாக*
*வன்பகை நெருப்ப ழுத்தித்*
*தான்பொழிந் தானோ பாவி*

என்றும்

*இன்னும்ஓர் நூறாண் டுக்கும்*
*இரண்டூரின் சுற்றுப் பக்கம்*
*ஒன்றுமே முளையா தாமே*
*வாழ்தலும் ஒண்ணா தாமே*

என்றும் உள்ளம் உருகப் பாடியுள்ளார்.

குவெட்டாவில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட கொடுமைகளை எண்ணிப் பாரதிதாசன் எழுதிய பாடல்கள் உள்ளத்தை உலுக்கும் தன்மையன. நிலநடுக்கம், ஆழிப் பேரலை, எரிமலை வெடிப்பு போன்ற கொடுமைகளை முன்கூட்டி அறிவது கடினம். அவ்வாறு அறிந்தாலும் அதைத் தடுப்பது அவ்வளவு எளிதன்று. இக்கருத்தை

*நாளைய காலையிலே-இந்த*
*ஞாலம் உடைவதெனில்*
*வேளை அறிந்ததனை - நீ*
*விலக்கல் சாத்தியமோ?*

என்று கேள்வியாக எழுப்புகிறார். ஐம்பத்தாறாயிரவர் மடிந்த அந்தக் கோர சம்பவத்தின் காட்சியை

*மாடம் இடிந்தனவாம் - அவை*
*மண்ணில் புதைந்தனவாம்*
*ஆடும் தரையோடும் -மெத்தை*
*அடுக்கொடிந் தனவாம்.*
*கூடத்து மக்களெலாம் - எழில்*
*கொழுஞ்சிப் பழம்போலே*
*வாட நசுங்கினராம் - ரத்த*
*வாடை எடுத்ததுவாம்*

என்ற கண்ணீர் வரிகளால் படம்பிடித்துக் காட்டுகிறார். ஏழைகள் படும் துயரை இவர்போல சித்தரித்தவர் எவருமில்லை.

*கந்தையணிந்தோம் - இரு*
*கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்*
*மொந்தையில் கூழைப் - பலர்*
*மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடப்போம்*
*சந்தையில் மாடாய் - யாம்*
*சந்ததம் தங்கிட வீடு மில்லாமல்*
*சிந்தை மெலிந்தோம் - எங்கள்*
*சேவைக்கெல்லாம் இது செய்நன்றிதானோ?*

என்று ஏழைகள் கேட்கும் கேள்வி நம் உள்ளத்தைப் பிசைகிறது.

பொதுவுடைமைக் கொள்கையின்பால் பற்றும் ஈடுபாடும் கொண்டவர் பாரதிதாசன். ''பொதுவுடைமைக் கொள்கை திசை யெட்டும் சேர்ப்போம்'' என்ற முரசு கொட்டியவர்.உருசியத் தொழிலாளி ஒருவன் பொதுவுடைமைத் தாள் ஒன்றில் ஏவுகணை பற்றி எழுதிய கருத்துகள் இவருடைய சிந்தனையைக் கிளறின. ''ஏவுகணைகளை ஏவுவதால் என்னைப் போன்ற ஏழைகளுக்கு என்ன கிடைக்கும்?'' என்று அத்தொழிலாளி கேட்டிருந்தான். எனவே உருசிய நாட்டிலும் ஏழைகள் வருந்தும் நிலையில் இருந்து வந்ததை அறிந்த பாரதிதாசன், வல்லரசுகளின் போட்டியின் நிமித்தம் பெரும்

செலவில் ஏவப்பட்ட ஏவுகணை முயற்சிகளைக் கண்டிக்கிறார். அறிவியல் வெற்றியை விட ஆன்ம நேயத்தைச் சிறந்ததாகக் கருதுகிறார் கவிஞர்:

*ஏழில்நிலவு நோக்கி ஏவு கணைகள்*
*ஏவு கின்றதால் என்னைப் போன்ற*
*ஏழைகட் கென்ன கிடைக்கக் கூடும்?*

*வீட்டு வசதியை ஏவுகணை கூட்டுமா?*
*பணிமனைப் பெண்ணின் பாதுகாப்பிற்குப்*
*பறக்கும் நிலவு பண்ணிய தென்ன?*

*ஏவுகணை ஒன்றை இயற்று தற்குச்*
*செலவிடும் பெருந்தொகை இருந்தால்*
*உலவும் ஏழை மக்களுக் குதவுமே!*

என்று கூறி உலக மக்களின் சிந்தனையையும் கிளறுகிறார். 'புதியதோர் உலகு செய்வோம்' என்று உலக மக்களுக்கு அறை கூவல் விடுக்கிறார்.

*ஏறு! வானை இடிக்கும் மலைமேல்*
*ஏறு! விடாமல் ஏறு! மேன்மேல்!*
*ஏறி நின்று பாரடா எங்கும்;*
*எங்கும் பாரடா இப்புவி மக்களைப்*
*பாரடா உனது மானிடப் பரப்பைப்*
*பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!*
*'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய*
*மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்*
*அறிவை விரிவு செய்! அகண்ட மாக்கு!*
*விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!*
*அணைந்து கொள்! உன்னைச் சங்கம மாக்கு!*
*மானிட சமுத்திரம் நானென்று கூவு!*
*பிரிவிலை எங்கும்; பேதமில்லை*
*உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்!*

என்று உலகில் உள்ள மக்களுக்கு மனிதநேயத்தை ஊட்டுகிறார் கவிஞர்.

# 8

# பெண்ணுரிமை பேணியவர்

கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம்; அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை

''ஒருவன் வெற்றிகரமாக வாழ்க்கை நடத்த உதவுபவள் மனைவிதான். மனைவியால்தான் ஓர் ஆடவன் ஒழுங்கும் தூய்மையும் பெறுகிறான்'' என்று ஆங்கிலப் பேரறிஞர் பெர்னாட்ஷா கூறியுள்ளார். இதைப் புவிப்பெரியோன் கூறிய பொன்மொழி என்று குறிப்பிடுகிறார் பாரதிதாசன்.

சங்ககாலத்தில் பெண்கல்வி சிறப்பாகவே இருந்திருக்கிறது. ஆண்களுக்கு இணையாகப்பெண்களும் கவிபாடும் ஆற்றல் பெற்று விளங்கியதை அவர்கள் இயற்றிய பாடல்களும் இலக்கியங்களும் மெய்ப்பிக்கின்றன.ஆனால் காலப்போக்கில் அவர்கள்கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டன. பெண் போகப் பொருள் என்ற அளவிலே மதிக்கப்பட்டாள். சமூகச் சட்டங்கள் பெண்களை மிகவும் கேவலப்படுத்தின.அவள் தேரையாக, பொட்டுப் பூச்சியாக, ஊமையாக வாழும் அவல நிலை ஏற்பட்டது. புழுதி, குப்பை, உமியைவிடக் கேவலமாகப் பெண்ணினம் மதிக்கப்படும் நிலையை,

*புழுதி குப்பைஉமி - இவற்றின்*
*புன்மைதனைக் களைந்தே*
*பழரசம் போலே அவற்றைப்*
*பயன்படுத்து கின்றார்!*
*அழகிய பெண்கள் - நமக்கோ*
*அழுகிய பழத்தோல்*

என்று குறிப்பிடுகிறார் பாரதிதாசன்.

'கூண்டில் கிளி வளர்ப்போரும் குக்கல் வளர்ப்போரும் அவைகளின் விருப்பமறிந்து வேண்டியதைக் கொடுப்பர். ஆனால் கணவனை இழந்த பெண்ணுக்கு எது தேவையென்று யாரும் நினைப்பதில்லை' என்று வருந்துகிறார் கவிஞர்.

இளமைத் திருமணத்தால் ஏற்படும் கொடுமையை ஒரு தாய் வாயிலாக உள்ளம் உருகச் சித்தரிக்கிறார்.

*கண்களோ மருகனும் மகளும் கனிந்து*
*காதல் விளைப்பதைக் காண ஓடின*
*வாயின் கடைசியில் எச்சில் வழியக்*
*குறட்டை விட்டுக், கண்கள் குழிந்து*
*நரைத்தலை சோர்ந்து நல்லுடல் எலும்பாய்ச்*
*சொந்த மருகக் கிழவன் தூங்கினான்!*
*இளமை ததும்ப, எழிலும் ததும்பக்*
*காதல் ததும்பக் கண்ணீர் ததும்பி*
*என்மகள் கிழவன் அருகில் இருந்தாள்!*

கைம்மை நிலையைப் பற்றிக் குறிப்பிட வந்த கவிஞர்,

*கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே - இங்கு*
*வேரில் பழுத்த பலா - மிகக்*
*கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே - குளிர்*
*வடிகின்ற வட்டநிலா.*

என்று பாடுகிறார். இரக்கமற்ற ஆண்கள் சமுதாயத்தைப் பார்த்து,

*காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே - கெட்ட*
*கைம்மையைத் தூர்க்காதீர் - ஒரு*
*கட்டழகன் திருத்தோளினைச் -சேர்ந்திடச்*
*சாத்திரம் பார்க்காதீர்*

என்று அறிவுரை கூறுகின்றார்.

வீட்டில் அடைபட்டிருக்கும் பெண்டிர் நிலையை விளக்கவந்த பாரதிதாசன்

*தனித்துக் கிடந்திடும் லாயம் - அதில்*
*தள்ளியடைக்கப் படுங்குதிரைக்கும்*
*கனைத்திட உத்தரவுண்டு - வீட்டில்*
*காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டும்*

என்று பாடுகிறார். இவ்வாறு வீட்டில் அடைபட்டு அடிமைபோல் வாழ்ந்த பெண்ணினம் அடைந்த இழிநிலையை 'நம்மாதர்' என்ற கவிதையில் அழகாகச் சித்தரித்துக் காட்டுகிறார்.

*பழங்கல அறைக்குளே பதினைந்து திருடர்கள்*
*பதுங்கிடவும் வசதி யுண்டு*
*பதார்த்தவகை மீதிலே ஒட்டடையும் ஈக்களும்*
*பதிந்திடவும் வசதி யுண்டு*
*முழங்கள் பதினெட்டிலே மாற்றமில் லாவிடினும்*
*முன்றானை மாற்ற முண்டு*
*முடுகிவரும் நோய்க்கெலாம் கடவுளினை வேண்டியே*
*முடிவடைய மார்க்க முண்டு*
*தொழுங்கணவன் ஆடையில் சிறுபொத்தல் தைக்கவும்*
*தொகைகேட்கும் ஆட்கள் வேண்டும்*
*தோசைக் கணக்கென்று கரிக்கோடு போடவோ*
*சுவருண்டு வீட்டில் இந்த*
*ஒழுங்கெலாம் நம் மாதர் வாரத்தின் ஏழுநாள்*
*உயர்விரதம் மேற்கொள்வதால்*
*உற்றபலன் அல்லவோ அறிவியக் கங்கண்*
*டுணர்ந்த பாரத தேசமே!*

பெண்டிரின் இவ்விழி நிலைக்கும் கொடுமைகளுக்கும் காரணம் கல்வியறிவின்மையே என்பதை உணர்த்த வந்த பாரதிதாசன் பெண் கல்வியின் இன்றியமையாமையை விளக்க அழகிய இசைப் பாடல்களை எழுதியுள்ளார். பள்ளிக்குச் செல்லமறுக்கும் தன் பெண் குழந்தைக்குத் தந்தை அறிவுரை கூறுவதுபோல அமைந்த பாடல் சிறப்பானது.

*தலைவாரிப் பூச்சூடி உன்னைப்-பாட*
*சாலைக்குப் போஎன்று சொன்னாள் உன் அன்னை*

*சிலைபோல ஏனங்கு நின்றாய் - நீ*
*சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?*

என்று மகளைக் கேட்ட தந்தை அடுத்த வரிகளில் கல்வியின் சிறப்பையும் உயர்வையும் எடுத்துச் சொல்கிறார். மேலும் கல்வியை விலை கொடுத்து வாங்க முடியாது என்பதையும் விளக்குகிறார்.

*விலைபோட்டு வாங்கவா முடியும்?-கல்வி*
*வேளைதோறும் கற்று வருவதால் படியும்*
*மலைவாழை அல்லவோ கல்வி-நீ*
*வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!*

இவ்வாறு கல்வியின் சிறப்பை விளக்கிய தந்தை, தன்மகள் சரியாகப் படித்து முன்னேறாவிட்டால் எதிர்காலச் சமூகம் தன்னைப் 'பொறுப்பற்ற தந்தை' என்று இகழும் என்பதையும் எடுத்துச் சொல்லிப் பெண்கல்வியை வற்புறுத்துகிறார்.

பாரதிதாசன் 'அன்னையின் ஆவல்' என்ற இசைப்பாடலொன்று எழுதியுள்ளார். அதில் ஓர் அன்னை 'உன்மகள் ஓவியம் கற்றாள்; காவியம் கற்றாள்; அவள் எழுதிய கவிதை தாளிகையில் வந்தது. அதைப்படித்து ஊரில் ஏற்பட்ட கலவரம் அடங்கியது என்று கூறி ஊர் மக்கள் என்னைப் பாராட்ட வேண்டும். எதிர் காலத்தில் உன் கணவனை நீயே தேர்ந்தெடுத்து 'தேவை இவன்' என்று துணிவுடன் கூற வேண்டும். அவ்வாறு நீ கூறும் சொல் எனக்குக் கற்கண்டு போல் இனிக்கும்!'' என்று கூறுகிறாள்.

ஓவியம்கற் றாள் உன்மகள் காவியம் கற் றாளெனவே
*ஊரார் உன்றனை மெச்சும் போது - கண்ணே*
*உவகைதான் தாங்குமோஎன் காது - நீ ஓர்*
*பாஎழுதும் திறத்தால் ஊர் அமைதி கொண்டதென்று*
*பாரோர் புகழ்வ தெந்தாள்? ஓது*

*மாவடு நிகர்விழிச் சின்னஞ் சிறுமியே - நீ*
*மங்கை எனும் பருவம் கொண்டு - காதல்*

*வாழ்வுக்கோர் மாப்பிள்ளையைக் கண்டு - காட்டித்*
*தேவை இவன் எனவே செப்பும் மொழி - எனக்குத்*
*தேன்கனி! தித்திக்குங்கற் கண்டு*

இந்த வளர்ச்சியெல்லாம் பெண்களுக்குக் கல்வியால்தான் வரும் என்று கூறுகிறார் கவிஞர். அதனாற்றான் பெண்களுக்குக் கல்வியே சிறந்த அணிகலன் என்பதை

*கற்பது பெண்களுக் காபரணம் - கெம்புக்*
*கல்வைத்த நகை தீராத ரணம்*

என்று பாடுகிறார்.

செல்வர்கட்கு வரதட்சணை அவர்கள் தகுதியை வெளிப்படுத்தும் அளவுகோலாக இருக்கலாம். ஆனால் பெண்களைப் பெற்ற ஏழைகளுக்கு அது கசையடி.

படித்துப் பட்டம் பெற்று, அரசாங்கப் பணிகளில் இருக்கும் தம் பிள்ளைகளின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்வதில் பெற்றோர்கள் குறியாய் இருக்கின்றனர்.

பெண் படித்தவளா, அறிவுள்ளவளா, அழகானவளா, குடும்பத்துக் கேற்றவளா என்பதைவிட அவள் சுமந்துவரும் நகைகளின் எடை, அவள் கொண்டு வரும் வரதட்சணை, பேழைப்பணம் ஆகியவற்றின் அளவு ஆகியவற்றிலேயே அவர்கள் கவனம் உள்ளது. பெற்றோரின் இந்தப் பேராசையையும், அறிவீனத்தையும் 'பெண்குரங்குத் திருமணம்' என்ற பாடலில் எள்ளி நகையாடுகிறார் பாவேந்தர்.

ஏழை அண்ணாசாமி தன் மகனுக்குப் பணக்காரர் வீட்டில் பெண் தேடுகிறான். ஏழையின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட பணக்காரன் 'உன் மகனுக்குப் பெண் கொடுப்பதில் தடையேது மில்லை. ஆனால்...' என்று இழுக்கிறான்.

'ஆனால் என்ன?' என்று கேட்கிறான் ஏழை. அதற்குப் பணக்காரன்,

*'பெற்ற பெண்ணைக் கொடேன்*
*வளர்க்கின்ற பெண்ணுண்டு*
*பேச்செலாம் கீச்'*

என்றனன். அதற்கு அண்ணாசாமி 'பெண்ணுக்குக் கீச்சுக் குரல் அவ்வளவுதானே? பரவாயில்லை. அதற்காக வரதட்சணையை வளர்ப்புப் பெண்ணுக்குக் குறைவாகவா கொடுக்கப் போகிறீர்கள்?'' என்று சாதுரியமாகப் பேசினான். பணக்காரன்,

*'என் பெண்*
*இரட்டை வால் அல்ல'*

என்று சொன்னான்.

''உங்கள் பெண் அடக்கமானவள் என்பதை இவ்வாறு குறிப்பிடுகிறீர்கள். 'மகிழ்ச்சிதான்'' என்றான் ஏழை அண்ணாசாமி.

*'என்றன் பெண்-*
*கால்வரைக்கும் கருங்கூந்தல்'*

என்றான் பணக்காரன். ''ஒட்டுமயிர் வைத்து அலங்கரித்துக் கொள்ளும் இக்காலத்தில் கால்வரையிலும் நீண்ட கருங்கூந்தல் சிறப்புத்தானே?' என்று மகிழ்ந்து கூறிய அண்ணாசாமி திருமணத்துக்கு நாள் குறித்தான். அண்ணாசாமியின் அறியாமை யையும் பேராசையையும் கவிஞர் கீழ்க்கண்ட வரிகளால் அளந்து காட்டுகிறார்.

*கண்ணுள்ள மகனுக்குத்*
*தந்தைநிய மித்தபெண்*
*கழுதையா? அல்ல அதுதான்*
*பெரும்பணக் காரன்*
*வளர்த்திட்ட ஒற்றைவால்*
*பெட்டைக் கருங்குரங்கு*

*பீடுசுய மரியாதை*
*கண்டுநல முண்டியிடும்*
*பெரியஎன் அன்னைநாடே!*

பணக்காரன், தகுதி தெரியாமல் பெண்கேட்க வந்த ஏழை அண்ணாசாமியைக் கேவலப்படுத்த நினைக்கிறான். தன் எண்ணத்தைப் 'பேச்செலாம் கீச்', 'இரட்டை வால் அல்ல' கால் வரைக்கும் கருங்கூந்தல்' என்ற சொற்களால் குறிப்பாக வெளிப்படுத்துகிறான்.

ஏழையின் பேராசை அவன் அறிவைக் குருடாக்கிவிட்டது. இப்பாடலில் அமைந்துள்ள கற்பனை மிகச் சிறப்பானது. பணக்காரனின் பேச்சுச் சாதுரியம் கவிஞரின் அறிவு நுட்பத்துக்கு அளவுகோல்.

பெண்ணியம் பற்றித் தீவிரமான கருத்துக்களை மற்ற எந்தக் கவிஞரும் கூறாத அளவுக்குப் பாரதிதாசன் கூறியுள்ளார். கைம்பெண் மறுமணம் பற்றி எழுத்தாளர் வ.ரா. போன்றவர்களும் வேறு சிலரும் உரைநடையில் புதினங்களாகவும், சிறுகதைகளாகவும் எழுதி யுள்ளனர். ஆனால் கவிதையில் கைம்மை மணத்தை முதன் முதலில் ஆதரித்து எழுதியவர் பாரதிதாசனே. எனவே பெண்கள் சமுதாயம் பாரதி தாசனுக்கு நிறையவே நன்றிக் கடன்பட்டிருக்கிறது.

# 9
# திரைப்பட நாடக எழுத்தாளர்

> வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே
> வாழ்வில் உணர்வு சேர்க்க - நீ
> அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
> ஆடிக் காட்ட மாட்டாயா?

புதுவைக் 'கெப்ளே' நாடக அரங்கில் கலைவாணர் என்.எஸ். கிருட்டிணனின் 'கிந்தனார் காலட்சேபம்' நடந்தது. காலட்சேபம் முடிந்ததும் அரங்கின் உள்ளே சென்று கலைவாணரைப் பார்த்தார் பாரதிதாசன். கவிஞரைக் கண்டதும் அவர் கையைப் பிடித்துக் கொண்டு ''ஐயா! தங்கள் ஆசி பெறவே புதுவைக்கு வந்தேன்'' என்றார் கலைவாணர்.

''சம்பாதிக்க வரவில்லையா?'' என்றார் கவிஞர்.

''உங்கள் ஆசியைச் சம்பாதிக்கவே வந்தேன். ஐயா! புதுச்சேரி ஒரு குளம். அதில் தாங்கள் ஓர் தாமரைப்பூ; இவ்வூர்க்காரர் உங்கள் பெருமையை உணராத தவளைகள்; ஆனால் நாங்கள் வண்டுகள். எங்கேயோ இருந்து இங்கு வந்து உங்கள் ஆசியாகிய தேனைப் பெற்றுச் செல்கிறோம்'' என்றார் கலைவாணர்

''பரவாயில்லையே! இவன் கூடக் கவி பாடுவான் போலிருக்கிறதே!'' என்றார் கவிஞர்.

பாரதிதாசனுக்கு இளமையிலிருந்தே நாடகத்தின் பாலும், நடிகர்கள்பாலும் அன்பும் ஈடுபாடும் அதிகம். தம் குழந்தைகளான சரசுவதியும், கோபதியும் நடிக்க வீரத்தாய் என்ற கவிதை நாடகத்தை எழுதினார். தம் நண்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் நடிப்பதற்குச் சிந்தாமணி என்ற நாடகத்தை எழுதிக் கொடுத்தார்; சேக்ஸ்பியரின் 'வெனிசு நகர வாணிகன்' என்ற நாடகத்தையும் தமிழ்ப்படுத்திக் கொடுத்தார்.

1934ஆம் ஆண்டு இரணியனைப் பெரிய தமிழ் வீரனாகச் சித்திரித்து 'இரணியன்' அல்லது 'இணையற்ற வீரன்' என்ற நாடகத்தை எழுதிப் பெரியார் தலைமையில் அரங்கேற்றினார். அந்நாடகத்தில் குத்தூசி குருசாமி இரணியனாகவும், சத்தியவாணி முத்து இரணியன் மனைவியாகவும், திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம் பிரகலாதனாகவும் நடித்தனர் என்பது குறிப்பிடத்தக்க செய்தி. அந்நாடகம் அன்றைய தமிழக அரசால் தடை செய்யப்பட்டது.

நாடகங்களைப் பொறுத்த வரையில் இளைஞர்களுக்காகவும், பெரியவர்களுக்காகவும் நாற்பத்தெட்டு நாடகங்கள் எழுதியுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை குமர குருபரர், தமிழச்சியின் கத்தி, கற்கண்டு, நல்ல தீர்ப்பு, லதாக்ருகம், சௌமியன், அமிழ்து எது? சமணமும் சைவமும், அம்மைச்சி, தலைமலை கண்ட தேவர், கோயில் இருகோணங்கள், குடும்பவிளக்கும் குண்டுக்கல்லும், அமைதி (ஊமைநாடகம்), பிசிராந்தையார் என்பன. பிசிராந்தையார் நாடகம் சாகித்திய அகாதமியின் பரிசு பெற்ற நாடகம்.

நடிப்புக்கலை பாரதிதாசன் குருதியில் ஊறியது என்று சொல்லலாம். 1944ஆம் ஆண்டில் அவரே 'இன்ப இரவு' என்ற பெயரில் ஒரு நாடகக் குழுவைத் துவக்கினார். நாமக்கல் செல்லப்ப ரெட்டியார் என்பவர் அக்குழுவை முன்னின்று நடத்தினார். பாரதிதாசன் படைப்புக்களில் உள்ள முத்தமிழ்க் காட்சிகளும் இன்ப இரவில் இடம் பெற்றன. கவிஞர் சுரதா, ஜனாதிபதி பரிசு பெற்ற ஓவியர் வேணுகோபால சர்மா, இசை மேதை ஞானமணி போன்றவர்களும் வேறுசில நாட்டிய மேதைகளும் அக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். முதன் முதலாக சேலம் நகரில்தான் 'இன்ப இரவு' அரங்கேறியது.

நாடகத்தில் ஈடுபாடு மிக்க பாரதிதாசனின் கவனம் திரைப்படத் துறையிலும் திரும்பியது. 1937 ஆம் ஆண்டு 'பாலாமணி அல்லது பக்காத் திருடன்' என்ற திரைப்படத்துக்குப் பாடல்களும், 1940 ஆம் ஆண்டில் 'கவி காளமேகம்' என்ற திரைப்படத்துக்குத் திரைக்கதை, உரையாடல் பாடல்களும் எழுதினார். 1938ஆம் ஆண்டு எழுத்தாளர் வ.ரா.வின் விருப்பத்திற்கிணங்க 'இராமானுஜர்' என்ற படத்துக்கும் பாடல்கள் எழுதினார். பாலாமணியில் டி.கே. சண்முகம்

சகோதரர்களும், கவிகாளமேகத்தில் நாதசுவரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை இராசரத்தினமும் நடித்தனர்.

பாரதிதாசன் கலைத்துறை வாழ்வில் சேலம் முக்கியப் பங்கு வகிக்கிறது. சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தார் எடுத்த ஆயிரம் தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி(1945) சுபத்திரா(1946) சுலோசனா(1947) வளையாபதி(1952) ஆகிய திரைப்படங்களுக்கு திரைக்கதை உரையாடல் பாடல்கள் எழுதினார். இவருடைய 'எதிர்பாராத முத்தம்' என்ற காவியம் 'பொன்முடி' என்ற பெயரால்(1950) திரைப்படம் ஆக்கப்பட்டது.

நாடகப்பித்தும், திரைப்படத்துறையின் தொடர்பும் பாரதிதாசனை வன்மையாக ஈர்த்த காரணத்தால், திரைப்படம் பிடிக்கும் நோக்கத்தோடு 1961 ஆம் ஆண்டு அவர் புதுவையிலிருந்து சென்னைக்குக் குடி பெயர்ந்தார். அவர் கையில் திரைப்படம் எடுக்கப் போதிய வசதியோ, பொருளோ இல்லாத நிலையில் புதுச்சேரியில் இருந்த வீட்டை அடகு வைத்துக் கிடைத்த பணத்தை எடுத்துக் கொண்டு வந்தார். சில நண்பர்களையும் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டார். சென்னை தியாகராய நகர் இராமன் தெருவில் இருந்த 10 ஆம் எண் வளமனையின் முன்பகுதியை வாடகைக்கு எடுத்து அதில் தமது 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' என்ற திரைப்படக் கம்பெனியைத் துவக்கினார். பழைய பியட் கார் ஒன்று வாங்கி அதற்கு ஓர் ஓட்டுநரையும் அமர்த்தினார். அலுவலகத்துக்குத் தேவையான ஆட்களையும் ஏற்பாடு செய்து அமர்க்களப் படுத்தினார். முதலமைச்சர் காமராசரை அழைத்துப் பாரதிதாசன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் சார்பில் துவக்கவிழா நடத்தினார். 'பாண்டியன் பரிசு' என்ற தமது காப்பியத்தைத் திரைப்படமாக்குவது அவர் நோக்கம். திரைப்பட நடிகர்கள் இயக்குநர்கள் இசை வல்லுநர்கள் விழாவில் கூட்டமாகக் கலந்து கொண்டனர். காப்பியத் தலைவன் வேலன் வேடத்தில் சிவாஜி கணேசனும், காப்பியத் தலைவி அன்னம் வேடத்தில் சரோஜா தேவியும் நரிக்கண்ணன் வேடத்தில் எம்.ஆர்.இராதாவும் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களும் ஒத்துக் கொண்டனர்.

திரைப்படத்துறை என்பது ஒரு பெரிய கடல் போன்றது. பெரிய பணக்காரத் திமிங்கிலங்களும், சுறாமீன்களும் உலாவரும் இடம். அதில் தம்மை ஈடுபடுத்தி வெற்றி கொள்ளும் திறமை

பாவேந்தருக்குக் கிடையாது. எவர் எதைச் சொன்னாலும் நம்பும் இயல்பினர் அவர். படம் எடுக்க வேண்டுமென்றால் நடிகர்களுக்கும், இயக்குநர்களுக்கும், படப்பிடிப்பு அரங்கிற்கும் முன்பணம் கொடுக்க வேண்டும். வரலாற்றுப் படமான பாண்டியன் பரிசைப் பெரும்பாலும் வெளிப்புறக் காட்சியில் படமாக்க கேவண்டும். இதை நிர்வாகம் செய்யப் பட்டறிவு மிக்க திரைத்துறை ஆட்கள் தேவை. கவிஞர் நிலைக்கு இதெல்லாம் சாத்தியமா?

திரைப்படத்திற்குரிய கதை, வசனம் எழுதித் தயார் நிலையில் உள்ளது. சென்னை வாழ்க்கை இவர் கொண்டு வந்த பணத்தை வேகமாகக் கரைத்தது. படப்பிடிப்பு துவங்கவில்லை. கூட்டாளிகள் முணுமுணுத்தனர். ஒரு கூட்டாளி வங்கியில் இருந்த பணத்தின் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு புதுச்சேரிக்குச் சென்றுவிட்டார். காரோட்டி இவர் பெட்டியிலிருந்து கணிசமான தொகையை எடுத்துக் கொண்டு ஊருக்குச் சென்றுவிட்டான். புவனகிரி பாலு என்ற பங்குதாரர் பாரதிதாசன் மீது வழக்குத் தொடர்ந்திருந்தார்.

சிவாஜி கணேசன் வீட்டுக்கு அடிக்கடி சென்று, அவரைப் பாரதிதாசன் பார்த்துவிட்டு வருவார். சிவாஜி கணேசனும், இயக்குநர் பீம்சிங்கும் பாரதிதாசனுக்குக் கீழ்க்கண்டவாறு யோசனை கூறினர்;

"பாண்டியன் பரிசு வரலாற்றுப் படம். அதை எடுக்க நிறையப் பணம் செலவாகும். வெளிப்புறக்காட்சிகள், போர்க்காட்சிகள் எடுக்க வேண்டியிருக்கும். வேறு ஏதாவது சமூகப் படமாக இருந்தால் செலவு குறையும். வேறு ஒரு கதையைத் தேர்ந்தெடுங்கள்" என்றனர்.

பாண்டியன் பரிசு கைவிடப்பட்டது. 'முட்டாள் முத்தப்பா' என்ற கதை தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்குக் கதை வசனம் எழுதத் தொடங்கினார் பாரதிதாசன். வீண் செலவின் காரணமாக நிறுவன ஆட்கள் நிறுத்தப்பட்டனர். காரும் விற்கப்பட்டது. இந்தச் சூழ் நிலையில் புலவர் பொன்னம்பலனாரின் மாணவரான பொன்னடியான் பாரதிதாசனின் துணைக்கு வந்து சேர்ந்தார்.

பாரதிதாசனுக்குத் திரைத் துறையில் சில நல்ல நண்பர்களும் இருந்தனர். அவர்களுள் நடிகர் எம்.ஆர். இராதாவும் ஒருவர். அவர் எப்போதும் வெளிப்படையாகப் பேசக்கூடியவர். அவர் பாரதி தாசனிடம் ஒருநாள், "வாத்தியாரய்யா! உங்களுக்கு ஏன் இந்த வெட்டிவேலை. திரைப்படத்துறையில் உள்ளவர்களை நம்பி வீணாக

ஏமாந்து போகாதீர். நீங்கள் கவிதை எழுதுவதில் கவனம் செலுத்துங்க" என்று கூறினார். பாரதிதாசன் கவனம் கவிதையின் பக்கம் மீண்டும் திரும்பியது. தாம் எழுதி வைத்திருந்த மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காவியம் இரண்டையும் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார். அன்பு நூலக உரிமையாளர் திருவாளர் இராமரத்தினம் அவர்கள் அவ்விரண்டு நூல்களை அழகாக அச்சிட்டு வெளியிட்டார்.

வீண் செலவினங்களைக் குறைக்கும் முகத்தான், தாம் குடியிருந்த வளமனையின் முன்பகுதியைக் காலி செய்துவிட்டுப் பின்பகுதியில் இருந்த சிற்றில்லில் பாரதிதாசன் குடியேறினார். பாவேந்தர் நூல்களை வெளியிடும் உரிமை பெற்ற அன்பு நூலகத்தில் பணி செய்யத் திரு. பொன்னடியான் அனுப்பப்பட்டார். குயில் ஏடும் நிறுத்தப்பட்டது.

பாவேந்தரின் பாண்டியன் பரிசு என்னும் திரைப்படக் கனவு, முட்டாள் முத்தப்பா வாகத்தேய்ந்து உள்ளத்தினின்றும் மறைந்தது. ஆனால் அவர் வாழ்வின் கடைசி விருப்பமாகப் பாரதியார் வாழ்க்கையை யாவது திரைப்படம் ஆக்க வேண்டுமென்று விரும்பினார். உடல் நிலை சரியில்லாத நிலையிலும் இரவு பகலாகப் பாரதி படத்திற்கான திரைக் கதை வசனத்தை எழுதி முடித்தார். அப்படப் பிடிப்புக்கென ஒரு திட்டத்தையும் உருவாக்கினார். நாட்டு மக்களையே பங்குதாரர்களாக ஆக்கி, அவர்களிடமிருந்தே பணம் தண்டி இப்புனிதப் பணியை முடிக்க விரும்பினார். அதற்குரிய அறிக்கையும் வெளியிடப்பட்டு, நாடெங்கிலும் நண்பர்கள் மூலம் வழங்கப்பட்டது. அவ்வறிக்கை:

## திரைப்படத்தில் மகாகவி பாரதி

தமிழ்ச் சான்றோர்களே!

உலகு தொடங்கிய நாள் முதல் மேம்பட்டு வந்த நம் தமிழ்மொழி-புலவர்களாலும் புரவலர்களாலும் வளர்ந்து வந்த நம் தமிழ்மொழி, பத்தொன்பதாம் நூற்றாண்டை அடைந்தபோது அந்தத் தண்டமிழ் உண்டா இல்லையா என்று நிலையை அடைந்திருந்தது. அந்நிலையில்,

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று எழுந்த மகாகவிபாரதி, அவர் சொன்னது போல இனிக்க எழுதிப் பாடிக் குவித்துத் தமிழுக்கோர் ஒளியை தமிழுக்கோர் எழுச்சியை, உண்டு பண்ணினார். தம் வறுமையிலும் இவ்வரிய தொண்டு பண்ணினார்.

இந்நாள் அவர் இளைஞர், முதியர், கல்விச் செல்வர், பொருட் செல்வர் அனைவர் உள்ளத்துள்ளும் வாழ்கின்றார் எனின் அது வியப்பன்று.

மகாகவி பாரதி வாழ்க்கை வரலாற்றை - பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்த திறத்தை, திரைப்படம் ஆக்க விழைந்தேன்.

*''எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்*
*இப்பெரும் தொழில் நாட்டுவம் வாரீர்!''*

(பாரதி)

இங்ஙனம் தங்கள்
பாரதிதாசன்

திருவாளர் எஸ். இராமநாதன் - முன்னாள் அமைச்சர்

திருவாளர் மணவாள இராமானுசம் - முன்னாள் துணைவேந்தர்

திருவாளர் வி.பி. இராமன் - சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்

திருவாளர் அருண். - எழுத்தாளர் நூலாசிரியர்

திருவாளர் அகிலன் - எழுத்தாளர் நூலாசிரியர்

திருவாளர் பத்பநாபன் - துணையாசிரியர், சுதேசமித்திரன்

திருவாளர். முருகதாசா - திரைப்பட இயக்குநர்

திருவாளர். கிருஷ்ணசாமி - திரைப்பட இயக்குநர்

திருவாளர். நாரண துரைக்கண்ணன் - நூலாசிரியர், பத்திரிகாசிரியர்

திருவாளர். இராதாமணாளன் - துணையாசிரியர், நவ இந்தியா

திருவாளர். அம்மையப்பன் - கலை இயக்குநர்

திருமதி. தங்கம்மாள் பாரதி - பாரதி மகள்

திருமதி. சகுந்தலா பாரதி - பாரதி மகள்

தாம் எழுதிய பாண்டியவன் பரிசையும், பாரதி வரலாற்றையும் யாராவது ஒரு திரைப்பட முதலாளியிடம் கொடுத்து அவற்றைத் திரைப்படமாக்கியிருக்கலாம். அப்படிச் செய்யாமல் இவரே திரைப்படத் தயாரிப்பாளராக மாறியது அவருக்குத் தோல்வியையும் ஏமாற்றத்தையும் தந்தது.

# 10

# இதழாசிரியர்

நறுமண இதழ்ப்பெண்ணேஉன்
நலம் காணார் ஞாலம் காணார்

பாரதிதாசன் ஓர் எழுத்து மழை. அம்மழை பொழியாத ஏடுகள் தமிழில் எதுவும் இல்லை. புதிய கவிதை நடைக்குப் பாரதி எப்படி வெளிச்சமாக இருந்தோரோ, அதேபோல், இதழ்ப்பணிக்கும் அவரே வழிகாட்டி. பாரதி நடத்திய 'இந்தியா' ஏடு இவரை மிகவும் கவர்ந்தது. இந்தியா ஏடு தாங்கி வந்த கவிதைகளும், அரசியல், சமுதாய, இலக்கியக் கட்டுரைகளும் பாரதிதாசனை மிகவும் கவர்ந்தன.

பாரதிதாசன் நடத்திய ஏடுகள் சில. ஆனால் அவ்வேடுகளில் அவர் ஆற்றிய பணி பல. "மொழிப்பணி, இனப்பணி, நாட்டுப்பணி, சமுதாயப்பணி, உலக அமைதிப்பணி, திருக்குறள் உரைப்பணி, கவிதைப்பணி, கட்டுரைப்பணி, எழுத்துச் சீர்திருத்தப்பணி, இலக்கணப்பணி, திறனாய்வுப்பணி, இசைப்பணி, நாடகப்பணி, திரைப்படக்கலைப்பணி, சொல்லாராய்ச்சிப்பணி, மதிப்புரைப்பணி, காப்பியப்பணி, சிறுகதைப்பணி, திறனாய்வுப்பணி, மருத்துவப்பணி, ஓவிய சிற்பக்கலைப்பணி எனப் பலவகையாக இடம் பெற்றுள்ளன. இதழ்களின் வழி எத்தகைய பணிகளை ஆற்ற இயலும் என்பதற்தோர் எடுத்துக் காட்டாகப் பாரதிதாசன் இதழ்கள் விளங்கியுள்ளன" என்று குறிப்பிடப்பட்டுள்ளார் முனைவர் சி. பாலசுப்பிரமணியம்.*

பாரதிதாசன் புதுவை அரசுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய காரணத்தால், சில ஏடுகளுக்கு மறைவாகவும், சில ஏடுகளுக்கு வெளிப்படையாகவும் ஆசிரியராக இருந்திருக்கிறார்.

---

* பாரதிதாசன் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள்.

*புதுவை முரசு - 1930*

பெரியார் ஈ.வெ.ராவின் தன்மான இயக்கத்தில் தொடர்பும் ஈடுபாடும் ஏற்பட்ட பிறகு பாரதிதாசன் துவக்கிய ஏடு புதுவை முரசு. பெரியாரின் கருத்துக்களைப் பரப்புவதற்காகவே இந்த ஏடு தோற்றுவிக்கப்பட்டது. பாரதிதாசன் நண்பர்களான நோயேல், எஸ். சிவப்பிரகாசம் போன்றவர்களின் பெயர்கள் ஆசிரியர்களாக அச்சிடப்பட்டிருந்தாலும், அதன் உண்மையான ஆசிரியர் இவரே! தன்மான இயக்கத்தின் மத எதிர்ப்புக் கொள்கையை இவ்வேடு தீவிரமாகக் கடைப்பிடித்தது. பிரெஞ்சு அரசின் ஆதரவோடு புதுச்சேரியில் ஆதிக்கம் செலுத்திவந்த கத்தோலிக்கக் குருமார்கள் 'புதுவை முரசின் ஆசிரியராக அப்போதிருந்த நோயேல் மீது வழக்குத் தொடர்ந்தனர். நோயேல் பொறுப்பாசிரியர் பதவியிலிருந்து விலகும் நிலை ஏற்பட்டது. பிறகு பாரதிதாசன் மாணவரான எஸ். சிவப்பிரகாசம் ஆசிரியர் பொறுப்பேற்றார். அவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டது. அதனால் அவரும் அப்பொறுப்பிலிருந்து விலகினார். 'சுயமரியாதைச் சுடர்' என்ற நூலை எழுதி வெளியிட்ட போது அந்நூலில் 'புதுவை முரசின் ஆசிரியர் திரு. எஸ். குருசாமி பி.ஏ. அவர்கட்குச் சமர்ப்பணம்' என்று குறிப்பிட்டு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் பாரதிதாசன். இதனால் ஒரு குறுகிய காலத்துக்குப் புதுவை முரசின் ஆசிரியராகத் திரு.எஸ். குருசாமி அவர்களும் இருந்திருப்பார் என்று தெரிகிறது. பாரதிதாசன் இதன் ஆசிரியராக இல்லாவிட்டாலும் கே.எஸ்., நாடோடி, அடுத்த வீட்டுக்காரன், சுயமரியாதைக்காரன், வழிப்போக்கன், கிண்டற்காரன், உண்மை உரைப்போன் போன்ற புனை பெயர்களில் தலையங்கம், கவிதைகள், கட்டுரைகள், விகடத்துணுக்குகள், மதிப்புரைகள், எழுதிவந்தார். இடையில் ஏற்பட்ட மத எதிர்ப்பாலும், வேறு பல சிக்கல்களாலும் புதுவை முரசு நின்றது.

*ஸ்ரீசுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் - 1935*

'கனக சுப்புரத்தினம் கவிபாட வல்லவன்' என்று நண்பர்கள் எதிரில் முதன் முதலில் பாரதி கூறியபோது' 'எங்கெங்கு காணினும் சக்தியடா!' என்ற பாடலைச்சுப்புரத்தினம் பாடினார். அப்பாடல் ''ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த சுப்புரத்தினம் எழுதியது'' என்ற பரிந்துரையுடன் சுதேசமித்திரன் இதழுக்கு

அனுப்பப்பட்டது என்று முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பே இந்த இதழுக்குப் பெயராக அமைந்தது எனலாம்.

தம்புசாமி முதலியார் என்பவர் எஸ்.ஆர். சுப்பிரமணியத்துக்கு வழங்கிய உருபா 5000 இவ்வேடு தோன்றக் காரணமாயிருந்தது. பத்திரிகை நடத்தும் பொறுப்பையும் இளைஞரான எஸ்.ஆர். சுப்பிரமணியம் ஏற்றார். தம்புசாமி முதலியார் உரிமையாளராகவும், எஸ்.ஆர். சுப்பிரமணியம் வெளியீட்டாளராகவும் பாரதிதாசன் ஆசிரியராகவும் பொறுப்பேற்கத் தனிப்படி நான்கணா விலையில் திங்கள் இதழகாகப் பிறந்தது. கவிதா மண்டலத்தின் நோக்கங்களாகப் பாரதிதாசன் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:

1. எண்ணங்கள் யாவும் கவிதை வடிவில் அமைந்திருக்க வேண்டும். எதைப்பற்றியும் எழுதலாம்.

2. எளிய நடையில் நவகவிதை சுவையொழுகும்படி தந்த ஸ்ரீசுப்பிரமணிய பாரதியாரைப்போல் நூற்றுக் கணக்கான பாரதிகள் நமது கவிதா மண்டலத்தில் தோன்ற வேண்டும்.

3. தேசியம், சமுதாய சீர்திருத்தம், பெண்ணுரிமை, இயற்கையழகு, காதல், வீரம் பற்றிய பாடல்களை விரைந்து உதவுக. நாடக வடிவிலும் கவிதை இருக்கலாம்.

முகப்பில் பாரதியின் படமும், பாட்டினில் அன்பு செய் என்ற ஆத்திசூடி வரியும் இடம் பெற்றன. சுத்தானந்த பாரதி, தேசிக விநாயகம் பிள்ளை, சங்கு சுப்பிரமணியம், ப. ஜீவானந்தம் ஆகியோரும் இவ்வேட்டில் எழுதினர். பாரதியின் வெளிவராத பாடல்களும், ஆங்கில பிரெஞ்சுக் கவிஞர்களின் சிறந்த பாடல்களின் மொழிபெயர்ப்புகளும் இதில் இடம் பெற்றன. மொத்தம் ஏழு இதழ்களே வெளிவந்தன. பின்னர் கவிதா மண்டலம் கருத்து வேற்றுமையால் நிறுத்தப்பட்டது.

*முல்லை - 1946*

'இதன் ஆதரவாளர் கவியரசர் பாரதிதாசன்' என்ற முத்திரையோடும், பதிப்பாளர்ப. முத்தையா என்ற குறிப்போடும் சென்னை பிராட்வேயிலிருந்து பளபளப்பாக வெளிவந்தது 'முல்லை' எனும் ஏடு.

''தமிழின்பமே முல்லையின் குறிக்கோள். முல்லையில் சிறப்பாக நம் கவியரசரின் கவிதைகளும், அவர்களைப் பற்றிய கருத்துக்களும் முகிழ்த்து மலர்ந்து மணம்தரும். தமிழ் ஆக்கம் ஒன்றே முல்லையின் நோக்கம். அரசியற் சூழ்ச்சி சமயவாதம் இவற்றிற்கு இடமில்லை. இயன்றவரை தமிழைக் கையாளுவது. பொருட்செறிவும் கருத்து நயமும் இருப்பின் பிற சொற்களின் பகைமை இல்லை. எண்ணத்தில் கருத்தில் சொல்லில், செயலில் தமிழாட்சி நிலை பெறக் காண வேண்டும்'' என்று முல்லையின் நோக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆறு இதழ்கள் வெளிவந்தன. பாவேந்தரின் இதழ்க் கொள்கைக்கு மாறுபட்டு நடந்தமையால், பதிப்பாசிரியர் முத்தையாவுக்கும் இவருக்கும் ஆழமான கருத்து வேறுபாடு முளைத்துவிட்டது. முல்லை குறுகிய கால அளவிலேயே உதிர்ந்துவிட்டது. அண்ணா, திரு.வி.க., எம். தண்டபாணி தேசிகர், சுப. நாராயணன், புதுமைப் பித்தன், பேராசிரியர் க. அன்பழகன், மு. அண்ணாமலை ஆகியோரின் படைப்புக்கள் முல்லையில் சிறப்பாக வெளியிடப் பட்டன.

*குயில் திங்களிதழ் - 1947*

பாவேந்தருக்கு வழங்கிய நிதியிலிருந்து உருபா 2000 குயில் என்னும் கவிதை ஏடு நடத்த ஒதுக்கப்பட்டது. டி.என். இராமனும் இவரும் சேர்ந்து நடத்த ஏற்பாடு. பாரதிதாசனை ஆசிரியராகக் கொண்டு 'குயில்' என்னும் கவிதை ஏடு வெளிவரும் என்று நாளிதழ்களில் விளம்பரப் படுத்தப்பட்டன. சென்னையிலிருந்து முதல் குயில் இதழ் வெளிவந்தது. அவ்விதழின் உரிமையாளர் டி.என். இராமன் என்றும், பாரதிதாசனுக்கு திங்கள் தோறும் ரூ.200 ஆசிரியர் பணிக்கு ஊதியமாக வழங்கப்படும் என்றும் அவ்விதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. உடனே பாரதிதாசன்,

''அந்தக் குயிலுக்கும் எனக்கும் யாதொரு தொடர்பும் இலலை, விற்பனையாளரிடம் வாங்கிய முன் பணத்திற்கு நான் பொறுப்பாளி அல்லேன்; இனிநான் என் வாயிலாக வெளியிட இருக்கும் குயிலுக்கு ஆதரவுதருக'' என்று நாளிதழ் அறிக்கை வெளியிட்டார். குயில் இதழின் உரிமை யாருக்கு என்ற வழக்கு நீதிமன்றம் சென்றது. டி.என். இராமன் வழக்கைக் கைவிட்டு விடுவதாகக் கூறினார். பாரதிதாசன் குயில் திங்களிதழ் புதுவையிலிருந்து வெளிவந்தது. இதற்குத் தடை விதிக்கப்பட்ட காரணத்தால் 01.10.1948இல் நிறுத்தப்பட்டது.

### *குயில் நாளேடு 1948*

இந்த நாளேடு முழுக்க முழுக்க அரசியல் காரணங்களுக்காகத் துவக்கப்பட்டது. புதுச்சேரியின் தனி நலன்களையும், பிரெஞ்சு இந்தியாவின தனி நலன்களையும் வலியுறுத்த 13.9.1948 முதல் வெளிவந்தது. 14 நாட்களே நடைபெற்ற இந்த இதழ் 12.10.1948இல் நின்றது. இதன் நோக்கங்கள்:

1. இந்திய யூனியனிலிருந்து திராவிட நாடு விடுதலை பெற வேண்டும்.

2. உடனடியாகப் பிரெஞ்சு இந்தியா இந்திய யூனியனில் சேரக்கூடாது.

3. இந்திய யூனியனில் சேர மறுத்தபின் அது தன் விடுதலைக்குரிய இடையூறுகளைக் களைந்து கொள்ள வேண்டும்.

### *குயில் கிழமை இதழ்-1958*

குயில் நாளேடு நிறுத்தப்பட்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு குயில் கிழமை இதழ் தோன்றியது. இது தொடர்ந்து இரண்டாண்டு ஏழு திங்கள் வெளி வந்தது. முதல் கிழமை இதழின் தலையங்கம் பின்வருமாறு:

"குயில் பாட்டும் உரைநடையுமாக வெளிவரும்; குயில் தமிழின் அருமை பெருமைகளைக் கூறும். தமிழ்மேல் பகைவர் வீசிய-வீசுகின்ற குப்பைகட்குப் புயலாகும்.... குயில் தமிழர்கள் நல்வாழ்வு பெறுவதில்தான் வெற்றி இருக்கின்றது என்ற உண்மையை உணரச் செய்யும்."

இக்கிழமை இதழில் 'பாரதிதாசன் திருக்குறள்' என்ற தலைப்பில் குறள் வெண்பாக்களை எழுதினார். மொத்தம் 15 குறள் வெண்பாக்கள் இடம் பெற்றன.

*தானும் உயிர்களும் வாழ்கஎனும் தன்மையே*
*தானம் எனும்நற் றமிழ்.*

வள்ளுவர் உள்ளம் என்ற பெயரில் திருக்குறள் உரைப்பகுதி 1-12-1959 முதல் தொடங்கப் பெற்றுக் கிழமை தோறும் இதழில்

இடம் பெற்றது. இவ்வேடு நிற்கும் வரையிலும் உரைப்பகுதியும் தொடர்ந்து வந்தது. சில குறட்பாக்களுக்குப் புதிய உரையும், பழைய உரைகள் சிலவற்றுக்கு மறுப்புமாக இவ்வுரை விளங்கியதால் தமிழறிஞரிடையே ஒரு பரபரப்பான வரவேற்பு இதற்கு இருந்தது. ஏறக்குறைய 83 குறளுக்குப் பாரதிதாசன் பரிமேலழகர் உரைக்கு மாறுபட்டும் உடன்பட்டும் கருத்துக்கள் வழங்கியுள்ளார். ஆனால் இவ்வுரைப் பணி முற்றுப் பெறவில்லை.

தலையங்கம், வெண்பா, வினா விடைப் பகுதி, துணுக்குச் செய்திகள், புதுவைச் செய்திகள், மாசுக்குள் மதிஎன்ற தலைப்புகளின் கீழும் நிறைய செய்திகள் வெளியிடப்பட்டன.

பாரதிதாசன் புதுவை சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுச் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காரணத்தால் தமக்கென்று ஓர் இதழ் இருக்க வேண்டும் என்று எண்ணினார். எனவே, குயில் கிழமை இதழ் தோன்றியது. இது முன்பு பாரதிதாசன் நடத்திய இதழ்களை விடச் சிறப்பாக வெளிவந்தது. புதுச்சேரி மாநிலத்தின் அரசியற் செய்திகளைச் சூடாக அலசியது. தமிழறம், தமிழ் ஒழுக்கம், ஆகியவற்றைப் போற்றியது; சாதிசமயத்தைச் சாடியது. சமுதாயப் பொருளாதாரச் சிந்தனைகளை வாரி வழங்கியது.

### *குயில் திங்களிருமுறை இதழ், 1962*

இத்திங்களிருமுறை இதழ் சென்னையிலிருந்து வெளிவந்தது. சென்னையில் பாரதிதாசன் தலைமையில் நிறுவப்பட்ட அனைத்துலகக் கவிஞர் மன்றத்தின் கவிதைக் குரலாக இது வெளிவந்தது. எட்டு இதழ்களே வெளிவந்தன. இந்த எட்டு இதழ்களும் மிகச் சிறப்பானவை. பாரதிதாசனின் பன்முக ஆளுமையையும் கொள்கை முதிர்ச்சியையும் இவ்வேடுகள் விளம்பரப்படுத்துகின்றன.

அரசியலிலும் கட்சிக் கோட்பாடுகளிலும் இருந்த இறுக்கம் நெகிழ்ச்சியுற்றதையும் நடுநிலை ஆய்வையும் இந்திய ஒருமைப் பாட்டையும் உலகளாவிய சிந்தனைகளையும் காணலாம்.

1962ஆம் ஆண்டு 'பம்பாய் அஞ்சுமன் தாராகி உருது' என்ற தாய்மொழிகாக்கும் நிறுவனம் இந்திய நாட்டின் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு கவிஞரை வரவழைத்துக் கவியரங்கம் ஒன்று நடத்தியது. தமிழின் சார்பாகப் பாரதிதாசன் அழைக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவர் பாடிய பாடல் இந்திய நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்திப் பாடப்பட்டது.

'இப்பரந்த நிலத்திற்கு நாவலந்தீவு என்று பெயர் வைக்க வேண்டும்; நாட்டில் கட்டாயக் கல்வி வேண்டும். மதவெறி தொலைக்கப்பட வேண்டும். இத்திட்டங்கள் நிறைவேறினால் நாட்டில் நிலையான ஒற்றுமை நிலவும்' என்று அவர் தமது பாட்டில் குறிப்பிட்டார். அப்பாடல் முழுதும் 1.7.62 இதழில் வெளியாகியுள்ளது.

*'பிரிய நினைத்தவர் பிழை உணர்கின்றனர்'*
*'இமையச் சாரலில் ஒருவன் இருமினான்*
*குமரி வாழ்வான் மருந்துகொண் டோடினான்'*

என்ற வரிகள் தேசிய உணர்வோடு கூடிய புதிய நடைக் கருத்துக்கள். 21 இளங்கவிஞர்கள் அவர்களுடைய படத்தோடும் படைப்போடும் இந்த இதழ்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வோர் இதழிலும் சூடான தலையங்கங்களும், பாட்டுக்கிலக்கணம், கேட்டலும் கிளத்தலும் என்ற பகுதிகளும் இடம் பெற்றன. இளங்கவிஞர்களின் வளர்ச்சிக்காகப் புதுப்புது வெண்பாக்களும், கட்டளைக் கலித்துறைகளும், சந்தப்பாடல்களும் பாரதிதாசன் எழுதிக் குவித்தார்.

# 11
# சில சிறப்புச் செய்திகள்

> ஒருவன் புகழ்வான் ஒருவன் இகழ்வான்
> இரண்டுக்கும் அப்பால் இரு.

### *பொற்கிழி வழங்கும் விழா*

தமிழ்நாட்டின் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ் இலக்கியத்துக்கும், தமிழ்ச் சமுதாயத்துக்கும் சேவை செய்ததைப் பாராட்டும் முகத்தான் அவருக்கு நிதிதிரட்டிப் பொற்கிழி வழங்குவதென நாமக்கல்லைச் சேர்ந்த எம். செல்லப்ப ரெட்டியார், என்.கிருஷ்ணராஜ் ரெட்டியார் கே. கருப்பண்ணன் என்ற மூவரும் திட்டமிட்டனர். அது தொடர்பான அறிக்கை ஒன்றும் கீழ்க்கண்டவாறு வெளியிட்டனர்:

“பாரதிதாசன் பெருந்தொண்டிற்கு நன்றி செலுத்தும் பான்மை யோடு ஒரு நிதி திரட்டிக் கவிஞர் அவர்கட்குக் கூடியவிரைவில் அளிப்பதெனத் தீர்மானித்துள்ளோம். தமிழ் அன்பர்கள் அனைவரும் இந்நிதிக்குத் தாராளமாக நன்கொடைகள் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். நிதிக்குப் பணம் அனுப்பும் அன்பர்கள் ‘பாரதிதாசன் நிதிக்காக’ என்று குறிப்பிட்டுக் கீழ்க்கண்ட முகரிக்கு அனுப்பி வைக்கக் கோருகிறோம்”

என். கிருஷ்ணராஜ் ரெட்டியார்
நாமக்கல் (சேலம் ஜில்லா)

பாரதிதாசன் நிதிக்குழுவில் பெரியார் ஈ.வெ.ரா. அறிஞர் அண்ணா, மாஜி அமைச்சர்கள் எஸ். இராமநாதன், எஸ். முத்தையா முதலியார், எஸ்.ஆர். சுப்பிரமணியம், சேலம் கல்லூரி முதல்வர் அ. இராமசாமிக் கவுண்டர், ஏ.வி.பி. ஆசைத் தம்பி முதலிய பிரமுகர்களும் வேறு சிலரும் இடம் பெற்றிருந்தனர்.

அன்பர்கள் அனுப்பிவைத்த நிதியும், வீரவாலி நாடக வசூலுமாகச் சில ஆயிரங்கள் சேர்ந்தன. பெரியார் ஈ.வெ.ரா. ரூ.150-ம், கவிஞர் கம்பதாசன் ரூ.500-ம், தமிழறிஞர் கி.வ.ஜ. ரூ.25-ம் நிதி வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நாமக்கல் அன்பர்கள் இந்நிதி வசூல் பொறுப்பை அறிஞர் அண்ணாவிடம் ஒப்படைத்தனர். அண்ணாவின் தலையீட்டால் நிதி வசூல் விறுவிறுப்பும் விளம்பரமும் பெற்றது. தமிழகத்தில் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலிருந்தும் நிதி குவிந்தது.

29.7.46ஆம் நாள் பாரதிதாசனின் நிதியளிப்பு விழா சென்னை பச்சையப்பன் திடலில் நடைபெற்றது. நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் எம்.ஏ., பி.எல். அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார். குளிக்கரை பிச்சையப்பாவின் நாதசுர இசையோடும், இசையரசு தண்டபாணி தேசிகரின் தமிழிசையோடும் விழா துவங்கியது.

திருவாளர்கள் செங்கல்வராயன் டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி, டாக்டர். ஆர்.பி. சேதுப்பிள்ளை, முத்தமிழ்க் காவலர் கே.ஏ.பி. விசுவநாதம், ப. ஜீவானந்தம், இரா. நெடுஞ்செழியன், திருமதி. குஞ்சிதம் குருசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கிச் சிறப்பித்தனர். அறிஞர் அண்ணா தமிழக மக்கள் சார்பில் பொன்னாடை போர்த்திப் பாரதிதாசனுக்கு ரூ. 24,300 அடங்கிய பொற்கிழியை வழங்கினர். சலகை ப. கண்ணனும், டி.என். இராமனும், நிதியளிப்பு விழா மலர் ஒன்று வெளியிட்டனர். தமிழ்நாட்டின் சிறந்த அறிஞர் பலர், அதில் பாவேந்தரைப் பற்றி அரிய கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

*அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றம்*

இம்மன்றம் 26.01.62 வெள்ளி மாலை பாரதிதாசன் குடியிருந்த தியாகராயநகர் இராமன் தெரு இல்லத்தில் தொடங்கப்பட்டது. சென்னைக் கவிஞர்களான நா.ரா. நாச்சியப்பன், வல்லம் வேங்கடபதி, வேழவேந்தன். முருகுசுந்தரம், தமிழ்முடி, தமிழழகன், நா.க.முத்தையா, பொன்னடியான், நாரண துரைக்கண்ணன், செந்தாமரை, பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம், ஆகியோர் இல்லத்தில் கூடியிருந்தனர்.

பாரதிதாசன் இளையமகள் சகுந்தலா பாரதியும் பாரதிதாசனின் அழைப்பின் பேரில் வந்திருந்தார். வயது ஐம்பதிருக்கும். நன்றாகப்

பழுத்த எலுமிச்சம் பழத்தின் நிறம்; ஒற்றை நாடி உடம்பு; உட்காருவது கூடப்பாரதி போலச் சப்பணம் போட்டு மார்பையும் தலையையும் நிமிர்த்து உட்கார்ந்திருந்தார். பேசுவதும் பாரதி போலவே வெடுக்கென்று பேசினார்.

அனைத்துலகத் தமிழக்கவிஞர் பெருமன்றத் துவக்கவிழாவில் பாரதிதாசன் பேசிய பேச்சில் பொதிந்திருந்த கருத்துக்கள் பின் வருமாறு:

''உலகின் பல நாடுகளிலும் வாழும் தமிழ்க் கவிஞர்கள் எல்லோரையும், ஒன்றாகத் திரட்டி ஒரு பெரிய சக்தியாக உருவாக்குவது இம்மன்றத்தின் முதல் நோக்கம். அவர்கள் பாடல்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி நூலாக வெளியிட வேண்டும். அப்பாடல்களை ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் மொழி பெயர்க்க வேண்டும். தில்லிக்கும், பிற மாநிலங்களுக்கும் தமிழே அறியாத சிலர், தாங்கள்தாம் தமிழ்க் கவிஞர்களின் முகவர்கள் என்று கூறிக்கொண்டு செல்கிறார்கள். அத்தகைய வேற்றுமாநில மன்றங்களுக்குக் கவிஞர் மன்றம் தனது முகவரை அனுப்ப வேண்டும்.''

அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தை இயக்க பாரதிதாசன் தலைமையில் ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. மன்றத்தின் சார்பில் திங்கள் இருமுறை இதழாகக் 'குயில்' ஏடு துவக்கப்பட்டது. பாரதி தாசன் இறப்பிற்குப் பிறகு தமிழ்க்கவிஞர் பெருமன்றம் கவிஞர் சுரதாவாலும், கவிஞர் பொன்னடியானாலும் தொடர்ந்து பேணப்பட்டு உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறது.

***இறுதிப் பயணம்***

பாரதியின் வாழ்க்கையை உடனிருந்து கண்டவர் பாரதிதாசன். பாரதியாரின் வரலாற்றை எப்படியாவது எழுதி முடிக்க வேண்டும் என்பது அவர் நீண்டநாள் அவா. தம் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அதை எழுதி முடிக்க முழு மூச்சோடு பாரதிதாசன் ஈடுபட்டார். இரவு பகலாக உழைத்துப் பாரதியின் வாழ்க்கையை நாடக வடிவில் எழுதிமுடித்தார்.

இடையறாத எழுத்துப் பணியும், திரைப்பட முயற்சியால், ஏற்பட்ட மனஉளைச்சலும் அவரைக் கடுமையாகப் பாதித்தன.

20.04.1964 அன்று மாரடைப்பால் கடுமையாகத் தாக்கப்பட்டு சென்னை அரசாங்கப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அடுத்த நாள் காலை அவர் ஆவி பிரிந்தது.

21.04.1964இல் தமிழகச் செய்தி ஏடுகள் பாரதிதாசன் இறப்புச் செய்தியைத் தலைப்புச் செய்தியாகப் படங்களுடன் வெளியிட்டன. பாரதிதாசன் உடல் இராமன் தெரு இல்லத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. சென்னைப் பிரமுகர்களும், நடிகர்களும், இலக்கிய அன்பர்களும் பாரதிதாசனைக் கடைசி முறையாகக் காணத் திரளாக வந்திருந்தனர்.

பிறகு கவிஞரை எங்கு அடக்கம் செய்வது என்ற பிரச்சனை எழுந்தது. மன்னர் மன்னன் புதுச்சேரியில் தான் அடக்கம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார். கவிஞரின் உடல் காரில் புதுச்சேரிக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பாரதிதாசன் வீடு தொட்டிக் கட்டுவீடு. நடுவில் இருந்த தொட்டியில் தென் வடலாக அவர் படுக்க வைக்கப்பட்டிருந்தார். அவரைச்சுற்றி மாலைகளும், மலர் வளையங்களுமே தென்பட்டன. மக்கள் கூட்டம் ஓயாமல் உள்ளே வருவதும் போவதுமாக இருந்தது. கவிஞரின் மனைவியாரும் மக்களும் காலடியில் அமர்ந்து அவர் பாதங்களைக் கண்ணீரால் கழுவிக் கொண்டிருந்தனர். கவிஞரின் மகன் மன்னர் மன்னன் சுவரில் தலையை மோதிய வண்ணம் கதறிக் கொண்டிருந்தார். கவிஞர் பொன்னடியான் அருகிலிருந்து அவருக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார். தமிழ்நாடு-புதுவை மாநிலங்களைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதிகளும், கவிஞர்களும், புலவர்களும், பெருமாள் கோயில் தெருவெங்கும் நின்று கொண்டிருந்தனர்.

பாவேந்தரின் இறுதி ஊர்வலம் 22.04.64 ஆம் நாள் காலை பத்து மணிக்கு அவர் வீட்டிலிருந்து துவங்கியது. மகாகவி பாரதி திருவல்லிக்கேணியில் இறந்தபோது, அவரை அடக்கம் செய்வதற்காகப் புறப்பட்ட இறுதி ஊர்வலத்தில் இருபதுக்கும் குறைவானவர்களே கலந்து கொண்டனர் என்று பாரதியின் நண்பர் நீலகண்ட பிரம்மச்சாரி வருந்திக் கண்ணீர் வடித்திருந்தார். ஆனால் பாரதிதாசன் இறுதி ஊர்வலத்தில் 10,000 பேர் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் ஒருகல் தொலைவு இருந்தது. புதுவை முதலமைச்சர் குபேர் வழியில் பாவேந்தருக்கு மாலையிட்டு வணங்கினார். வேறு

இரண்டு புதுவை அமைச்சர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலம் நடுப்பகல் 12 மணியளவில் மயானத்தை அடைந்தது, எந்தச் சடங்குகளும் இல்லாமல் கவிஞர் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

பாவேந்தர் அடக்கம் செய்யப்பட்டதும், அம்மயானத்திலேயே ஓர் இரங்கற் கூட்டமும் நடைபெற்றது. திருவாளர்கள் ம.பொ. சிவஞானம், ஈ.வி.கே. சம்பத், இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, என்.வி. நடராசன், கண்ணதாசன், சுப்பையா (புதுவை பொதுவுடைமைக் கட்சித் தலைவர்), கவி. கா. மு. ஷெரீஃப், குத்தூசி குருசாமி ஆகியோர் பேசினர். அவ்வை திரு.டி.கே. சண்முகம் 'துன்பம் நேர்கையில்' 'உலகப்பன்' ஆகிய பாவேந்தர் பாடல்களைப் பாடினார்.

### நெருங்கி வந்த ஞானபீடம்

இந்தியாவிலேயே மதிப்பிற்குரிய மிக உயர்ந்த இலக்கியப் பரிசு ஞானப்பீடப் பரிசு. தமிழ்நாட்டில் முதன் முதலாக இவருக்குத் தான் 1964ஆம் ஆண்டு அப்பரிசு பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் அப்பரிசு முடிவு வெளியாவதற்கு முன்பே பாரதிதாசன் இறந்து விட்டார். அப்பரிசு வாழும் கவிஞர்களுக்கு வழங்கும் பரிசு ஆதலால், அது மலையாளக் கவிஞர் சங்கர் குருப்புக்கு அவ்வாண்டு வழங்கப்பட்டது.

### பெற்ற சிறப்புக்கள்

1935 - இந்தியாவில் முதல் பாட்டேடு துவங்கினார் (ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்)

1955 - தேர்தலில் வெற்றி பெற்றுப் புதுவைச் சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.

1962 - மூதறிஞர் இராஜாஜியைக் கொண்டு பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கிப் புரட்சிக் கவிஞருக்குத் தமிழ் எழுத்தாளர் சங்கம் சிறப்புச் செய்தது.

1965 - ஏப்ரல் 21ஆம் நாள் புதுவைக் கடற்கரை சார்ந்த பாப்பம்மாள் கோயில் இடுகாட்டில் நினைவுமண்டபம் எழுப்பப்பட்டது.

1968 - இரண்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யொட்டி பாரதிதாசன் உருவச்சிலை சென்னைக் கடற்கரையில் நிறுவப்பட்டது.

1969 - பாரதிதாசனின் பிசிராந்தையார் நாடகத்திற்குச் சாகித்திய அகாதமி பரிசு வழங்கியது.

1971 - ஏப்ரல் 29ஆம் நாள் பாரதிதாசன் பிறந்த நாள் விழா புதுவை அரசு விழாவாகக் கொண்டாடப்பெற்றது. ஒவ்வோராண்டும் அரசு விழா நிகழ்கிறது. பாவேந்தர் வாழ்ந்த 95ஆம் எண்பெருமாள் கோயில் இல்லம், அரசுடைமை ஆக்கப்பட்டு நினைவு நூலகமும், காட்சிக் கூடமும் நிறுவப்பட்டன.

1972 - ஏப்ரல் 29இல் புதுவை அரசினரால் பாவேந்தர் முழு உருவச்சிலை புதுவையில் திறந்து வைக்கப்பட்டது.

30.4.1982 -

ஏப்ரல் திங்களில் பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் திருச்சிராப் பள்ளியில் உருவாக்கப்பட்டது.

15.5.1993 -

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 'பாரதிதாசன் உயராய்வு மையம்' அமைக்கப்பட்டது.

இவைகளன்றித் தமிழக அரசால் பாரதிதாசன் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. தமிழகத்திலும் புதுவை மாநிலத்திலும் பாரதிதாசன் பெயரில் தெருக்கள், ஊர்கள், நகர்கள், உருவாக்கப் பட்டுள்ளன; கலைக்கல்லூரிகளும், பொறியியற் கல்லூரிகளும் நிறுவப்பட்டுள்ளன; பல அமைப்புகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன; தமிழக அரசும் புதுவை அரசும் பல இலக்கிய விருதுகளும், பரிசுகளும் ஆண்டுதோறும் அவர் பெயரால் வழங்குகின்றன.

# இணைப்பு

*1. பாரதிதாசன் பாடல்கள் கால வரிசை*

| வ.எண். | முதற் பதிப்பு | நூற்பெயர் |
|---|---|---|
| 1. | 1920 | மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப் பாட்டு |
| 2. | 1925 | மயிலம் ஸ்ரீ சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்நம் |
| 3. | 1926 | மயிலம் சுப்பிரமணியர் துதியமுது |
| 4. | 1930 | கதர் இராட்டினப்பாட்டு |
| 5. | 1930 | சிறுவர் சிறுமியர்தேசியகீதம் |
| 6. | 1930 | தொண்டர் படைப்பாட்டு |
| 7. | 1930 | தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு |
| 8. | 1930 | சஞ்சீவி பர்வதத்தின் சாரல் |
| 9. | 1931 | சுயமரியாதைச் சுடர் |
| 10. | 1937 | புரட்சிக்கவி |
| 11. | 1938 | பாரதிதாசன் கவிதைகள் |
| 12. | 1941 | எதிர்பாராத முத்தம் |
| 13. | 1942 | குடும்ப விளக்கு |
| 14. | 1942 | இசையமுது |
| 15. | 1944 | இருண்ட வீடு |
| 16. | 1944 | அழகின் சிரிப்பு |
| 17. | 1944 | காதல் நினைவுகள் |
| 18. | 1944 | குடும்ப விளக்கு இரண்டாம் பகுதி விருந்தோம்பல் |

| | | |
|---|---|---|
| 19. | 1944 | பாண்டியன் பரிசு |
| 20. | 1945 | தமிழியக்கம் |
| 21. | 1948 | முல்லைக்காடு |
| 22. | 1948 | காதலா? கடமையா? |
| 23. | 1948 | இந்தி எதிர்ப்புப் பாட்டு |
| 24. | 1948 | கடல் மேற் குமிழிகள் |
| 25. | 1948 | குடும்ப விளக்கு மூன்றாம் பிரிவு, திருமணம் |
| 26. | 1948 | அகத்தியன் விட்ட புதுக்கரடி, (ஒரே தொகுப்பில்) |
| 27. | 1948 | நல்ல முத்துக் கவிதை ,, |
| 28. | 1948 | திராவிடர் திருப்பாடல் ,, |
| 29. | 1949 | ஏற்றப்பாட்டு |
| 30. | 1949 | பாரதிதாசன் கவிதைகள், இரண்டாம் பகுதி |
| 31. | 1949 | தமிழச்சியின் கத்தி |
| 32. | 1949 | பாரதிதாசன் ஆத்தி சூடி |
| 33. | 1949 | திராவிடர் புரட்சித் திருமணத் திட்டம் |
| 34. | 1950 | குடும்ப விளக்கு நான்காம் பிரிவு - மக்கட்பேறு |
| 35. | 1950 | குடும்ப விளக்கு ஐந்தாம் பிரிவு - முதியோர் காதல் |
| 36. | 1951 | அமிழ்து எது? |
| 37. | 1952 | பாரதிதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி (இரண்டாம் பதிப்பு) |
| 38. | 1952 | இசையமுது - இரண்டாம் பகுதி |
| 39. | 1954 | பொங்கல் வாழ்த்துக் குவியல் |
| 40. | 1955 | பாரதிதாசன் கவிதைள் - மூன்றாம் தொகுதி |

| | | |
|---|---|---|
| 41. | 1956 | தேனருவி |
| 42. | 1958 | இளைஞர் இலக்கியம் |
| 43. | 1959 | குறிஞ்சித் திட்டு |
| 44. | 1962 | கண்ணகி புரட்சிக் காப்பியம் |
| 45. | 1962 | மணிமேகலை வெண்பா |
| 46. | 1964 | பாரதிதாசன் பன்மணித்திரள் |
| 47. | 1977 | காதல் பாடல்கள் |
| 48. | 1977 | குயில் பாடல்கள் |
| 49. | 1977 | பாரதிதாசன் கவிதைகள், நான்காம் தொகுதி |
| 50. | 1978 | தேனருவி (38 பாடல்கள்) |
| 51. | 1978 | ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது |
| 52. | 1978 | தமிழுக்கு அமுதென்று பேர் |
| 53. | 1978 | புகழ் மலர்கள் |
| 54. | 1978 | நாள் மலர்கள் |
| 55. | 1978 | வேங்கையே எழுக |
| 56. | 1980 | பாரதிதாசன் ஆத்தி சூடி + பொங்கல் வாழ்த்துக் குவியல் + இளையோர் ஆத்தி சூடி |
| 57. | 1982 | பாரதிதாசன் கவிதைகள் (நான்கு தொகுதிகள் + புதிய பாடல்கள் 17) |

**பாடு பொருள் அடிப்படையில் பூம்புகார் பதிப்பகம் பகுத்தும், தொகுத்தும் வெளியிட்டவை**

| | | |
|---|---|---|
| 1. | 1992 | பாரதிதாசன் கவிதைகள் - உயர்ந்தோர் (+ ஒரு புதிய பாடல்) |
| 2. | 1992 | இயற்கை |
| 3. | 1992 | தமிழ் (+ ஒரு புதிய பாடல்) |
| 4. | 1992 | சிறுகாப்பியங்கள் |
| 5. | 1992 | இளைஞர் இலக்கியம் 1 |

| | | |
|---|---|---|
| 6. | 1992 | சமுதாயம் (+ இரண்டு புதிய பாடல்கள்) |
| 7. | 1994 | இளைஞர் இலக்கியம் 2 |
| 8. | 1994 | பொங்கல் வாழ்த்து இலக்கியம் (+ ஆறு புதிய பாடல்கள்) |
| 9. | 1994 | காதல் (+ இரண்டு புதிய பாடல்கள்) |

**குறிப்பிடத்தக்க பிற தொகுப்புகள்**

1. 1993 பாரதிதாசன் கவிதைகள் (பாவேந்தர் பாடல்களின் முழுத்தொகுப்பு), ஆ. திருவாசகன், சுரதா கல்லாடன் (தொ. ஆ.)

2. 1994 உலகம் உன் உயிர் (தலையங்கக் கவிதைகள் (+ நான்கு புதிய கவிதைகள்), ச.சு. இளங்கோ (ப.ஆ.)

3. 1995 பாரதிதாசன் வண்ணப்பாடல்கள் (+ நான்கு புதிய பாடல்கள்) ய. மணிகண்டன், (தொ.ப)

4. 2000 பாரதிதாசன் திரைப்பாடல்கள், வாமனன் (தொ.ஆ)

***பிறர் படைப்புகளுடன் பாரதிதாசன் கவிதைகளும் சேர்க்கப்பட்டு வெளிவந்த நூல்கள்***

1. 1937 இந்தி எதிர்ப்புப் பாடல்கள், குடிஅரசுப் பதிப்பகம், ஈரோடு

2. 1945 எது இசை? கமலா பிரசுராலயம், சென்னை

3. 1946 தன்மானத் தாலாட்டு, ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவத்திபுரம் வ.ஆ.

4. 1948 மகாகவி பாரதியார், ஞாயிறு நூற் பதிப்பகம், புதுச்சேரி

இவற்றில் இடம் பெற்ற பாரதிதாசன் பாடல்கள் வேறு கவிதைத் தொகுப்புகளில் சேர்க்கப்பெற்றுள்ளன.

***முன்னர் வேறு நூல்களில் இடம்பெற்ற பாடல்களே தெரிவு செய்து தொகுக்கப்பட்டு வேறு பெயரில் வெளிவந்த நூல்கள்***

1. 1942 காதற்பாட்டு

2. 1958 தாயின்மேல் ஆணை

3. 1993 தமிழ் உணர்ச்சி

இத்தகைய தொகுப்பு நூல்கள் பல வெளி வந்துள்ளன.

*பாரதிதாசன் நாடகங்கள் - கால வரிசை*

## I. நூல் வடிவில் வெளி வந்தவை

1. 1939 இரணியன் அல்லது இணையற்ற வீரன்
2. 1944 நல்ல தீர்ப்பு
3. 1944 கற்கண்டு
4. 1944 பொறுமை கடலினும் பெரிது (ஒரே தொகுப்பில்)
5. 1946 அமைதி
6. 1947 சௌமியன்
7. 1948 படித்த பெண்கள்
8. 1949 சேரதாண்டவம்
9. 1950 இன்பக்கடல் (ஒரே தொகுப்பில்)
10. 1950 சத்திமுத்தப் புலவர் (ஒரே தொகுப்பில்)
11. 1951 கழைக்கூத்தியின் காதல்
12. 1959 பாரதிதாசனின் நாடகங்கள்
    - அ. கற்கண்டு
    - ஆ. பொறுமை கடலினும் பெரிது
    - இ. இன்பக் கடல்
    - ஈ. சத்திமுத்தப் புலவர்
13. 1967 பிசிராந்தையார்
14. 1978 தலைமலை கண்ட தேவர்
    - அ. தலைமலைகண்ட தேவர்
    - ஆ. கழைக் கூத்தியன் காதல் (1951)
    - இ. குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும்
    - ஈ. ஆரிய பத்தினி மாரிஷை
    - உ. ரஸ்புடீன்
    - ஊ. அம்மைச்சி
    - எ. வஞ்சவிழா
    - ஏ. விகடக் கோர்ட்

15. 1980 கோயில் இரு கோணங்கள்

அ. கோயில் இரு கோணங்கள்

ஆ. சமணமும் சைவமும்

இ. மூளை வைத்தியம்

ஈ. குலத்தில் குரங்கு

உ. மருத்துவர் வீட்டில் அமைச்சர்

ஊ. ஆரிய பத்தினி மாரிஷை (தலைமலைகண்ட தேவர் நூலிலும்)

எ. முத்துப் பையன் (குழந்தை நாடகம்)

ஏ. மேனி கொப்பளித்ததோ?

16. 1992 குமர குருபரர் நாடகம் (1944-திரைப்படத்திற்காக எழுதியது)

*17. 1994 பாரதிதாசனின் புதிய நாடகங்கள்*

*க. அச்சு வடிவம் பெறாமலிருந்த நாடகங்கள்*

அ. இசைக் கலை (யசோதர காவியம்)

ஆ. பறவைக்கூடு I & II (சைகோன் பின்னணி)

இ. மக்கள் சொத்து (கதை வடிவினது)

*உ. நூல் வடிவம் பெறாமலிருந்த நாடகங்கள்*

அ. ஐயர் வாக்குப் பலித்தது

ஆ. கொய்யாக்கனிகள் (கவிதை நாடகம் - முற்றுப் பெறாதது)

இ. சங்கீத வித்வானோடு

ஈ. ஆக்கம்

உ. வினை

18. 2003 போர்க்காதல்

அ. போர்க்காதல்

ஆ. கொய்யாக் கனிகள் (முற்றுப் பெற்றது)

இ. படித்த பெண்கள்

ஈ. ஆனந்த சாகரம்

**2. நாடகப் பாங்கின**

காவியம் சிறு காப்பியம் எனும் தலைப்புகளில் தொகுதிகளில் இடம்பெற்றவை

19. 1937 புரட்சிக் கவி (1944-சிறு மாற்றங்களுடன் நாடகமாக நடத்தப்பெற்றது)

20. வீரத்தாய் (1935 - நெட்டப்பாக்கம் பள்ளி ஆண்டு விழாவில் மாணவர்கள் நடிப்பதற்கு முதலில் நாடகமாக எழுதப்பட்டது.

1938 பாவேந்தரின் மூத்த மகள் வீரத்தாயாகவும் மகன் சுதர்மனாகவும் நடிக்க நடத்தப்பெற்றது

21. 1949 ஒன்பது சுவை

22. 1949 போர் மறவன்

23. 1949 காதல் வாழ்வு

**II. நாடகமாக நடிக்கப் பெற்றுக் கிடைக்காதவை**

1. 1931 சிந்தாமணி

2. 1963 பாரதப்பாசறை ('கற்கண்டு நாடகப் பகுதியையும் சீன எதிர்ப்பையும் இணைத்து எழுதப்பட்டது)

**IV. நாடகம் எழுதப்பெற்று ஒத்திகை நடத்தப் பெற்றும் அரங்கேறாதவை - முழுமையாகக் கிடைக்காததும் நூலாகாததும்**

1. 1932 லதாக்ருகம்

2. 1935 நடுநாட்டின் வர்த்தகன் அல்லது நட்பின் இலக்கணம் (சேக்சுபியரின் 'வெனிசு வாணிகன்' தமிழ் வடிவம்)

**V. பெயரளவில் நாடகம் எனக் குறிக்கப்பெற்றவை - நாடக வடிவில் நூல்களாக வெளிவராதவை**

1. தமிழச்சியின் கத்தி (1937)

2. பாண்டியன் பரிசு (1940

3. கருஞ்சிறுத்தை (1949)

**பாரதிதாசனின் பிற உரைநடை ஆக்கங்கள்**

*I. கட்டுரைகள்*

1. 1980 வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா? (சொல்லாய்வுகள்)

2. 1980 பாட்டுக்கு இலக்கணம்

3. 1983 மானுடம் போற்று

4. 1992 பாரதியாரோடு பத்தாண்டுகள் (+ பொழிவுகள், கவிதைகள்)

5. 1994 உலகுக்கோர், ஐந்தொழுக்கம் (தலையங்கக் கட்டுரைகள்)

6. 1996 இலக்கியக் கோலங்கள் (பாடல் விளக்கக் குறிப்புகள், செய்திகள்)

**II. உரை**

1. 1992 பாரதிதாசன் திருக்குறள் உரை: டாக்டர் ச.சு. இளங்கோ (ஆ.ப.)

2. 1994 பாவேந்தர் பார்வையில் வள்ளுவம் - திருக்குறள் உரை: முனைவர் நா. செங்கமலத்தாயார் (தொ.ஆ.)

**III. புனை கதைகள்**

1. 1955 பாரதிதாசன் கவிதைகள் (+ கட்டுரைகள், கிண்டல் துணுக்குகள்)

2. 1980 ஏழைகள் சிரிக்கிறார்கள் (நீக்கம் + புதிய கதைகள்) ச.சு. இளங்கோ (தொ.ஆ.)

3. 1994 பாரதிதாசன் சிறுகதைகள் (நீக்கம் + புதிய கதைகள்)

மு. சாயபுமரைக்காயர் (தொ.ஆ)

4. 1994 பாரதிதாசன் புதினங்கள்

அ. அன்னை

ஆ. விஞ்ஞானி

இ. அனைவரும் உறவினர்

ஈ. பக்த ஜெயதேவர்

உ. குமரகுருபரர்

ஊ. எதிர்பாராத முத்தம்

எ. ஆத்மசக்தி

ஏ. ஏழை உழவன் (அல்லது) முகுந்த சந்திரிகை

ஐ. ஆலஞ்சாலையும் வேலஞ்சேரியும்

IV. *கிண்டல் துணுக்குகள்*

1981 சிரிக்கும் சிந்தனைகள்

V. *வினாவிடைகள்*

1981 கேட்டலும் கிளத்தலும்

VI. *திரைக்கதை உரையாடல்கள்*

1. 1940 காளமேகம்
2. 1945 ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி
3. 1946 சுபத்ரா
4. 1947 சுலோசனா
5. 1950 பொன்முடி
6. 1952 வளையாபதி
7. 1964 மகாகவி பாரதியார் வரலாறு

7. சொற்பொழிவுகள்

1. 1947 கவிஞர் பேசுகிறார்
2. 1950 முத்தமிழ் + (பிறர் பொழிவுகள்)
3. 1954 தமிழ் இன்பம்
4. 1980 பாரதிதாசன் பேசுகிறார் + (புதிய பொழிவுகள்)

# துணை நூல்கள்


1. இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன் - முனைவர். இரா. இளவரசு
2. கறுப்புக் குயிலின் நெருப்புக்குரல் - மன்னர் மன்னன்
3. பாட்டுப் பறவைகள் - மன்னர் மன்னன்
4. பாவேந்தர் வாழ்க்கைப் பாங்கு - மன்னர் மன்னன்
5. பாவேந்தர் நினைவுகள் - கவிஞர் முருகு சுந்தரம்
6. அரும்புகள் மொட்டுகள் மலர்கள் - கவிஞர் முருகு சுந்தரம்
7. குயில்கள் கூவிக் கொண்டிருக்கும் - கவிஞர் முருகு சுந்தரம்
8. புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள் - கவிஞர் முருகு சுந்தரம்
9. பாவேந்தர் படைப்பில் அங்கதம் - கவிஞர் முருகு சுந்தரம்
10. மகாகவி பாரதியார் - வ.ரா.
11. பாரதிதாசனோடு பத்து ஆண்டுகள் - முனைவர் தமிழன்பன்
12. நினைவுகளில் பாவேந்தர் - கவிஞர் பொன்னடியான்
13. எங்கள் நினைவில் புரட்சிக் கவிஞர் - கவிஞர் பொன்னடியான்
14. பாவேந்தருடன் பயின்ற நாள்கள் - பாவலர் மணி சித்தன்
15. பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா மலர் 1991 - பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி
16. பாரதி மலர் 1987 - கோவை
17. பாரதிதாசன் இதழ்ப் பணிகள் - முனைவர் மா. அண்ணாதுரை
18. பாரதிதாசன் - உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
19. Bharathidasan Critical Perspectives - Madurai Kamaraj University
20. An appreciation - That kiss most unexpected - M.S. Venkatachalam
21. பாரதிதாசன் பார்வையில் பாரதி - முனைவர் ச.சு. இளங்கோ
22. பாரதிதாசன் நாடகங்கள் ஓர் ஆய்வு - முனைவர் ச.சு. இளங்கோ
23. பாரதிதாசன் திரைப்பாடல்கள் - வாமனன்
24. பாரதியைப் பற்றி நண்பர்கள் - பத்மநாபன்
25. கவிஞரும் காதலும் - பேராசிரியர் இராமநாதன் கரந்தை
26. பாவேந்தர் பாரதிதாசன் பழம் புதுப் பாடல்கள் - முனைவர் இரா. இளவரசு
27. பாவேந்தரின் இசைத்தமிழ் - முனைவர் இரா. திருமுருகன்
28. பாரதிதாசன் ஒரு கல்வியாளர் - புலவர் விருத்தாம்பிகை அண்ணாதுரை.

**பாரதிதாசன்** (1891-1964) இளமையில் பக்திக் கவிஞராக மலர்ந்து, தேசியக் கவிஞராக வளர்ந்து, தன்மான இயக்கத்தின் புரட்சிக் கவிஞராக முதிர்ந்து, மனித நேயக் கவிஞராக நிறைவு பெற்றவர். தமிழ் வளர்ச்சி, பெண் விடுதலை, சமுதாய சீர்திருத்தம், மடமை ஒழிப்பு, பொருளாதாரச் சமன்மை ஆகிய குறிக்கோள்களுக்குத் தம் எழுத்துக்களால், ஓயாமல் குரல் கொடுத்தவர். 1929ஆம் ஆண்டிலேயே கருத்தடை பற்றிய சிந்தனைகளைக் கவிதையில் வடித்தவர். நல்ல குடும்பத்தைப் பல்கலைக் கழகம் என்றவர். தமிழால் பாரதிதாசனும், பாரதிதாசனால் தமிழும் பெருமை பெற்றது நாடறிந்த உண்மை.

**கவிஞர் முருகுசுந்தரம்** (1929) கல்லூரி மாணவராக இருந்தபோது பாரதிதாசனோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும், அவரிடம் கவிதை பயிலும் வாய்ப்பும் பெற்றவர்; தமிழாசிரியர். தமிழக அரசின் நல்லாசிரியர் விருதும், பாரதிதாசன் விருதும், தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசும் பெற்றவர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்றிலும், கவிதையியலிலும் முக்கியப் பங்கு வகிப்பவர்.

Barathidhasan *(Tamil) Rs. 25.*

ISBN 81-260-2363-5

**சாகித்திய அகாதெமி**